Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 20.00

செப். 07 - 13, 2006

# வாரமலர் தினமுரசு

SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 678







## தமிழ் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் துப்பாக்கிகள்!



புதிய தொடர் ஆரம்பம்



## தளிர் கொய்யும் தணிகைகளும், துளிர் விடும் மலையகமும்!



நட்சத்திரக் கல்யாணங்கள்



பூட்டிய அறைக்குள் சிக்கிய வன்முறைகளின் சூத்திரதாரி!



புகைப்படம் போவோம்! ரசிப்போம்!


## மூதூர் நிவாரண ஊழியர்கள் படுகொலை! முகமூடிக்குள் யார்?

## பண்டிகைகள் வீணே!

**சைவ** நெறியில் சொல்லப்பட்டுள்ள தொழுகை அநுட்டா னங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அர்த்தபுஷ்டியான செயற்பாடுகளையே கொண்டுள் என என்பது ஆய்வாளர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வரும் இக்கால கட்டத்தில், எதையும் எந்தவித அர்த்தமுமில்லாமல் 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்ற மனப்போக்கோடு மக்கள் நடந்து கொள்வ தனால் சைவ நெறியில் கூறப்பட்டுள்ள நல்ல நோக்கங்கள் சிதைந்து போகக் கூடிய நிலைதான் இன்று காணப்பட்டுவருகின்றது என்பதும் ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதும், அதனால் நல் உண்மைக் கருத்துகள் வெளிப்பட்டுவருவதும் ஒரு நல்ல முயற்சி என்பதைப் பலரும் வரவேற்றிருக் கிறார்கள் என்பது மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்திதான். ஆயினும், ஒருசில ஆதாரங்களை இங்கு குறிப்பிட வேண்டும். தைப் பொங்கல் பண்டிகையை எடுத்துக்கொண்டால், உழவர்கள் பயிரிட்டு வாழ்பவர்கள். அவர்களுக்கு உறுதுணையாய் இருக்கும் சூரியனுக்கு நன்றிக்கடன் செய்வதற்காகப் பொங்கலிட்டு நன்றிக்கடனை செய்கிறார்கள். உழவரோடு சேர்ந்து உழைத்த மாட்டுக்காக மாட்டுப்பொங்கலை தொன்றுதொட்டு நடத்திவருவதாக ஒரு ஐதிகம் உண்டு. ஆனால், இன்று நடப்பது என்ன? நன்றிக்கடனுக்காக மாட்டுக்குப் பொங்கல் நடத்திவிட்டு, மறுநாளே அந்த மாட்டை இறைச்சிக் கடைக்காரருக்கு விற்றுப் பணம் பெறுவது எத்தகைய கொடுமை என்பதை உணருவார்களா? இதை உணரும்வரை இப்படியான பண்டிகைகள் வீணே!

-என். எஸ். ராஜா, தம்பலகாமம்.

## ஆன்மீகம்



## தேவனிடம் அடைக்கலம் தேடுவோம்!

**தே**வன் தம்மை இதய சுத்தியுடன் விசுவாசிப் பவர்களைத் தன் செட்டையின் கீழ் பாதுகாக்கிறார் என்று பரிசுத்த வேதாகம் சொல்கிறது. கோழி எப்படி தன் குஞ்சுகளைச் செட்டையின் கீழ் அரவணைத்து பாதுகாக்கிறதோ அது போல ஆண்டவராகிய கர்த்தர் நம்மைப் பாதுகாக்கிறார்.

அவரது செட்டையின் கீழ் அடைக்கலம் புகுந்த வர்களின் வாழ்வு பாதுகாப்பாக இருக்கும். ஆபத்துக்கள் அணுகாது.

உயிராபத்தில் இருந்து காத்து, கழுகுகளின், காகங்களின் அச்சுறுத்தல்கள் நேராமல் எவ்வளவு அக்கறையுடன் ஒரு கோழியால் தன் குஞ்சுகளை அதன் சிறகுகளின் மூலம் காப்பாற்ற முடிகிறது என்று பாருங்கள் பிரியமா னவர்களே!

இது ஒரு சாதாரண உதாரணம் - அதைவிட மேலான நம் தேவனாகிய கர்த்தர் - மகிமை பொருந்திய இரட்சகர் - நம்மையெல்லாம் வேதனை, சோதனைகளிலிருந்து பாதுகாக்கத் தமது செட்டைகளில் அடைக்கலம் தர என்றும் எப்போதும் காத்திருக்கிறார்.

வி.ஏ. மேரி அஜந்தா, ஹெந்தளை

## மரணத்தை விரும்பலாமா?

**உ**ங்களில் எவருக்கும் வாழ்க்கையில் தாளாத துன்பம் நேரிட்டால் அவர் மரணத்தை ஆசிக்க வேண்டாம். ஏனெனில், அவர் நன்நோக்க முடையவராக இருந்தால் அது அவருக்கு நன்மையை மிகைக்கச் செய்யும். அதல்லாமல் அவர் கெட்டவராக இருந்தால் அது அவரை கெட்ட செயலிலிருந்து மீட்சி பெறச் செய்யும்.

-திரு நபி (ஸல்)

ஆகவே நிச்சயமாக துன்பத்துடன் இன்பம் இருக்கிறது. - அல் குர் ஆன். 95;6)

நிச்சயமாக பொறுமையாளருடன் அல்லாஹ் இருக்கிறான். - அல் குர் ஆன் - 7; 46)

நபியே! உம்முடைய இறைவனுக்காக நீர் கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்ளும்.

- (அல் குர் ஆன் - 74;7) (ஹுறத்துல் ஷர்ஹ்)

-முஹம்மது ஹஸனி கல்முனை -7

## கவிதைப் போட்டி இல.675




பரிசுக்குரிய கவிதை

### சின்னம்

உடல் எங்கும் எனக்குக்
குண்டுகளால் படு காயச்
சின்னம். அக்
குண்டு போட்ட பாவிக்கு
இன்று
பதவிச் சின்னம்.

-கே. இந்திரன்,
சந்திவெளி

## கவிதைப் போட்டி இல.678



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 12.09.2006.

கவிதைப் போட்டி இல.678
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### காயம்

ஆண்டாண்டு காலங்கள்
சென்றாலும்
யுத்தம் தந்த தழும்பு
ஆறாது - என்றும்
மனம் விட்டு மாறாது!

-கமால்தீன் அல்.ஆஸாத்,
ஏறாவூர் - 06.

### தாக்கியது என்ன?

தரணியில் வந்து உதித்து
தளராத நடை போட்டு வந்த
வேளையில், தளிர் போன்ற
உன் மேனியைத் தாக்கியதுதான்
விடுதலையின் விவேகமா?

-கா.சரஸ்வதி,
ஆரையம்பதி - 03.

### மனிதாபிமானம்


தன்னுடைய பலத்தைக் காட்ட
சிறு பிள்ளைதான் கிடைத்ததா
பாவிகளுக்கு!
துப்பாக்கி தெரியாத மழலைக்கு
மனிதாபிமானமற்ற கொடூரமா?

-எம்.எஸ்.றமீன்பாஸி,
வாழைச்சேனை - 04.

### அறியாமை

ஒரு புறம் உயிரிழப்பு
மறுபுறம் உடைமையிழப்பு
தப்பிப் பிழைத்தும் சிலர்
தத்தளிப்பு - இந்தப்
பாலகன் நிலையோ பரிதவிப்பு
பார்ப்பார் யார்க்கும்
மனம் கொதிப்பு!

-ஏ.ஆர்.எம்.நதார்,
ஜின்னாநகர்.



### யுத்தம் தந்த முத்தம்

பிஞ்சான என்
நெஞ்சில்
உள்ளது வெறும்
கட்டுக்கள்
அல்ல
யுத்தம் எனக்
களித்த முத்தம்.

-கே.புவனேந்திரன்,
கொழும்பு - 15.

### கொடூரம்

தொட்டிலில் தாலாட்ட
வேண்டிய பிஞ்சுக்கு
கட்டிலில் சத்திரசிகிச்சை
நெருப்பை உமிழும்
கொடூர இனவெறியால்!

-அ.சந்தியாகோ,
கண்டி.

### எம் உயிர் எதற்கு?

கொசு கடித்தாலும்
கதறும் வயதில்
துப்பாக்கியின்
வேட்டுக்கள் படும்
துர்ப்பாக்கியம்.

-அஜ்ஹ், எம்.ஜே.,
சீனக்குடா.

### வ(நா)டு

நாடு கேட்டவர்களின்
நயவஞ்சகத்தினால்...
பாலகன் - நான்
பரிதவிக்கின்றேன் - பாரினிலே
வடுக்களின் வட்டத்தில்..!

-செல்வன்அ.ரவி,
மட்டக்களப்பு.

# வாசகர் சாலை

### புதிய அம்சங்கள்

**தி**னமுரசு பத்திரிகையின் ஒவ்வொரு அம்சமும் தித்திக்கின்றன. இவற்றில் தற்போது நீங்கள் அறிமுகப்படுத்தியுள்ள இன்னொருவர் பார்வையில், ஊடகப் பார்வை என்பனவும் இன்னொருவர் பார்வை பகுதி மூலம் இன்னொரு பத்திரிகையையும் தரிசிக்கச் செய்வதற்குரிய சரியான தகவல்களைத் தருவதும் தினமுரசுக்குரிய தனித்துவமே. இந்தப் பகுதியில் எழுதும் எழுத்தாளரின் தமிழ், ஆங்கிலப் புலமையினை நான் பாராட்டுகிறேன்.

-யோ.ஜெயன்,
கொழும்பு - 15.

### அம்பலமாக்கும் அதிரடியார்!

அரசியல் அரங்கில் நடக்கும் அந்தரங்கமான சமாச்சாரங்களை அம்பலத்துக் கொண்டு வந்து, ஒரு சில அரசியல்வாதிகளின் முகத்திரையைக் கிழித்துக்காட்டும் அதிரடி ஐயாத்துரையின் துணிச்சலைப் பாராட்டுகிறேன்.

அசத்தலான புகைப்படங்களுடன் அதிசயமான செய்திகளைத் தாங்கிவரும் தினமுரசு வாரமலருக்கு எனது வாழ்த்துக்கள்.

ஹஸானி
-புதிய வீதி,
கல்முனை - 07.

### தினமுரசே நன்றி உனக்கு

இவன் கவிமரம் தளிர்விட
விளை நிலமானாய்...
கிளைகளாக விரிந்த பலக்
கவியாக்கங்கள் புதைத்தாய்
அன்பனின் நண்பனாக
நடுநிலை பேணி வந்தாய்
உண்மைக்கும் நேர்மைக்கும்
ஊன்று கோலானாய்
எதிர்ப்புக்கள் பல தாண்டி
சாதனைப் புரிந்தாய்
சிகரமே நீ ஒரு சிங்கமே
இவன் வளர்ச்சிக்கும்
அளப்பரிய சேவை செய்(தா)யே!
முரசே உனக்கு எனது கனிவான
நன்றியுடன் நீடுழி நீ
நிலைப்பெற வாழ்த்துகிறேன்!!

-ஏ.ஆர்.எம்.நதார்,
ஜின்னாநகர்.

### வெளிவரும் உண்மைகள்

அண்மையில் மூதூர்
முஸ்லிம்களை இலக்கு
வைத்து நடத்தப்பட்ட
தாக்குதல்களை ஊடகங்கள்
பக்கச்சார்பாக எழுதி சில
உண்மைகளை மூடி மறைத்து
விட்டன. ஆனால் கந்தளாயில்
அழுகுரல்கள் என்ற கட்டுரை
மூலம் அங்கு நடத்தப்பட்ட
கொடூரங்ளை வெளிச்சம்
போட்டுக்காட்டிய முரசின்
பணிக்கு எனது பாராட்டுக்கும்
நன்றிக்கும் உரித்தாகட்டும்.

-ஏ.எச்.நௌபர்,
கிண்ணியா

# உங்கள் பக்கம்

## இலவச மருத்துவ முகாம்

**நு**வரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த வலப்பனை தேர்தல் தொகுதியில் அமைந்துள்ளது அல்மா குறூப் வைத்தியசாலை. இத்தோட்ட வைத்தியசாலையானது, கஷ்டப்புற வைத்தியசாலைகளில் ஒன்றாகும். இப்பகுதிகளில் வாழுகின்ற மக்களின் கஷ்டங்களை நன்கு அறிந்த மனித நேயமிக்க சில நபர்களால் 2006.03.14 அன்று போயா தினத்தில் அல்மா தோட்ட வைத்தியசாலையில் ஓர் இலவச மருத்துவ சிகிச்சை முகாம் நடத்தப்பட்டது. லயன்ஸ் கழகம் முகத்துவாரம் தெற்கு 306 பி1 அனுசரணையுடன், இணை அனுசரணையாக சகல பரிசுத்தவான்களின் ஆலய நலன்புரி சங்கத்தால் நடத்தப்பட்டது. இம் மருத்துவ சிகிச்சை முகாமில் சுமார் 300க்கும் மேற்பட்ட நோயாளர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அவர்களுக்கு இலவசமாக மருந்துகள் வழங்கப்பட்டது. அங்கு சமுகமளித்திருந்த தோட்ட அதிகாரியான உபாலி ஜயலத், வைத்தியசாலை பொறுப்பாளர் சுமித்ரா தேவி, பிள்ளை பராமரிப்பு நிலைய சேவையாளர்கள் அனைவரும் அங்கு வந்திருந்த நோயாளர்களைக் கவனித்து அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்து உதவி புரிந்தார்கள். அங்கு வந்திருந்த வைத்திய அதிகாரிகளால் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. இதுவரை காலமாக இவ்வாறான மருத்துவ முகாம் நகர்புற வைத்தியசாலைகளிலேயே நடைபெற்று வந்தன. ஆனால் அன்று இவ் வைத்தியசாலையில் இம் முகாம் நடைபெற்றதானது மிகவும் வரவேற்கக் கூடியதொரு விடயமாகும். நடந்து முடிந்த மருத்துவச் சிகிச்சை முகாம் இப்பகுதி மக்களுக்கு மிகவும் பிரயோசனமாகவும், ஆசீர்வாதமாகவும் இருந்தன. இங்கு விசேஷமாகச் சுட்டிக்காட்டப்பட வேண்டிய மற்றுமோர் விடயம் என்னவென்றால், பல்வேறுபட்ட பிரச்சினைகள், கவலைகள் எதிர்பார்ப்புகளோடு வந்திருந்த மக்களுக்கு திரு.எம்.பாலகிருஷ்ணன் அவர்களால் நல்ல ஆலோசனைகள் வழங்கப்பட்டது. அருட் தந்தை டி.கே.பாலகிருஷ்ணன் அவர்களால் விசேஷ ஜெபம் நடத்தப்பட்டது. இது மக்களுக்கு மிகவும் மனமகிழ்ச்சியைத் தரக்கூடியதாக இருந்தது. இவ்வாறான இலவச மருத்துவ சிகிச்சை முகாம்களை இனிவரும் காலங்களிலும் நடத்தினால் இப்பகுதி மக்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என இப்பகுதி மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கின்றனர்.

-ஆர்.பாலசந்திரன், அல்மா சீட்டன், கந்தப்பொல.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# புதுக்குடியிருப்பு விமானத் தாக்குதல்: காயமுற்ற மூன்று மாணவிகளின் பெற்றோர்கள் வன்னியில் கைது!

புதுக்குடியிருப்பு, வள்ளிப்புனம் விமானக் குண்டுவீச்சில் காயங்களுக்கு இலக்காகி கண்டி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் மூன்று மாணவிகளின் நெருங்கிய குடும்ப அங்கத்தவர்கள் சிலர் புலிகளால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத் தப்பட்டுள்ளதாக வன்னித் தகவல்கள் கூறு கின்றன. மேற்படி புலி முகாம் மீது ஆகஸ்ட் மாதம் 14ஆம் திகதி காலை விமானப் படை விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் நடத்தின. இதில் 61 மாணவிகள் கொல்லப் பட்டதோடு, 152 மாணவிகள் காயமுற்றனர். கண்டி ஆஸ்பத்திரிக்கு செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையோடு வவுனியாவிலி ருந்து கூட்டிவரப்பட்ட மாணவிகள் ஊடகங் களுக்குத் தெரிவித்த கருத்துகளையடுத்தே நெருங்கிய உறவினர்களைப் புலிகள் விசார ணைக்கென அழைத்துச் சென்றிருக் கிறார்கள். ஸ்ரீபதி கஸ்தூரி (வயது 18),


ஸ்ரீபதி கஸ்தூரி

தயாளினி தம்பிமுத்து (வயது 20), சுனேத்ரா பாலசிங்கம் (வயது 19) என்ற மூன்று உயர் தர வகுப்பு மாணவிகள் தாம் புலிகளால் பயிற்சிக்கெனக் கடந்த ஆகஸ்ட் பத்தாம் திகதி வற்புறுத்தி அழைத்துச் செல்லப் பட்டதாகத் தெரிவித்த கருத்துகள் இலத்திரனியல், அச்சு ஊடகங் களிலும் வெளிவந்தன. தாம் ஆயுதப் பயிற்சிக்கென்றே அழைத்துச் செல் லப்பட்டதாகவும், அது தற்காப்புப் பயிற்சியென்றே தமக்குக் கூறப் பட்டதாகவும் தெரிவித்திருந்தனர். மயூரன், அருள் மாஸ்டர், வெண் ணிலா, கலையரசி அக்கா ஆகி யோர் தமக்கு ஆயுதப் பயிற்சியளித் ததாகவும் இவர்கள் தெரிவித்த கருத்தே புலிகளை ஆத்திரப் படுத்தியிருக்கிறது. குண்டுவீச்சுக்கு இலக்கான இடம் அநாதைச் சிறுமி களின் வாழ்விடமென்று புலிகள் முதலில் கூறியிருந்தனர். பயிற்சிக்கு வரா விட்டால் கல்வியைத் தொடர அனுமதிக்கப் படமாட்டோம் என்று கூறியே மயூரன் என்ற புலி உறுப்பினர் தம்மை அழைத்துச் சென்ற தாக மாணவிகள் தெரிவித்துள்ளனர்.

# அதிகாரப் பகிர்வுக்கான பொது இணக்கப்பாட்டை பெறும் முயற்சியில் அரசு தீவிரம்

இந்திய அரசாங்கத்தினதும் சர்வதேச சமூகத்தினதும் அழுத்தங்களுக்கிணங்க இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சிகள் வெற்றிபெறலாமென்று அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்ப தற்கு முன்னோடியாக தேசிய அரசாங்கம் ஒன்றினை அமைக்கும் முயற்சியில் ஜனாதி பதி ஈடுபட்டுள்ளார். கடும்போக்கு நிலைப் பாட்டை ஜே.வி.பி. எடுத்திருந்தாலும் அவர் களையும், பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சியையும் உள்வாங்கும் நோக்கோடு ஜனாதிபதி இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளார். பிரிட்டனுக்கு ஜனாதிபதி மேற்கொண்ட திடீர் விஜயமும், தனிப்பட்ட விஜயமென்று கூறி இந்தியாவுக்கு ரணில் விக்கிரமசிங்க மேற் கொண்ட விஜயமும் இந்நோக்கத்திற்குப் பங்களிக்குமென்று அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதற்கிடையில் இனப்பிரச் சினைத் தீர்வு தொடர்பாக சுதந்திரக் கட்சி தயாரித்திருக்கும் திட்ட வரைவு, அதிகாரப் பகிர்வு யோசனைகளை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், விரைவில் அது கட்சியின் மத்திய கமிட்டிக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரத்தைப் பெறுமென் றும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

# கூட்டமைப்பு எம்.பி க்களின் புதுடில்லி விஜயம் வெற்றியளிக்குமா?

இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கை சந்தித்து, இலங்கைப் படையினர் யுத்தத்தை நிறுத்த வேண்டுமென்று கோரும் நோக்கிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தூதுக் குழு புதுடில்லி சென்றுள்ளதாக சம்பந்தன் எம்.பி. புதுடில்லியில் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். ஆனால் மன்மோகன் சிங்கிற்கு இவர்களைச் சந்திப்பதற்கு நேரத்தை ஒதுக்கக்கூடிய சாத்தியம் இருப் பதாகத் தெரியவில்லையென்று பிரதமர் அலுவலக வட்டா ரங்கள் கூறுகின்றன. திருமலைத் துறைமுகத்துக்கு அச் சுறுத்தலாக விளங்கிய சம்பூரை இராணுவம் கைப்பற் றியதையடுத்து யுத்த நிறுத்தத்தைக் கோரி தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் குழு புதுடில்லி சென்றுள்ளது.

# தமிழர் புனர்வாழ்வுக் கழக நிதி முடக்கலை நீக்கும் முயற்சிகள் தீவிரம்.

சட்டமா அதிபர் தாக்கல் செய்த மனுவுக் கிணங்க கொழும்பு மாஜிஸ்திரேட் நீதி மன்றம், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வங்கிக் கணக்குளை மேலும் ஆறு மாதங் களுக்கு முடக்கி வைத்திருக்கிறது. இதனை நீக்குவதற்கு நீதிமன்ற நடவடிக்கை உட்படச் சகல முயற்சிகளையும் மேற்கொள்வோமெ ன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முக்கிய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து கிடைத்த இரகசியத் தகவல்களையடுத்தும் இலங்கை மத்திய வங்கியின் புலனாய்வுப் பிரிவு நடத்திய விசாரணைகளையடுத்துமே தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் நிதிகள் முடக்கப் பட்டதாக மத்திய வங்கி அதிகாரியொருவர் தெரிவித்தார். இலங்கையிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மூன்று முக்கிய உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டதைய டுத்து அம்பலமாகிய பல பயங்கரவாத நட வடிக்கைகள் தொடர்பான செயற்பாடுகளும் இதற்குக் காரணமாக அமைந்திருக்கின்றன என்றும் அவர் சொன்னார்.

மத்திய வங்கியின் உத்தரவையடுத்து செலான் வங்கி, கொமர்ஷல் வங்கி, இலங்கை வங்கி, ஹற்றன் நெஷனல் வங்கி, ஸ்டாண்டர்ட் சார்ட்டட் வங்கி ஆகிய வங்கிக ளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பேரில் வைப்புச் செய்யப்பட்டிருந்த அனைத்து வங்கிக் கணக்குகளும் முடக்கப்பட்டிருக் கின்றன. கடந்த 29ஆம் திகதி இதற்கான அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாக சம்பந் தப்பட்ட வங்கிகள் புனர்வாழ்வுக் கழகத்திற்கு அறிவித்துள்ளன. பயங்கரவாதத்திற்கு உதவும் அமைப்புகளின் நிதிகளை முடக்கு வது தொடர்பான ஐக்கிய நாடுகள் சபைத் தீர்மானத்தில் இலங்கையும் கைச்சாத்திட் டிருப்பதால், அதற்கமையவே இந்த நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி அதிகாரி மேலும் தெரிவித்தார்.

பிரிட்டனில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தின் நடவடிக்கைககள் குறித்து விசார ணைகள் நடத்திய பிரிட்டிஷ் தர்மகர்த்தா ஆணையாளர் அலுவலகம் அங்கிருந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வங்கிக் கணக்குகளை முடக்கியமை குறிப்பிடத் தக்கது. அண்மையில் கனடாவில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மூன்று அலுவ லகங்கள் சோதனையிடப்பட்டபோது பல முக்கிய ஆவணங்களும் கைப்பற்றப்பட்டிருந் தன. அங்கிருந்த கணனிகளில் ஆயுத வியாபாரிகளின் பெயர் விபரப் பட்டியல்கள் காணப்பட்டதாகவும் கனடியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவில் புலிகளுக் காக ஆயுதங்கள் வாங்க முனைந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 13 தமிழர்களைக் கைது செய்த மத்திய சமஷ்டிப் புலனாய்வுப் பிரிவினர் நியூயோர்க்கிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அலுவலகத்தை சோதனையிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் பல்வேறு வங்கிகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வைப்புச் செய்திருந்த ஏழுகோடி எண்பது இலட்சம் ரூபா முடக்கப் பட்டுள்ளது. கிளி நொச்சியிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் வைப்புச் செய்யப் பட்டிருக்கும் இரண்டு கோடி ரூபா முடக்கப் பட்டிருப்பதாகவும் வங்கி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நியூயோர்க் நீதிமன்றத்தில் அமெரிக்க மத்திய சமஷ்டிப் புலனாய்வுப் பிரிவு தாக்கல் செய்திருக்கும் குற்றப் பத்திரத்தோடு, புலிகளுக்கு நிதியுதவி வழங்குகின்ற உலகளாவிய நடவடிக்கைகளில் அவுஸ் திரேலியாவில் வாழும் தமிழர்கள் சிலர் பெரும் பங்களித்திருப்பதாக அவுஸ்திரேலி யாவிலிருந்து வெளியாகும் "த ஒஸ்ரேலியன் என்ற ஆங்கிலப் பத்திரிகை தெரிவித்துள்ளது. இதற்கிடையில் இலங்கையில் தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களின் நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து வரும் பாராளுமன்றத் தெரிவுக் கமிட்டி, இங்குள்ள 256 தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள் சுமார் 4,000 கோடி ரூபாவை சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் நிவாரணங்களுக்கென சேகரித்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறது.

சேகரிக்கப்பட்டிருக்கும் இந்த 4,000 கோடி ரூபாவில் 2,800 கோடி ரூபாவை 30 பிரதான தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள் சேகரித்திருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது. இதில் பெருந்தொகையான பணம் துஷ்பிர யோகம் செய்யப்பட்டிருப்பதாகவும் பாராளு மன்றத் தெரிவுக் கமிட்டியின் தலைவர் விஜித ஹேரத் தெரிவித்திருக்கிறார். நிதி மோசடி களில் ஈடுபட்டதாக நிரூபிக்கப்படும் தன்னார் வத் தொண்டர் நிறுவனங்களுக்கு 750 ரூபாவையே அபராதமாக விதிக்க முடியு மென்று தன்னார்வத் தொண்டர் நிறுவனங் களின் பதிவு மற்றும் மேற்பார்வை தொடர் பான 1980ஆம் ஆண்டின் 31ஆவது சட்ட விதி கூறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் 'சயனைட்'டுக்குத் தடை

ராஜீவ் காந்தி படுகொலையில் சம்பந்தப் பட்ட ஒற்றைக் கண்ணன் சிவராஜன், சுபா ஆகியோர்களின் தற்கொலைகளை மைய மாக வைத்து தயாரிக்கப்பட்ட "சயனைட்" என்ற கன்னடப் படத்தின் தமிழ் டப்பிங் படத்தை தமிழகத்தில் திரையிடக் கூடா தெனக் கோரி தமிழக நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்படவிருக்கிறது. தமிழக காங்கிரஸ் வட்டாரங்கள் இது தொடர்பாக சட்ட வல்லுநர்களைக் கலந்தாலோசித்து வரு கின்றனர் ராஜீவ் கொலையையடுத்து தமிழகத்திலிருந்து தப்பி பெங்களூர் சென்ற சிவராஜனும், சுபாவும் மத்திய புலனாய்வுப் பிரிவினரால் அவர்கள் தங்கியிருந்த வீடு முற்றுகையிடப்பட்டபோது தற்கொலை செய்து கொண்டனர். "சயனைட்" திரைப் படம் தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்டு அநேகமாக அடுத்த மாதம் தமிழகத்தில் வெளியிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. தமிழகத்தின் ஸ்ரீபெரம் புதூர் பகுதியில் ராஜீவ் காந்தி கொல்லப் பட்டபோது அவருக்கு அண்மையில் நின்றி ருந்த தமிழ் நாட்டுக் காங்கிரஸின் முக்கியஸ் தரான ஜெயந்தி நடராஜனுடன் சம்பந்தப் பட்டவர்கள் இதுதொடர்பாக ஆராய்ந்து வருவதாக தமிழக வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

ராஜீவ் கொலை தமிழக மக்களின் உணர்வுகளைப் பெரிதும் பாதித்திருப்பதாலும் கொலைகாரப் புலி இயக்கத்துக்குச் சார்பாக தமிழகத்தில் சிலர் செயற்பட்டு வருவதாலும் இந்தப் படத்துக்குத் தடை உத்தரவு வாங்கு வதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. சிவராஜனும், சுபாவும் தங்குவதற்கு இட மளித்த ரங்கநாத் என்பவர் ஒன்பதாண்டு கால சிறைத்தண்டனை அனுபவித்து விடுதலை யாகியிருக்கிறார். ராஜீவ் கொலையை மையமாக வைத்து டைரக்டர் செல்வமணி தயாரித்த "குற்றப் பத்திரிகை" என்ற தமிழ்த் திரைப்படம் கடந்த பத்து வருடமாகத் திரையிடப்படாமல் இழுபறிப்பட்டு வருகிறது. இந்த விவகாரமும் தமிழக காங்கிரஸ் காரர்கள் தாக்கல் செய்யவிருக்கும் நீதிமன்ற மனுவில் சுட்டிக்காட்டப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# விலைவாசி உயர்வைச் சமாளிக்க நடவடிக்கை வேண்டும்

சர்வதேசச் சந்தையில் எரிபொருட்களின் விலை அதிகரிப்பிற்கிணங்க இவ்வருடத்தில் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகிய வற்றின் விலைகள் நான்காவது தடவையாக அதிகரிக்கப்பட்டுள்ளன. மின்சாரக் கட்டணம் இம்மாதத்திலிருந்து அதிகரிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, போக்குவரத்துக் கட்டணமும் அதிகரிக்கப்படவுள்ளது. இதனால் மக்களின் அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவு உயர்ச் சிப் பளுவை நீக்குவதற்கு அரசாங்கம் காத்தி ரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டு மென்று அரசியல் ஆய்வாளர் மதிவண்ணன் தெரிவித்தார். கடந்த 31ஆம் திகதி விலை களை அதிகரித்த லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலைக் குச் சமனாக தமது விலையை ஒரு கிழமைக் குள் குறைத்துக் கொண்டமை இதற்கு நல்ல உதாரணமென்றும் அவர் சொன்னார்.

# வைகோ மீதான புகார்கள் குறித்து விசாரணை நடத்துமாறு கோரிக்கை

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோவை கைது செய்து விசார ணைக்குட்படுத்துமாறு இந்திய மத்திய பாதுகாப்புத் துறைக்கு தமிழகத்திலிருந்து புகார்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. புலிகள் இயக்கத்திடமிருந்து 82 கோடி ரூபாவை வைகோ பெற்றிருக்கிறார் என்று வெளிவந்த தகவல்களையடுத்து ஆயுதக் கொள்வனவு, போதைவஸ்துக் கடத்தல் தொடர்பாகவும் இவருக்குச் சம்பந்தம் இருக்கலாமென்று சந் தேகம் கிளப்பப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டுக் கரையோரப் பகுதிகளிலிருந்து மன்னாரி லுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி களுக்கு போதைவஸ்துகள் கடத்தப்படுவதாக தமிழக போதைவஸ்து அதிகாரிகள் தெரி வித்த குற்றச்சாட்டுக்களே புதிய சந்தேகங் களைக் கிளப்பியிருக்கின்றன. வெறுமனே ஈழத்தமிழர் பாதுகாப்புப் பேரவை என்ற லேபல் அமைப்பை உருவாக்கி அதன் மூலம் புலிகளுக்குச் சார்பாகவும், இலங்கை அர சுக்கு எதிராகவும் சிறுசிறு கூட்டங்களை


வைகோ

நடத்துவதற்குப் பெருந்தொகைப் பணம் செலவாகப் போவதில்லை. புலிகளின் ஆயு தக் கொள்வனவு விவகாரங்களுக்கும், வைகோவுக்கும் சம்பந்தம் இருக்கலா மென்று கூறப்படும் புகார்கள் பற்றிய விசார ணைகள் முடுக்கி விடப்படுமெனத் தெரிய வருகிறது.

# 'றோ' பற்றிய பாக். தூதுவரின் கருத்து மூன்று நாடுகளில் ஏற்படுத்தியிருக்கும் சர்ச்சை!

பாகிஸ்தானிய முன்னாள் உயர் ஸ்தானிகரைக் குறிவைத்து கொழும்பு கொள்ளுப்பிட்டியில் குண்டுத்தாக்குதல் நடத்தியவர்கள் இந்தியாவின் 'றோ' அமைப்பினரே என்று அவர் தெரிவித்தி ருக்கும் கருத்து இஸ்லாமாபாத்திலும், புது டில்லியிலும், கொழும்பிலும் பெரும்சர்ச்சை களை ஏற்படுத்தியிருக்கின்றது. இத்தாக்கு தலை நடத்தியவர்கள் புலிகள்தானென்று இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்தபோது, கொழும்பிலேயே தங்கியி ருந்த பாகிஸ்தானிய உயர் ஸ்தானிகர் இதற்கு ஏன் மறுப்புத் தெரிவிக்கவில்லை யென்று கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் பஸீர் வலி முஹமட் முன்னாள் இராணுவ அதி



காரி என் பது வேறு விடயம். அவர் இலங்கையில் உயர்ஸ்தானிகராக நியமிக்கப் பட்டபோது எதிர்ப்புகள் எழுந்ததும் உண்மை. ஆனால் இதுகாலவரை அவர்மீது எவ்விதத் தாக்குதலையும் நடத்த முனையாத 'றோ' அமைப்பு, அவர் பதவி விலகிச் செல்லும் வேளையில் தாக்குதல் நடத்தவேண்டிய தேவை என்ன வென்று இராஜதந்திர வட்டாரங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

இஸ்லாமாபாத் சஞ்சிகை ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியிலேயே மேற்கண்ட வாறு குற்றஞ் சாட்டியிருக்கிறார். பாகிஸ் தானிய - இந்திய உறவுகளை சீர் செய்யும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இவ்வாறான கருத்துக்கள் அதற்குக் குந்தகமாக அமையலாமென்று பாகிஸ்தானிய ஆளுந்தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இச்சம்பவம் தொடர்பாக இலங்கை உத்தியோகபூர்வமாக அறிவித்த பின்னரும் அதற்கு ஊறு விளைவிக்கும் விதத்தில் பாகிஸ்தானிய முன்னாள் உயர் ஸ்தானிகர் கருத்துத் தெரிவித்திருப்பது கவலை அளிக்கிறது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# சோக்கிரடீஸ் மீதான குற்றச்சாட்டு

2004ஆம் ஆண்டு கருணா அணியை, பிரபாகரனின் புலிகள் அணி வெருகல் ஆற்றிற்கு அண்மையில் வைத்து தாக்கிய பின்னர் புலிகள் இயக்கத்தை அமெரிக்காவும் பயங்கரவாதப் பட்டியலிலிருந்து நீக்குவதற் கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக இந்தியாவிலிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன. தற்போது அமெரிக்காவில் கைது செய்யப்பட்டிருக்கும் தமிழக வாசியான நாச்சிமுத்து சோக்கிரடீஸ் என்பவர் 2004ஆம் ஆண்டு மே, ஜூன் மாதங்களில் இதற்கான முயற்சிகளை அமெரிக்காவில் மேற்கொண்டா ரென்று அமெரிக்கப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பிரபாகரனின் உத்தரவின் பேரிலேயே இவர் நியூயோர்க் சென்றிருந்தா ரென்றும், அமெரிக்க அதிகாரிகளுக்கு லஞ்சம் வழங்க முனைந்தாரென்றும் அத்தகவல்கள் தெரிவித்தன.

# தன்னார்வத் தொண்டர் நிறுவன ஊழியர்களுக்கு வசதிகள்

இலங்கையில் பணிபுரியும் சர்வதேச தொண்டர் நிறுவன ஊழியர்களுக்கும், உள் ளூர் தொண்டர் நிறுவன ஊழியர்களுக்கும் எவ்விதத் தடைகளுமின்றிப் பணிபுரிவதற்காக வேலை அனுமதிப் பத்திரம் வழங்குவது பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது. அண்மையில் வடக்கில் பிறப்பிக்கப்பட்ட ஊடரங்குச் சட்டம் காரணமாகவும், கிழக்கில் எழுந்த மோதல் நிலை காரணமாகவும் தன்னார்வத் தொண்டர் நிறுவன ஊழியர்கள் சேவையாற்ற முடியாத நிலையேற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**தினமுரசு வாரமலர்,**
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk


# முரசம்

## போர் தரும் வெற்றிகள் பூரிப்புக் குரியவையல்ல

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

**சம்பூர்** படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் புலிகள் அதை மென்று விழுங்கி ஏற்றுக் கொள்கின்ற நிலையில் உள்ளனர். புலிகளுக்கு இதுவொரு இராணுவப் பின்னடைவாகும். போர் நிறுத்த ஒப்பந்தத்துக்குப் பின்னர். தத்தமது கட்டுப் பாட்டுப் பகுதிகளென இருதரப்பும் வரித்துக் கொண்டனர். இதனடிப்படையில் புலிகள் அரச கட்டுப் பாட்டுப் பகுதிகளுக்குள் அரசியல் பணிக்காக ஆயுத மின்றி வரமுடியும். ஆனால் படையினரோ பொலிஸாரோ கூட ஆயுதமின்றி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பிரவேசிக்க முடியாது. இந்த முரண்பாடான சரத்துக் களை ஒரு புறம் தள்ளிவிட்டு மாவிலாறில் தண்ணீரைத் திறப்பதற்காகவும், சம்பூரில் ஆட்டிலெறி தாக்குதல் அச்சுறுத்தலை தடுப்பதற்காகவும் படையினர் புலிகளின் கடும் தாக்குதல்களுக்கு மத்தியில் அப்பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இந்த வெற்றி அரசாங்கத்துக்கு தென் இலங் கையில் தமது அரசியல் நகர்வை முன்னெடுப்பதற்கும், பலவீனமான நிலையில் தாம் இல்லையென்பதைக் காட்டிக் கொள்வதற்கும் பெரிதும் உதவியுள்ளது. புலிகளைப் பொறுத்தவரை கருணாவின் பிரிவு பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்று புலிக ளுக்கு விசுவாசமான தரப்புகள் கூறுகின்றன. கடலைப் பொறுத்தவரை அச்சுத்தல் விடுக்கக்கூடிய நிலையே தவிர தடுக்கும் வலுக்கூட புலிகளிடம் இல்லை யென்பதை புலிகளின் அண்மையக் கடல்ச் சமர் புலப் படுத்தியுள்ளது. கிழக்கில் தொடங்கிய தாக்குதல் களின் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்கத்தோடு புலிகள் பல முனைகளிலும் ஊடுருவித் தாக்குதல்களைத் தொடுத்தனர். எனினும் எதிர்த்து நிற்கமுடியாமல் பாரிய இழப்புக்களைச் சந்தித்ததோடு பின்வாங்கியும் சென்றனர். இப்படி அண்மையத் தாக்குதல்கள் படைத்தரப்புக்கு இழப்புக்களுடன் கூடிய வெற்றிகளைக் கொடுத்துள்ளது என்பதை மறுக்க முடியாது.

புலிகளைப் பொறுத்தவரை ஏற்பட்ட பின்னடை வுகளை சரி செய்யும் விதமாக இன்னொரு புதிய தளத் தில் புதிய தாக்குதலை நடத்துவார்கள் என்ற எதிர் பார்ப்பு அரசாங்கத்துக்கு இருக்கவே செய்கிறது. அது எங்கே எப்படி எப்போது என்ற ஊகங்களை இப்போது கூறுவது தேவையற்ற பதற்றத்துக்கே வழி சமைக்கும்.

ஆகவே சம்பூரைக் கைப்பற்றியதோடு வேட்டுச் சத்தங்கள் முடிவுக்கு வந்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. நிலைமை மோசமடைய மோசமடைய அப்பாவிப் பொது மக்கள்தான் மிகவும் துன்பங்களுக்கு உள்ளாகப் போகிறார்கள். முழுமையாகப் போர் நடந்த கடந்த ஒரு மாதகாலத்துக்குள் மட்டும் சுமார் 250000 பேர் இடம்பெயர்ந்திருக்கிறார்கள் என்று அகதிகளுக் கான ஐ.நா நிறுவனம் கூறுகின்றது. இது தவிர சுமார் 920 பொது மக்கள் கொல்லப்பட்டுமுள்ளார்கள். இதே நிலை நீடித்தால் இடப்பெயர்வுகளும், மரணங்களும் பல மடங்கு அதிகரிக்கலாமென்ற அச்சமும் தெரிவிக்கப் படுகின்றது.

எனவே போரில் ஈடுபடும் தரப்புகள் தமக்கான இழப்புக்களை மறைத்துக் கொண்டு வெற்றிகளுக் காகவும், கௌரவத்துக்காகவும் சண்டை பிடிப் பதானது மக்களுக்கு எவ்விதத்திலும் நன்மையா னதாக இருக்காது. ஆகவே மக்களைப் பாதுகாக் கவும், அநியாய உயிரிழப்புக்களை தவிர்க்கவுமாக இரு தரப்பும் தாக்குதல்களை நிறுத்தி சமாதானப் பேச்சுக் களை நடத்த வேண்டும்.

தென் இலங்கையில் தேசிய அரசாங்கம் ஒன்றுக் கான தேவை உணரப்பட்டுவரும் இந்த சந்தர்ப்பத்தை அரசு சரியாகக் கையாண்டு தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும். அதேபோல் புலிகளும் போர் மூலமாகத்தான் தீர்வு என்ற நடக்காத பல்லவியை கைவிட்டு தமிழ் மக்களின் இடப்பெயர்வுகளையும், அவலங்களையும் தொடர விடாமல் பேச்சுவார்த்தையூடாகவே இப்பிரச்சனையைத் தீர்க்க விருப்பங்கொள்ள வேண்டும்.

எனவே போரின் மூலம் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணமுடியாது என்ற யதார்த்தத்தை இரு தரப்பும் இனியாவது புரிந்து கொள்வது அனைவராலும் வரவேற்கக்கூடியதாக இருக்கும்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

நரன்

அரசு இயந்திரத்துக்கெதிராக ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கில் ஜனதா விமுக்தி பெரமுன நடத்திய ஆயுதக் கிளர்ச்சியே, சுதந்திர இலங்கையில் முதன்முதலாக வெடித்த யுத்தமாகும். 1971 ஏப்ரலில் இந்த முதல் கிளர்ச்சி மேற்கொள்ளப்பட்டது. 1988-89 காலப் பகுதியில் இரண்டாவது கிளர்ச்சி ஏற் பட்டது. இந்தக் கிளர்ச்சிகள் அறுபதாயிரத்துக்கு மேற்பட்ட சிங்கள இளைஞர், யுவதிகளைப் பலியெடுத்தன. டாக்டர் மனோராணி சரவண முத்துவின் புதல்வரான ரிச்சர்ட் டி சொய்சா உட்பட யுத்தத்தோடு சம்பந் தப்படாத பல ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டனர். தேவிஸ் குருகே போன்ற ரூபவாஹினிக் கூட்டுத்தாபன அதிகாரிகளும் ரிச்சர்ட் டி சொய்சா போன்ற மனித உரிமை போராளிகளும் கொல்லப்பட்டனர். தேவிஸ்

# தமிழ் ஊடகசியலாளர்களை அச்சுறுத்தும் துப்பாக்கிகள்




குருகே போன்ற அரச சார்பு ஊடகங்களைச் சேர்ந்தவர்களைக் கொன்றவர்கள் ஜே.வி.பியினர் என்றும், ரிச்சட் டீ சொய்சா போன்ற மனித உரிமைப் போராளிகைள் கொன்றவர்கள் அரச தரப்பினர் என்றெல்லாம் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

இலங்கையில் தமிழர் தரப்பில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது முதல், இன்றுவரையிலான சுமார் இரண்டரை தசாப்த காலப் பகுதிக்குள் சுமார் இருபத்திதைந்துக்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்களும், ஊடகப் பணியாளர்களும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். யாழ்ப்பாணம், அரியாலையைச் சேர்ந்த ஐ.சண்முகலிங்கம் என்ற நிருபரே தமிழ் போராட்ட முனையில் முதல் முதலாக பலியெடுக்கப்பட்டவரென்று வரலாறு பதிவு செய்துள்ளது. ஈழநாடு, தினகரன் ஆகிய பத்திரிகைகளின் நிருபராகப் பணியாற்றியவர் இவர். புலிகள் இயக்கத்துக்கு விரும்பத்தகாத செய்திகளை வெளியிட்டதற்காக இவர் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டார் என்பது அன்றிருந்த குற்றச்சாட்டு. அன்றிலிருந்து இன்றுவரை தமிழ் இயக்கங்களுக்கிடையில் ஏற்பட்ட சகோதரப் படுகொலைகளுக்குத் தாரைவார்க்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களின் பட்டியல் இன்று வரை நீண்டுகொண்டிருக்கின்றது. ஆயுத கலாசாரம் களைந்தெறியப்படும் வரை இப்பட்டியல் நீண்டு கொண்டேயிருக்கும். தினமுரசு பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் ரமேஷ் அற்புதராஜா (அற்புதன்), அறிவிப்பாளர் கே.எஸ்.ராஜா, செய்தியாளர் நிமல்ராஜன், ஈ.பி.டி.பியின் பிரசாரச் செயலாளரும், ஊடகவியலாளருமான பாலநடராஜா ஐயர் (சின்னபாலா), மட்டக்களப்பைச் சேர்ந்த சுயாதீன எழுத்தாளர் ஐ.நடேசன் செழியன் பேரின்பநாயகம், சுகிர்தராஜன் அன்ரன் மரியதாஸ் ஆகியோர் முக்கியமானவர்கள். வடக்குக் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாளின் பல்கலைக்கழக சகாவும், பொதுசனத் தொடர்பு அதிகாரியுமான நடேசன், புலிகளால் கைது செய்யப்பட்டு, நிபந்தனைகளின் பேரில் விடுவிக்கப்பட்டதையடுத்து, புலிச்சார்பு எழுத்தாளராகப் பரிமாற்றம் பெற்றுக்கொண்டார்.

ஊடகவியலாளர்கள் இலங்கையில் மட்டும்தான் கடத்தப்பட்டார்கள், கொல்லப்படுகிறார்கள் என்று சொல்லமுடியாது. யுத்தமும், மோதலும் நிலவும் நாடுகளில் சர்வ சாதாரணமாகவே ஊடகவிலாளர்கள் பழிவாங்கப்படுகின்றனர். இஸ்லாமிய அடிப்படைவாதக் குழுக்கள் தீவிரமாகச் செயல்படும் நாடுகளில் ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டுச் சிரச்சேதம் செய்யப்படுகிறார்கள். இரண்டாம் உலக யுத்தத் காலத்தில் செக்கோஸ்லாவியப் பத்திரிகையாளரான யூலிய்ஸ் பியூரிக், நாஸி இன வெறியர்களால் சிறைப்படுத்தப்பட்டு மரணதண்டனைக்குள்ளாக்கப்பட்டார். அவர் சிறைக்குள் இருந்து எழுதிய தூக்குமேடைக் குறிப்பு என்னும் நூல், விடுதலைக்காகப் போராடும் ஊடகவியலாளர்களுக்கு இன்றும் கூட ஆதாரபூர்வமாக விளக்கப் படுகின்றது.

ஊடகவியலாளர்களைத் தொழில்சார் ஊடகச்செயலாளர்கள், சுயாதீன எழுத்தாளர்கள் (Free lance Writters) என பிரிக்கலாம். ஊடகவியலாளர்கள் தாம் பணிபுரியும் ஊடக நிறுவனங்களின் அடிப்படைக் கொள்கைகளுக்கு விரோதமாகச் செயற்பட முடியாதென்பது எழுதப்படாத விதி. இந்த விதியை மீறினால் சந்திக்கு வர அல்லது வாய்களும், கைகளும் கட்டப்படும். ஊடக தர்மம், பத்திரிகைத் தர்மம் என்பதெல்லாம் மற்றவர்களுக்குப் போடப்படும் கட்டுப்பாடுகள் மட்டுமே. இந்த நாட்டில் கிளர்சசியை, மதக் குரோத உணர்வை, கலாச்சாரச் சீரழிவுகளை கட்டுப்படுத்துவதில் ஊடகவியலாளர்களுக்கும் கணிசமான பங்கு உண்டு. இலாபமீட்டுவதே ஊடக நிறுவன எஜமானர்களின் பிரதான குறிக்கோள் என்பதால், மலினப்படுத்தப்பட்ட செய்திகளையும், மஞ்சள் குப்பைகளையும் ஏன் பொய்களையும் கூட விற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.


யுத்தத்தின் மையக் களமாக விளங்கிய யாழ்ப்பாணத்தில் ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன. மட்டக்களப்பில் வெளியாகிக் கொண்டிருந்த ஒரேயொரு தினசரியான 'தினக்கதிர்' புலிகள் இயக்கத்தினரால் கைப்பற்றப்பட்டு ஈழநாதம், என்று புலிகளின் ஊதுகுழலாக மாற்றப்பட்டது. புலி எதிர்ப்புச் செய்திகளை அல்லது மாற்றும் கருத்துக்களைத் தாங்கிவந்த தினசரிகள் வடக்கிலும், கிழக்கிலும் அவ்வப்போது எரிக்கப்பட்டிருக்கின்றன. பத்திரிகையாளர்களுக்கு மிரட்டல்கள் விடுக்கப்படுகின்றன. எனவேதான், பெரும்பாலான தமிழ் ஊடகங்கள் விரும்பியோ, விரும்பாமலோ புலிகளுக்கு துதி பாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்ற வடக்கிலும், கிழக்கிலும் தினமுரசு வார இதழை விற்கக் கூடாதென்று விற்பனை முகவர்களுக்கு மிரட்டல்கள் விடுக்கப்பட்டிருக்கின்றன. பத்திரிகையை விற்றுக் கொண்டிருந்த நால்வர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

வன்னிக்குள் இந்தப் பத்திரிகையை எடுத்துச் செல்லக்கூடாதென்று தடை விதிக்கப்பட்டுள்ளது. மாற்றுக் கருத்துக்களை வெளியிடுபவர்களைச் சந்திக்க வேட்டுக்கள் என்றும் தயாராகக் காத்திருக்கின்றன. கருத்துக்களைக் கருத்துக்களால் சந்திக்க முடியாத நயவஞ்சகர்கள் பிஸ்டல்களால் வஞ்சம் தீர்க்கிறார்கள். இலங்கையில் கொல்லப்பட்ட அல்லது கடத்தப்பட்ட பெரும்பாலான தமிழ் ஊடகவிலாளர்கள், கருத்துக்களுக்காகவே இந்தக் கடுமையான சோதனையைச் சந்தித்திருக்கிறார்கள். இந்தப் பின்புலத்தில் தான் சூரியன் தனியார் வானொலியின் செய்தி முகாமையாளர் குருபரனின் கடத்தலையும் நாம் பார்க்க வேண்டியுள்ளது. முன்னாள் புளொட் இயக்க உறுப்பினரான குருபரன் இன்று புலி எதிர்ப்பாளரோ அல்லது அரசாங்க ஆதரவாளரோ அல்லர். அவர் கடத்தப்பட்டமைக்கும் விடுவிக்கப்பட்டமைக்கும் இலங்கையில் எந்தவொரு ஊடகவியலாளருக்கும் கிடைக்காத் மும்மொழிப் பிரச்சாரங்களும் கிடைத்திருக்கின்றன. சூரியன் குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து வானொலிச் சேவைகளும் அவர் கடத்தப்பட்டாரென்ற பிந்திய செய்திகளை ஒவ்வொரு மணித்தியாலமும் வெளியிட்டன. அன்று சூரியன் நிறுவனத்தோடு இணைந்து சகல வானொலிகளும் குருபரன் பற்றிய செய்திகளை கணிசமாக ளெியிட்டன.

கண நேரத்துக்குள் குருபரனின் பெயர் காற்றலையோடு கலந்து இலங்கையின் மூலை முடுக்கெங்கும் பரவியது. இதனால் அவர் பணியாற்றும் வானொலிக்கும் நல்ல பிரசாரம் கிடைத்தது. இலங்கையிலுள்ள சகல ஊடகங்களுமே இச்செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்தன. அவர் கடத்தப்பட்டமை தொடர்பாகப் பல்வேறு ஊடகங்கள் முரண்பாடான செய்திகளை வெளியிட்டிருந்தாலும் ஓர் உண்மை மட்டும் தொக்கி நிற்கிறது. அவர் கடத்தப்பட்டமைக்கு பின்னால் ஒரு குழு செயற்பட்டிருக்கிறது என்பதே அந்த உண்மையாகும். தம்மைக் கடத்தியவர்கள் தமது நோக்கம் நிறைவேறியதும் தம்மை விடுவித்தார்கள் என்று கூறிய குருபரன் கடத்தியவர்களின் தேவையென்ன என்பதை இதுவரை வெளியிடவில்லை. ஓர் அரசியல் தேவைக்காகவே அவர் ஆயுததாரிகளினால் கடத்தப்பட்டிருக்கிறார் என்பதை ஊகித்துக் கொள்ளமுடிகிறது. யுத்த காலப் பகுதியில் நடைபெற்ற கடத்தல் சம்பவம் என்பதால் குருபரன் ஜனரஞ்சகமாக்கப்பட்டு விட்டார். மகாராஜா தொலைக்காட்சி நிறுவனத்தில் வேலை செய்யும் தமிழ்ப் பெண் ஒருவரும் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டார். கொழும்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பொதுசனத் தொடர்பு அதிகாரி மகாகணபதிப் பிள்ளை சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். ஈ.பி.டி.பியின் முன்னால் யாழ். மாவட்ட எம்.பி. சிவதாசன் கார்க் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி மயிரிழையில் தப்பினார். மலையக மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் கடத்தப்பட்டிருக்கிறார்கள். பலத்த பாதுகாப்புப் போடப்பட்டிருக்கும் கொழும்பின் புறநகர்ப் பகுதியில் குருபரன் கடத்தப்பட்டதால், அவரைப் படையினர்தான் கடத்தியிருக்கலாம் என்று கூறும் தமிழ் ஊடகங்கள், அதனையும் விடக் கூடிய பாதுகாப்பு நிறைந்த வெள்ளவத்தையில் மகாகணபதிபிள்ளை சுட்டுக் கொல்லப் பட்டமைக்கும் சிவதாசன் கொள்ளுப்பிட்டியில் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானமைக்கும் யாரைக் காரணம் கூறப் போகிறார்கள்?

எது எப்படியிருந்தாலும் தமிழ் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப் படுகிறார்கள், கடத்தப்படுகிறார்கள் என்பது உண்மையே. யுத்தத்தின் பக்க விளைவுகள்தான் இவை. மூலவேரை அறுத்தெறியும் வரை இவ்வாறான அடாவடித்தனங்களுக்கு முற்றுப் புள்ளிகிட்டப்போவதில்லை.

## ஊரிலிருந்து....



*கடலாலை சாமான்களை கொண்டு போக விடமாட்டம் வேணுமெண்டால் பாதையாலை கொண்டு போங்கோ எண்டு பெடியல் சொல்லினம். இல்ல பாதையால அனுப்பிறதெண்டால் வரி கட்டச்சொல்லக் கூடாது அனுப்பப்படுகிற சாமான்கள் அப்படியே போய்ச்சேர வேண்டும் எண்டு அரசாங்கம் சொல்லினம். சனம் படுகிற கஷ்ட்டத்தைப் பார்க்கேக்க கடலாலையும் வேண்டாம், பாதையாலையும் வேண்டாம். ஆகாயத்தாலையாவது சாமானை அனுப்புங்கோ அப்பதான் சனம் பட்டினியால சாகாமல் காப்பாத்த முடியுமெண்டு நான் சொல்லிறன் என்னங்கோ நான் சொல்லிறது சரிதானே*

# மூதூர் நிவாரண ஊழியர்கள் படுகொலை, முகமூடிக்குள் யார்?

**மூதூர்** அக்கரைச்சேனையிலுள்ள அக்ஷன் கொண்ரோலா பாய்ம் என்ற பட்டினிக்கெதிரான பிரான்ஸிய தொண்டர் அமைப்பைச் சேர்ந்த 17 உள்நாட்டு நிவாரண ஊழியர்கள் மிலேச்சத்தனமாக கொல்லப்பட்ட சம்பவம், உலகளாவிய ரீதியில் பலத்த கண்டனங் களை எழுப்பியுள்ளது.

2004ஆம் ஆண்டு சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சுகாதாரம், உணவு, வீடமைப்புப் போன்ற அடிப்படை தேவைகளில் உதவி வந்ததே இந்த அக்ஷன் பாய்ம் அமைப்பு. ஜூலை மாதம் 20ஆம் திகதி புலிகள் தமது கட்டுப்பாட்டில் உள்ள மாவிலாறு அணைக்கட்டை மூடியதையடுத்து அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள 15ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் நீரின்றி அவஸ்தைகளைச் சந்தித்தனர். இதனால் மூதூரை உள்ளடக்கிய திருமலை மாவட்டமே எரிநெருப்பாய்த் தகித்துக் கொண்டிருந்தது. அரச படைகளுக்கும், புலிகளுக்குமிடையிலான யுத்தத்தை மாவிலாறு அணைக்கட்டுப் பிரச்சினை திறந்துவிட்டதே இக்கொந் தளிப்புக்குக் காரணமாக அமைந்திருந்தது.

மாவிலாறு பிரச்சினையையடுத்து மூதூருக்குள் புலிகள் இயக்கம் புகுந்து, தாக்குதலை ஆரம்பிப்பதற்கு முன்னரே நிவாரணப் பணியாளர்கள் திருகோணமலையிலிருந்து மூதூருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். இவர்களோடு பிரான்ஸ் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த வெளிநாட்டு அதிகாரிகள் எவரும் அனுப்பி வைக்கப் படவில்லை. அதுமட்டுமல்லாது, மோதல் தொடர்ந்த பின்னரும் அலுவலக வளாகத்திலேயே தங்கியிருக்குமாறு திருமலையிலுள்ள தலைமையகம் அவர்களை வற்புறுத்தியுள்ளது. பதவி போகலாம் என்று அஞ்சி தாமாகவே அங்கிருந்து வெளியேற ஊழியர்கள் தயங்கினர்.

நான்காம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 6.10 மணியளவில் தலைமையகத்திலிருந்து கடைசியாக ஊழியர்களோடு தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளப்பட்டுள்ளது. அதன்பின்னர் என்ன நடந்தது என்பது அந்தத் தொண்டர் நிறுவனத்துக்கு மட்டுமல்ல அனைவருக்கும் இதுவரை மூடுமந்திரமாகவே கருதப்படுகிறது. அலுவலக வளாகத்திலுள்ள கட்டிடத்திற்கு வெளியே முழங்காலில் வரிசையாக இருக்க வைத்து மிக அண்மையில் இருந்தே இவர்கள் சுடப்பட்டிருக்கிறார்கள். பெரும்பாலா



னவர்களின் தலையிலேயே சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. இவர்கள் முகம் குப்புற விழுந்த நிலையிலேயே கண்டெடுக்கப்பட்டனர். நான்காம் திகதி வெள்ளிக்கிழமை மாலை நேரம் நிவாரண ஊழியர்கள் சிலர் தமது குடும்பத்தவர்களுடன் கையடக்கத் தொலைபேசி மூலம் கதைத்திருக்கிறார்கள்.

நடைபெற்றிருப்பது இரத்தத்தை உறைய வைக்கும் மிலேச்சத்தமான படுகொலை என்பதை யாரும் மறுக்க முடியாது. தொண்டர் அமைப்பின் ரீசேட்டுக்களை அணிந்த நிலையிலேயே இந்த 17 சடலங்களும் காணப்பட்டன. இவர்களில் ஒருவர் மட்டுமே முஸ்லிம். ஏனையவர்கள் தமிழர்கள். நால்வர் பெண்கள். இவர்களில் கவிதா என்ற பெண்ணும், அவரது தந்தையான கணேஷ் என்பவரும் அடங்குவர். கவிதா சுகாதார வெளிக்கள உத்தியோகத்தராகப் பணி புரிந்து வந்தார். தந்தையாரான கணேஷ் அதே நிறுவனத்தில் சாரதியாகப் பணிபுரிந்தார். யோகராசா கோடீஸ்வரன் என்ற 31 வயது இளைஞனின் கதையும் பரிதாபமானது. இவரது சகோதரரான ஹேமச்சந்திரன் என்பவர் ஜனவரி மாதம் இரண்டாம் திகதி திருகோணமலை கடற்கரையில் வைத்து முகமூடியணிந்த நபர்களால் சுட்டுக் கொல்லப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பதினேழு பேரையும் கொன்றவர்கள் பந்தோபஸ்துப் படையினர்கள் என்றும், இது அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல் என்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரான உல்ப் ஹென்றிக்சன், பதவி விலகிச் செல்வதற்கு முன்னர் இலங்கை சமாதானச் செயலகத்துக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் குற்றம் சாட்டியுள்ளார்.

'யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினரென்ன பிரேத பரிசோதனை நிபுணர்களா' என்று காட்டமாகவே அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல கேள்வியெழுப்பியிருக்கிறார். அதாவது, பூரண விசாரணைகள் இன்றி இந்தக் குற்றச்சாட்டை எழுந்தமானமாக ஹென்றிக்சன் தெரிவித்திருக்கிறார் என்பதே அமைச்சர் ரம்புக்வெல்லயின் பதிலாக அமைந்திருக்கிறது. இப்படுகொலைகளுக்கு அரசாங்கமே பொறுப்பென்று புலிகளும் புலிகளே பொறுப்பென்று அரசாங்கமும் பரஸ்பரம் குற்றம் சாட்டி வருகின்றன. இந்த இரு தரப்புகளுக்குமே பக்கச்சார்பாக பக்கவாத்தியம் வாசிக்கும் ஊடகங்கள் தத்தமது பாணியில் குற்றம் சாட்டி வருகின்றன. 'பிணந்தின்னிகள்' இரு தரப்பிலுமே இருக்கிறார்கள் என்பதை இலங்கையின் இனப் படுகொலை வரலாறு எடுத்துக்காட்டுகிறது. கொக்கட்டிச்சோலைப் படுகொலை, மயிலந்தன்னைப் படுகொலை உள்ளிட்ட பல்வேறு படுகொலைகளைப் புரிந்து, அப்பாவித் தமிழ் மக்களை படையினரே கொன்றிருக்கிறார்கள் என்பது வரலாற்று உண்மை. மறுதரப்பில் காத்தான்குடிப் பள்ளிவாசல், ஏறாவூர் பள்ளிவாசல் ஆகியவற்றில் தொழுதுகொண்டிருந்த அப்பாவி முஸ்லிம்களை புலிகள் மிருகத்தனமாக வேட்டையாடியிருக்கிறார்கள். அரந்தலாவை, கெப்பிட்டிக்கொல்லாவ உள்ளிட்ட கிராமங்களில் பல அப்பாவிச் சிங்களவர்களைப் புலிகள் கொன்றிருக்கிறார்கள். யுத்தத்தில் ஈடுபட்டிருப்பது அரசாங்கமும், புலிகளுமே. ஆனால் வகை தொகையின்றி கொல்லப்படுபவர்கள் அப்பாவிப் பொதுமக்கள் தான் என்பதே உண்மை. மூதூர் படுகொலை களுக்கு படையினரே பொறுப்பென்று குற்றம் சாட்டியிருக்கும் உல்ப் ஹென்றிக்சன், கெப்பிட்டிக்கொல்லாவ படுகொலை களுக்குப் புலிகளே பொறுப்பென்று கூறியிருக்கிறார். இதனால் இருதரப்பையும் குற்றம் சாட்டியிருப்பதால் தான் ஒரு நடுநிலையாளர் என்று அவர் கதையளக்கிறார். நிவாரண ஊழியர்களின் படுகொலைகளை மட்டும் கண்டித்துக் காரசாரமாக விமர்சிக்கும் தமிழ் ஊடகங்கள், கெப்பிட்டிக்கொல்லாவ படுகொலைகள் பற்றி மௌனம் சாதித்தது ஏன்?

*(மிகுதி அடுத்த வாரம்)*

# தாக்கு தளங்கள் தொடர்ந்து தாக்கப்படும்!

**அரசுக்கும் புலிகளுக்கும் போரியல் ரீதியாக கௌரவப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது சம்பூர்ப் பகுதி. 2002 பெப்ரவரி 22ஆம் திகதி போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்படும் போது சம்பூர், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியாகவே இருந்தது.**

புலிகளின் தாக்குதல் திறனையோ, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களில் பாதுகாப்பை அச்சுறுத்தும் காரணிகள் தொடர்பாகவோ தொலைநோக்குச் சிந்தனை இல்லாமல் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு, புலிகளுடன் ஒப்பந்தத்தைச் செய்தது.

மேற்படி ஒப்பந்தம், அடிப்படையில் தவறுகளைக் கொண்டிருப்பதாகவும், நாட்டின் இறைமைக்கும் நாட்டு மக்களின் உயிர், உரிமைகளுக்கும் அச்சுறுத்தல்களைக் கொண்டிருப்பதாகவும் பல தரப்பாலும் சுட்டிக்காட்டப்பட்டது.

பின்னர், தனி நபர் மீதான கொலைகளாகவும், படையினர் மீதான சிறுசிறு தாக்குதல்களாகவும் நடந்தபோது அதை எவரும் கண்டு கொள்ளவில்லை. அவ்வகையான சகிப்புத் தன்மையானது, இன்று ஒரு யுத்தத்துக்கும், நாளாந்தப் படுகொலைகளுக்கும், சுமார் 220000 பேர் அகதிகளாகுவதற்குமான சூழலைத் தோற்றுவித்துள்ளது.

இப்போது, அடிப்படைத் தவறுகளைக் கொண்ட போர் நிறுத்த ஒப்பந்தம், இன்னொரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வேண்டி நிற்பதோடு, அதற்குள் செய்ய வேண்டிய திருத்தங்களையும் குறிக்கும் பிரச்சினைகளையும் தற்போதைய சூழல்களையும் வெளிக்காட்டியுள்ளது.

இதில் பிரதானமானதுதான், முல்லைத்தீவில் புலிகளால் அமைக்கப்பட்ட விமானத்தளம், பூநகரி - தாளையடி கடற்புலித் தளங்கள், சம்பூர் எறிகணைத்தளம் என்பனவாகும். தற்போதைய தாக்குதல்களும், நகர்வுகளும் இந்தப் பிரதான பகுதிகளை இலக்கு வைத்து நடக்கின்றன. இதில் சம்பூர் பகுதியானது பலமுனையில் நாட்டின் இறைமைக்கு ஆபத்தானதாக உள்ளது. சம்பூரிலிருந்து புலிகள் ஷெல் தாக்குதல்களை நடத்துவதன் ஊடாக திருமலை நகரப் பகுதியின் முக்கியத்துவமிக்க இடங்களை இலகுவில் அழித்து விடக்கூடிய ஆபத்து உண்டு என்பதை 11.08.06ஆம் திகதி புலிகள் சம்பூரிலிருந்து இலக்கு வைத்துத் தாக்கிய திருமலைத் துறை முகம், கடற்படைத் தளம், சீனன்குடா விமானத்தளம் ஆகியவை மீதான தாக்குதல் வெளிகாட்டுகின்றன. இவை தவிரவும் இலங்கைக்கு கோதுமை மாவினை வழங்கும் பிரதான விநியோக நிறுவனமான சீனக்குடாவில் அமைந்துள்ள 'பிரிமா' நிறுவனம், 'மிட்சுபிஸி' சீமெந்து ஆலை, இந்தியா கொள்வனவு செய்துள்ள பிரமாண்டமான எண்ணெய்த் தாங்கிகள், ஆதார வைத்தியசாலை, திருமலைக் கோட்டை போன்ற பிரசித்தமான இடங்களும் புலிகளின் ஆர்ட்டிலெறித் தாக்குதல்களுக்கு இலகுவில் அழிந்து போகும் வாய்ப்பு உள்ளது. சம்பூரைப் பொறுத்தவரை, புலிகளுக்கு எதிரியைத் தாக்குவது ஒருபுறமென்றால், புலிகளுக்கும், கடல் வழியாகத் திருமலைக்கான விநியோகங்களைச் செய்ய தோதான இடமாகவும் உள்ளது. முல்லைத் தீவிலிருந்தோ, அதை அண்டிய கரையோரப் பகுதிகளிலிருந்தோ உறுப்பினர்களையும், உபகரணங்களையும் கொண்டு வருவதற்கும், கிழக்கிலிருந்து வன்னிக்கு உறுப்பினர்களைக் கொண்டு போகவும், படகுகளை உள்வாங்கித் தரிக்கச் செய்ய பூகோள ரீதியாக மிகுந்த வசதியை புலிகளுக்கு சம்பூர் வழங்கியுள்ளது. ஆகவே புலிகளுக்கு சம்பூரை இழப்பது பெரும் பின்னடைவாகவே அமையும்.

இதே அச்சுறுத்தலை இராணுவ நகர்வுகளோடு பார்க்கும் போது, துறைமுகமும், கடற்படைத் தளமும் தாக்கப்பட்டால், திருமலையிலிருந்து வடக்குக்கான விநியோகம் தடுக்கப்படும். அதேபோல் திருமலைக்கு மேலதிகத் துருப்புகளைத் தருவிப்பதும் தடுக்கப்படும். மறுபக்கத்தில் சீனன்குடா விமானத்தளம் தாக்கப்பட்டால் அதேபோல் படையினரின் போக்குவரத்துச் செயற்பாடுகள் பெரும் தடையை எதிர்கொள்ளும். படையினருக்கு முக்கியமான இந்த நெருக்கடியை ஏற்படுத்த வேண்டிய தேவை புலிகளுக்கு இருக்கிறது.

புலிகளின் இந்தச் செயற்பாடு அரசைப் பொறுத்தவரை தலைக்கு மேல் எப்போதும் தொங்கிக் கொண்டிருக்கும் கூரிய ஆயுதம் போன்றது என்ற உணர்வு

> *புலிகள் தாக்குதல்களை நடத்தி நடத்தி, இலக்குகளை அடையாளப்படுத்திக் கொண்டிருக்கும் வரை, அந்த இலக்குகளை நோக்கிய தமது படை நடவடிக்கை தொடரும் என இராணுவத்தின் உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன.*

அரசுக்கு உள்ளது. ஆகவே சம்பூரிலிருக்கும் புலிகளின் ஆர்ட்டிலெறித் தளத்தை அழிப்பது அல்லது அப்புறப்படுத்துவது என்ற ஒரு முடிவுக்கு அரசு வரவேண்டிய அழுத்தும் பல தரப்பிலிருந்தும் பிரயோகிக்கப்பட்டுள்ளது. இதன் எதிரொலியாகவே இப்போது சம்பூரை நோக்கிய நகர்வொன்றை முப்படையினரும் நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்று அரசாங்கம் தெளிவாகக் கூறுகிறது.

புலிகள் சம்பூரிலிருந்து ஆர்ட்டிலெறித் தாக்குதலை நடத்திய போது, அதற்குப் பதில் தாக்குதல்களை படையினர் நடத்தினர். இந்தத் தாக்குதலில் பொதுமக்களுக்கும் பாதிப்புகள் ஏற்பட்டன என்பதை மறுக்க முடியாது. ஆனால் இப்போது அப்பகுதிகளிலிருந்து 95 வீதமான மக்கள் இடம் பெயர்ந்து சென்று விட்டனர்.

மக்கள் அவ்வாறு இடம் பெயர்ந்ததானது, அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒரு விதமான வசதியையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த வசதி காரணமாகவே மாவிலாறு படையினரால் கைப்பற்றப்பட்டதும், இப்போது பச்சனூர், பிறகு கட்டைப்பறிச்சான் போன்ற பிரதேசங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதும், சம்பூருக்குள் நுழையும் வாய்ப்பையும் படைத்தரப்புக்குக் கொடுத்துள்ளது.

மூதூர் கிழக்கில் சம்பூரைக் கைப்பற்றும் தாக்குதல்களைப் பொறுத்தவரை புலிகளுக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. புலிகளின் தலைமை கிழக்கு மாகாணத்தின் பீடி தளர்த்தப்படுவதற்கு இந்தப் பின்னடைவே காரணம் எனக் கருதுவதாகப் புலிகளின் கிழக்குத் தளபதிகளின் அதிருப்தி வெளிப்படுத்துகிறது. சம்பூர் படையினரால் கைப்பற்றப்பட்டதும் தாக்குதல்கள் நிறுத்தப்படும் எனப் படைத்தரப்பு கூறினாலும், கள நிலையில் அது சாத்தியமில்லை.

சம்பூர், புலிகளின் ஏவுதளமாக இருந்ததே தவிர, அவர்கள் கொண்டிருக்கும் ஆர்ட்டிலெறியின் முழுமையான வீச்சு எதுவரை இன்னும் பின் வாங்கித் தாக்கும் என்பதை உணர்ந்து அந்தத் தூரத்துக்கு அப்பால் புலிகளை விரட்டும் வரை தாக்குதல்கள் தொடரும் சாத்தியக்கூறுகளே இருக்கின்றன.

புலிகள் சம்பூரை கைவிட்டுப் பின்வாங்கிவிட்டார்கள் என்பதற்காகக் கிட்டத்தட்ட அதேயளவு அச்சுறுத்தலைத் தரக்கூடிய பகுதிகளாகவும், அதேயளவு தூரத்திலிருக்கும் பகுதிகளாகவும் இருக்கும் மூதூர் கிழக்குப் பகுதிகளான கூனித்தீவு, உப்புவெளி, கெவுளியா போன்ற பகுதிகளும், மூதூரின் மேற்குப் பகுதிகளான இறால்குழி, நாவலடி, மணலாறு, கண்டலடி, குரங்குபாஞ்சான் போன்ற பகுதிகளும், புலிகளின் ஆர்ட்டிலெறித் தளங்களாக மாறக்கூடிய ஆபத்தும் உண்டு. ஒருவேளை இப்போது கூட மேற்குறிப்பிட்ட இந்தப் பகுதிகளில் புலிகள் அந்த ஆயத்தங்களைச் செய்திருக்கக் கூடிய வாய்ப்புகளும் உண்டு. ஆகவே நாட்டின் இறைமை, திருமலை மீதான அச்சுறுத்தல் இவற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கானதாகக் கூறப்படும் தற்போதைய தாக்குதல்கள் சம்பூரோடு முடிவுக்கு வருமென்று கருதமுடியாது. புலிகள் தாக்குதல்களை நடத்தி நடத்தி, இலக்குகளை அடையாளப்படுத்திக் கொண்டிருக்கும் வரை, அந்த இலக்குகளை நோக்கிய தமது படை நடவடிக்கை தொடரும் என இராணுவத்தின் உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன.

விரைவில் சம்பூர், படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுவதோடு, அங்கு இருந்து கொண்டு அச்சுறுத்தலைத் தரக்கூடிய பகுதிகள் மீது கவனம் திருப்பப்படும். மேற்படி பகுதிகளிலிருந்து மக்கள்

அலசுவது

**- மதியூகி -**

வெளியேறியுள்ள போதும், மிஞ்சி இருப்போரும், பாதுகாப்பாக மீட்கப்பட வேண்டுமென்பதை அரசு, தனக்கிருக்கும் கடமையாக உணர்ந்து செயல்பட வேண்டும்.



## அதிரடி அய்யாத்துரை



**பொய்யை** மறைக்கப் போட்ட திட்டமெல்லாம் மெய்யென்று ஆன பிறகு குய்யோமுறையோ எண்டு கத்திறது கவுண்டமணி சொல்லுறமாதிரி வேலைக்கு ஆவுற காரியமில்லையுங்கோ. குடியிருப்பில அப்பாவி மாணவிகளைக் குண்டுபோட்டு கொன்று போட்டிட்டினமெண்டு சொல்லிச்சினம், அப்பாவிப் பிள்ளையள் செத்துப் போனது துக்கம்தான். ஆனால், அப்பாவிப் பிள்ளையளை அங்க கூட்டிக் கொண்டுபோய் ஆயுதப் பயிற்சிகொடுத்து பலிகொடுத்தது யார் எண்டதை வசதியா மறைச்சிச்சினம். பிள்ளையளின்ர பாவம் சும்மா விடுமோ? குண்டு போட்டதிலை காயம் பட்டு கண்டியில சிகிச்சை பெற்ற அதே அப்பாவிப் பிள்ளைகள், குடியிருப்பில என்ன நடந்தது, தங்களை யார் யார் வந்து வலுக்கட்டாயமாகக் கூட்டிக்கொண்டு போனவை, தங்களுக்கு நாலு நாள் ஆயுதப் பயிற்சியை யார் கொடுத்திச்சினமெண்ட உண்மையைச் சொல்லிப் போட்டினம்.

பிள்ளைகள் செத்துப் போனதுக்கு குய்யோ முறையோ எண்டு கத்தினவை, உண்மை தெரிஞ்சாப் பிறகு உப்பிடி அநியாயத்துக்கு வாய் பேசா மௌனிகளாக இருக்கினமே எண்டது தானுங்கோ என்ர வேதனை...

**ஊடகவியலாளர்** குருபரனவர் கடத்தப்பட்டது தொடர்பாக எட்டு மணித்தியாலத்திற்குள்ள அவர் விடுவிக்கப்பட வேணுமெண்டு தெரிவிக்கப்பட்ட அழுத்தங்கள் வரவேற்கப்பட வேண்டியதுதானுங்கோ. ஆனால் குருபரனவர் விடுவிக்கப்பட்டவுடன அவர் ஏன் நடந்த உண்மையைச் சொல்ல மறுக்கிறார். அவர் உண்மையைச் சொல்ல வேணும், இல்லாட்டில் ஊடகத் தொழிலில இருந்து ஒதுங்கவேணுமெண்டு ஒளிவீசிற பத்திரிகையின்ர ஆசிரியர் வித்தியாசமானவர் சக்தியான தொலைக்காட்சியில மூச்சுப்பிடிச்சு கருத்துச் சொன்னவருங்கோ.

"இப்படிக்கு நீங்களி"ல உப்படிச் சொல்லினமே. இன்னும் எத்தின பேரிட்டக் கருத்துக் கேட்டிருக்கினமோ எண்டு கேட்டால் அவர் ரங்கமணி தன்ர வழமையான பாணியாலயே தனக்குத் தெரிஞ்ச மூணு பேரைப் புடிச்சு கருத்துக் கேட்டார். அதுவும் உந்தக் கடத்தலை ரெண்டெழுத்தார் செய்ய இல்லை எண்ட விதமாகப் பேசக் கூடியவர்களைப் புடிச்சி கருத்துக் கேட்டதனூடாக ரங்கமணி தன்ர தேசிய உணர்வை ரெண்டெழுத்தார் குளிரும்படி கச்சிதமாக வெளிக்காட்டினார்.

சரி, ரங்கமணி எதை வேண்டுமானாலும், யாருக்கு வேண்டுமானாலும் காட்டிட்டுப் போகட்டும். அவையின்ர கூட்டு நிறுவனத்தில வேலை செய்யிற ஒரு யுவதியும் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டவ அவவைப் பற்றியும் கொஞ்சம் கவனம் எடுத்திருந்தால் இன்னும் பெட்டராக இருந்திருக்குமே. ரங்கமணி எப்பவும் உப்பிடித்தான். அழுக்கை தன்னிட்டை வச்சுக்கொண்டு மற்றவையின்ர அழுக்கை தேச்சுவிடப்போயிடுவாருங்கோ...யார் கண்டது உந்த கிட்னேப்புகளுக்குப் பின்னால ரங்கமணிக்கு ஏதும் கனக்ஷன் இருந்தாலும் இருக்கும்.

**முன்னாள்** அதிகார அம்மணி, எலிசபெத் ராணியின்ர நாட்டில இருந்து கொண்டு, எனக்கு வழங்கின பாதுகாப்பு ஏற்பாடுகளை ஏன் குறைப்புச் செய்தியள், அதுக்கு உமக்கு அதிகாரம் போதுமோ எண்டு கேள்வி கேட்டிருக்கார். கேள்வி நியாயமானது தானுங்கோ. உந்தக் கேள்வியை உள்நாட்டில இருந்து கொண்டு உரிமையோட்டை கேட்டிருந்தால் நல்லா இருந்திருக்கும். அதை விட்டுப்போட்டு உங்க போய் இருந்து கொண்டு பாதுகாப்பை ஏன் குறைப்புச் செய்தியள் எண்டு கேக்கிறது சரியோ? ஆள் இல்லாத வீட்டுக்கு ஏன் அத்தனை பாதுகாப்பு எண்டு கேக்கினம். அம்மணி திரும்பி நாட்டுக்கு வாரதெண்டால் அது புதுக்கட்சி ஒன்றின்ர பெயரோட தான் எண்டினம்.

நான் கேக்கிறன், ஏன் அவாக்கு புதுக் கட்சி? அவவின்ர தகப்பனார் ஆரம்பிச்ச கட்சி இருக்கேக்க.

அவா வந்து அக்காவா நடந்து கொண்டால் தம்பிமார் என்ன தள்ளியிருக்க மாட்டம் எண்டே சொன்னவுங்கள். அவா குறுக்கு வழியால ஓடி தன்ர ஸ்கூல் மெட்டை அதிகாரத்துக்குக் கொண்டு வந்து, அதனூடாகத் தனக்கும் ஒரு அதிகாரமான பதவியை எடுத்துக் கொள்ளலாமென்று குழி தோண்டினா கடைசியில அந்தக் குழிக்குள்ள அவவே குப்புற விழுந்தா. உதைத்தான் 'தன் வினை தன்னைச் சுடும், ஓட்டப்பன் வீட்டைச் சுடும்' எண்டிச்சினமாக்கும், இன்னும் காலம் கெட்டுப்போகயில்லை. அம்மணி அவசரப்படாமல் யோசிச்சாவெண்டால் வியாழ மாற்றம் நல்ல யோகம் தானுங்கோ...

**கொழும்பில** தனக்கு அண்டை நாட்டுக்காரர்தான் கிளைமோர் வச்சிச்சினம் எண்டு, இலக்காக இருந்தவரே சொன்னவராம். அதை அண்டை நாடு நிராகரித்திருக்குது.

அவை ரெண்டு பேரும், தங்கட பொலிடிக்சுக்காக அவை மேல இவையும், இவை மேல அவையும் உப்பிடிச் சொல்லுறது வழமைதான். அதில ஒண்டுதான் உதுவும் எண்டினம் விஷயம் தெரிஞ்சவை. அதுமட்டும் சொல்லயில்லையுங்கோ. உதுக்கு ரெண்டெழுத்தார் தான் முழுக்காரணமும். ஆகையாலை அவை உதில இருந்து தப்பிச்சுக் கொண்டதாக நினைச்சு ஓவராக மகிழ்ச்சி கொள்ளத் தேவையில்லை எண்டும் சொல்லினமுங்கோ.

ஒருவேளை எதிரியை கலவரமடையச் செய்யாமல் இருக்க வச்சி, அவர் தன்னை மறந்து இருக்கேக்க பிடரியிலை அடிக்கிற மாதிரி ஒரே போடாப் போட வேணும் எண்டும் திட்டம் போட்டுக் கொண்டுதான் சும்மா ஒரு பொலிடிக்சுக்காக அண்டை நாட்டின்ர மேல குற்றம் காட்டினம் எண்டும் சொல்லினமுங்கோ.

உப்பிடி எல்லா வளத்தாலையும் அவையே சொன்னால் உதில நான் என்ன சொல்லிறதெண்டு தெரியல்லையுங்கோ...

**சூடா** நாட்டுக்கு உணவுப் பொருட்கள் கொண்டு செல்ல கடல் வழியை விட முடியாது; தேவையெண்டால் தரை வழியால போங்கோ எண்டு ரெண்டெழுத்தார் சொல்லினம்.

தரை வழியால போனால் பொருட்கள் முழுமையாகக் குடா நாட்டுக்குப் போய்ச் சேராது; அதில கொஞ்சத்தை ரெண்டெழுத்தார் கையாடிப்போடுவினம். அதுமட்டுமில்லாமல் வரி, கப்பம் எண்டு தங்கட வழமையான கை வரிசையையும் காட்டுவினம். ஆகையாலை தரை வழியாலை பயணம் எண்டது சரி வராது. கடல் வழிதான் சரி எண்டு ஆளும் தரப்புச் சொல்லுது.

உப்பிடி ரெண்டு தரப்பும் ஆளாளுக்கு இழுபறிப் படுகினம். உதுக்கிடையில குடாநாட்டில இருக்கிற சனத்துக்கு உடனடியாக நிவாரணப் பொருட்கள் வந்து சேரவேணும் இல்லாட்டில் பட்டினிச் சாவு நிகழும் நிலை உருவாகும் எண்டு குடாநாட்டுச் செய்திகள் சொல்லுது.

உதில என்ன பிரச்சினையெண்டால் முதல் தொகுதி உணவுப் பொருட்கள் கடல் வழியாகப் பத்திரமாக குடா நாட்டுக்குப் போகச் சம்மதிச்ச ரெண்டெழுத்தாருக்கு இப்ப என்ன நடந்தது. அப்புடிப் போலை இதையும் விடலாம் தானே. அப்புடியெண்டால் சனத்துக்கு சாப்பாடு இல்லாட்டியும் பரவாயில்லை. தரை வழியால போனாத் தான் தங்கட தண்டல்களுக்கு வசதியெண்டு அவை யோசிக்கினமெண்டது ஓப்பினாகத் தெரியுது எண்டு நான் சொல்ல இல்லையுங்கோ. பாதிக்கப்பட்ட சனங்கள் சொல்லினமுங்கோ.

**யாழ்.** பல்கலைக்கழகத்தில தேடுதல் நடக்கேக்க பதுங்கியிருந்தவரை படைத்தரப்பு பகிரங்கமாகத் தான் பிடிச்சவை. அவர் ஒண்டிலையும் சம்பந்தமில்லாதவரென்றால் மற்றப் பெடியளைப் போல முன்னுக்கெல்லோ நின்றிருக்க வேணும்? உதைப்பத்தின உண்மையான விஷயங்களை ஒரு ஆய்வு செய்து, ஆக வேண்டியதைச் செய்து படிக்க வேண்டிய பிள்ளைகளைப் படிக்க வைக்க ஏற்பாடு செய்யிறதைவிட்டுப் போட்டு, உவர் குதிரைக் கஜேந்திரத்தார் நிம்மதி கெடுக்கிறார் எண்டதுக்காக சில புத்திஜீவிகளும் நிண்டு ஆடிக் கொண்டிருக்கினமுங்கோ...

பிடிபட்டவர் பகீர் பகீர் எண்டு நாளுக்கு நாள் விசாரணைகளின் போது நடந்த பல சம்பவங்கள் பற்றியும், நடக்கவிருந்த சம்பவங்கள் பற்றியும், உதுகளில யார் யார் நேரடியாகவும், மறைமுகமாகவும் தன்னோடை சம்பந்தப்பட்டிருக்கினமெண்டதையும் அப்டேட் செய்து கொண்டிருக்கிறாராம். இப்பதானே புதையலைக் கண்டிருக்கினம். இனிமேல் தான் பூதங்கள் வெளிக் கிளம்பும் எண்டினம். புதையலும் பூதமும் எண்ட திகில் ஒருபக்கம், புள்ளைகளின்ர படிப்பு சீரழியிறது ஒரு பக்கம். எல்லாத்துக்கும் காரணம் குதிரையார் தானுங்கோ எண்டு சில மாணவர்கள் துணிஞ்சு சொல்லினமுங்கோ...

# புகைப்படம்

பிரபலமானவர்களின் புகைப்படங்களைச் சேகரித்து வைப்பது சிலருக்குப் பிடிக்கும். அதிலும் அவரிடம் நேரடியாகவே கையெழுத்தோடு பெற்றுக்கொள்வதில் அலாதி விருப்பம். சிலருக்கு அது தவம். இப்படியானவர்கள் தமது பராயகால ஞாபகங்களை இன்னும் பசுமையாக உணர்த்தும் அவர்களது புகைப்படங்களைச் சேகரிக்க மறந்து போயிருப்பார்கள்.

பெண் நண்பிகள் தங்கள் குழந்தைக் காலத்து புகைப்படங்களை பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். அதில் அவர்கள் அழகாக இருந்தால் மட்டுமே காட்டுவார்கள். குழந்தையாக இருக்கும் போது 'உடும்பு பிடிப்பது' என்பார்கள். குழந்தை குப்புறப்படுத்துக் கொண்டு கால்களை மடித்துக் கொண்டு கோடி அழகோடு திரும்பிப் பார்த்து சிரிக்கும் காட்சியை ஒவ்வொரு பெற்றோரும் பதிவு செய்து கொள்வர். அவ்வாறான புகைப்படத்தைத் தோழிகள் காட்ட


வியட்நாமில் கோரம்.

வெட்கப்படுகிறார்கள்.

எனக்கு இரண்டு வயதில் முதல் புகைப்படம் பிடிக்கப்பட்டதாக, அம்மா பாதுகாத்து வைத்திருந்த ஒரு புகைப்படம் தான் என் சிறுவயதுப் புகைப்படம்.

அம்மாவும், அப்பாவும் இரண்டு பக்கமும் நின்று கொண்டு நடுவில் உயரமான நாற்காலியில் என்னை உட்கார வைத்து அந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டிருந்தது. அந்தப் புகைப்படத்தைப் பார்க்கும் போதெல்லாம் என் கோபம், துக்கம் எல்லாம் மறந்து இரண்டு வயதுக் குழந்தையாகி விடுவதுபோல் உணர்வேன். அந்தக் காலத்தில் ஸ்ரூடியோவுக்குச் சென்று இதே மாதிரியான புகைப்படங்கள் பிடிப்பதுதான் வழக்கமாக இருந்திருக்கிறது. அதற்குப் பின்னர் தம்பி, தங்கைகள் என்று பிள்ளைகள் நான்கு பேரையும் ஸ்ரூடியோவுக்குக் கூட்டிக் கொண்டு போய் குடும்பப் புகைப்படம் பிடித்துக் கொள்ளவில்லை.

நான் மூத்த பிள்ளையாக அதுவும் ஆண் பிள்ளையாகப் பிறந்த சந்தோசம் அல்லது அப்பா, அம்மா, நான் என்று நாங்கள் எவ்வித ஆபத்துகளுமில்லாமல் குடும்பத்தோடு ஊர் சுற்றித்திரிந்த அந்த வசந்தகாலம் என இரண்டில் ஒன்று காரணமாக இருக்கும். அந்த நாட்கள் எங்கள் வாழ்வின் வசந்த காலங்கள்.

இதற்குப் பிறகு எனக்கு 8 வயது இருக்கும். அப்போது தம்பிக்கு 6 வயது. தங்கைக்கு 4 வயது. கடைசித் தங்கைக்கு 2 வயது இருக்கும். அப்போது மாமாவின் சோளத் தோட்டப்பக்கம் நின்று பிடித்துக் கொண்ட ஒரு புகைப்படம் இருக்கிறது. அந்தப் புகைப்படத்தைப் பார்த்தால் சிரிப்புத்தான் வரும். நான் கோதுமை மாவை முகத்தில் பூசிக்கொண்டது போல் பௌடரைப் பூசிக் கொண்டு பூனைக்குட்டி போல் புகைப்படம் பிடிப்பவரைப் பார்த்துக் கொண்டு இருக்கிறேன். அதேபோல் என் உடன் பிறப்புக்களும் வெவ்வேறு திசைகளில் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்தப் புகைப்படத்துக்குப் பிறகு ஊருக்குள் ஏதாவது திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் நடந்தால் அதில் எப்புடியாவது தலையைக் காட்டிக் கொள்வேன். இப்படி நான் ஆசையாக பாதுகாத்த அந்தப் புகைப்படமும் இப்போது இல்லை.

நமது வாழ்க்கையில் பாதுகாத்துக் கொள்ளமுடியாமல் பல விடயங்களை நாம் தொலைத்து விடுகிறோம். சிந்தித்துப் பார்க்கும் போது புகைப்படத்தைத் தொலைத்தது கூட பேரிழப்புத்தான். பரவாயில்லை என்று விட்டு விடலாம். ஆனால் சிலர் வாழ்க்கையை, நிம்மதியை,



சுனாமியின் அவலம்

சுற்றத்தைத் தொலைத்துவிட்டு கட்டாய வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே. அவர்களுக்காக என்ன ஆறுதலைக் கூற முடியும்? புகைப்படங்களுக்கு பெரும் சக்தி இருக்கிறது. இன்றைக்கு ஊடகங்கள் முழுக்க முழுக்க நம்பியிருப்பது புகைப்படங்களைத்தான். முக்கியமான சம்பவத்தை, விபத்தை, பிரமாண்டத்தை, இயற்கை சீற்றத்தை, பேரழிவை முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தங்களை, விஜயங்களை, சாதனைகளை, வெறுமனே செய்தியாகச் சொல்வதை விடவும் அதைப் படம் பிடித்துக் காட்டுவதில், பிரசுரிப்பதில் நம்பிக்கைத்தன்மை அதிகரிக்கிறது. இப்படிப் புகைப்படங்கள் வரலாற்றையே




புரட்டிப் போட்ட சம்பவங்களும் உண்டு. அந்த கால கட்டத்திற்கு இன்றும் உயிர் கொடுத்துக்கொண்டிருப்பது புகைப்படங்கள்தான்.

வியட்நாமில் நடந்த இராணுவ ஆக்கிரமிப்பின் கோரமான முகத்தை வெளிக்காட்டியதும் புகைப்படம்தான்.


ஹிரோஷிமாவில் அணுகுண்டின் பேரழிவு

உடைகள் தீப்பற்றவும் அவற்றைக் கழற்றி வீசி எறிந்துவிட்டு ஒரு சிறுமி வீதியால் நிர்வாணமாக ஓடி வந்ததைக் காட்டும் அந்த புகைப்படம் தான் வியட்நாமில் நடந்த கொடூரத்தின் நினைவுச் சின்னம்.

அதுபோல் இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஜப்பானின் ஹிரோஷிமா நகரத்தில் அமெரிக்கா போட்ட 'லிட்டில் போய்' என்ற அணுகுண்டு வெடித்து மூன்று லட்சத்துக்கு அதிகமானவர்களைப் பலியெடுத்ததையும், அழிவுகளையும் இன்னும் வெளிப்படுத்தி நாகரிக சமூகம் வெட்கித் தலை குனியும்படி செய்து கொண்டிருப்பது அந்தப் புகைப்படங்கள் தான்.

அதேபோல் சுனாமிப் பேரலை 26.12.2004 இல் தெற்காசிய நாடுகளைத் தாக்கிய பின்னர், ஆழிப்பேரலைக்குப் பலியானதைப் பறைசாற்றும் விதமாகயும் ஒரு குழந்தை அலைக்குப் பலியாகி கடற்கரையில் இறந்து கிடப்பதை, அக்குழந்தையின் தாய் அந்த மணலிலேயே விழுந்து தலையிலடித்து அழுவதையும் விளக்கும் புகைப்படம் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதேபோல் ஆபிரிக்க நாடுகளில் பட்டினிச் சாவை மக்கள் எதிர்கொள்கிறார்கள். சுமார் ஐம்பது இலட்சம் மக்கள் உணவின்றித் தவிக்கிறார்கள் என்பதை செய்தியாகக் கேட்பதை விடவும் அங்கு பிடிக்கப்பட்ட புகைப்படம் தான் உலக மக்களின் மனதை உலுக்கியது.

ஆபிரிக்கக் குழந்தை ஒன்று தாய்ப்பாலுமில்லாமல், பால்மாவும் இல்லாமல் எலும்பும் தோலுமாக அழுது கொண்டிருக்கும் போது, ஒரு கழுகு அந்தக் குழந்தையைத் தன் உணவுக்காகத் தூக்கிக் கொண்டு போகப் பார்த்துக் கொண்டிருக்கும் அந்தப் புகைப்படம், வறுமையின் அடையாளமாக கருதப்படுகிறது.

இப்படி நான் பார்த்து வியந்த மனதுக்குள்ளாகவே அழுத புகைப்படங்கள் ஏராளம். உலகின் இன்னொரு கோடியில் நடக்கும் நல்லதையும், கெட்டதையும் ஒரே ஒரு புகைப்படம், வெளிக்காட்டி விடமுடியும். இப்படி புகைப்படங்கள் நமக்குள் ஏற்படுத்தும் தாக்கங்களைப் பார்ப்பதை விடுத்து, நம்மில் பலர் புகைப்படப் பிரியர்களாக இருப்பது, பிரபலங்களுக்குப் பக்கத்திலிருந்து புகைப்படம் பிடித்துக்கொள்ளவும், கவர்ச்சியான விடயங்களை புகைப்படமாக சேகரித்துக் கொள்ளவும் தான். அதிலும், இந்த இருபத்தியோராம் நூற்றாண்டில், படச்சேர்க்கை (கிராபிக்ஸ்) தொழில் நுட்பத்தை நம்பி நிஜங்களையும், மாயைகளையும் சேர்த்து புகைப்படத்தின் தன்மையையே கெடுத்துவிடும் துர்ப்பாக்கிய நிகழ்வுகளும் நடக்கின்றன. இதை விடவும் அபத்தம், ஆபாசக் காட்சிகளை வெளிப்படுத்தும் புகைப்படங்கள். ஒருவரின் தலையை துண்டாடி இன்னொருவரின் உடம்பில் பொருத்தி அந்தக் காட்சியைப் புகைப்படங்களாக வெளியிடும் சமூகப் பைத்தியங்களும் புகைப்படக் கலையின் புனிதத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் சமூகத்தைச் சீரழிக்கும் விசக் கிருமிகள்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)




## வாசகர்களின் கவனத்திற்கு...

இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர் களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
முரசு விமர்சனம்
தினமுரசு வாரமலர்
த.பெ. இல - 1772
கொழும்பு.

## மறைக்கப்பட்ட உண்மைகள்

அண்மையில் உரிமைக்காகப் போராடும் அமைப்பு இன்னொரு இனத்தின் உரிமையைப் பறித்த நிகழ்வு இடம்பெற்றது. மூதூரில் இடம் பெற்ற இந்த இனச்சுத்திகரிப்பு பல முஸ்லிம்களின் உயிர்களைக் குடித்தும், பல கோடி பெறுமதியான சொத்துக்களை அழித்துப் பல்லாயிரக்கணக்கான மக்களை அகதிகளாக்கிய அந்த கோர நிகழ்வுகளை பல தமிழ்ப் பத்திரிகைகள் வெளியிட வில்லை என்பது கவலைக்குரியக் கண்டனத்துக்குரிய விடயமாகும். இந்த நிலையிலேயே 'நவமணி' பத்திரிகை, 'தினமுரசு' பத்திரிகை போன்றவை மட்டுமே இவ்விடயத்தில் கவனம் செலுத்தி அகதிகளின் நிலைமை, மூதூரில் நடந்தது என்ன? போன்ற சம்பவங்களை வெளிச்சம் போட்டுக் காட்டியது. இதன் மூலம் புலிகளின் ஆதரவு பத்திரிகைகள் சில மூதூரில் புலிகள் நடத்திய தாக்குதலை நியாயப்படுத்திய கட்டுரையின் போலித்தன்மை அம்பல மானது. இனிமேலாவது இவ்வாறான போலித்தனமான, நயவஞ்சகத்தனமான கட்டுரைகளை வெளியிடுவதை புலிகள் ஆதரவு பத்திரிகைகள் நிறுத்திக் கொள்ள வேண்டுமென வேண்டுகோள் விடுக்கிறேன்.

—என்.நிஸ்பதன்,
கம்மல்துறையூரான்

## விளம்பரப் பகுதி


மலையாள மாந்திரீகம்



தெய்வீக காந்த சக்தி மாந்திரீகம் மூலம் நீண்டகால திருமணத்தடை நீங்க, கால சர்ப்ப தோஷம், குழந்தையின்மை, காதல் கைகூட, கணவன் மனைவி ஒற்றுமையாயிருக்க தெய்வீக காந்த சக்தி பரிகாரங்கள் மூலம் முன் கருமவினைகளை என்னால் அகற்ற முடியும்.

தேவைகளுக்கு -

உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி பேராசிரியர்
P.K.சாமி (J.P.) ஐயா

அருள் சித்த எண்ணெய்



மன தடுமாற்றங்கள், படபடப்பு, கோபம், தலைவலி, தூக்கமின்மை, கூந்தல் வளர்ச்சிபெற, முடி கருமையாக இருக்க, இளம்நரை போக்க, பொடுகு தொல்லை நீங்க, பெண்களுக்கென தெய்வீக மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்தத் தைலத்தைப் பாவிப்பதனால் ஏதோரு பக்கவிளைவுகளும் இல்லை. இருபாலாரும் பாவிக்கலாம்.

அருள்ஞான சித்தர் பேராசிரியர் டாக்டர்
P.K.சாமி (J.P.) ஐயா

ஜாதகம்



காண்ட அடிப்படையில் ஜாதகமாக எழுதி எடுக்க, வெளிநாட்டு நேரப்படி ஜாதகங்கள் கணித்து வெளிநாட்டுக்கு அனுப்ப.

ஜோதிட தத்துவ ஞானி
P.K.சாமி (J.P.) ஐயா

விஷேசமாக வெளிநாட்டவர்களுக்கு 24 மணித்தியால தொலைபேசி வசதிகளும் நேரடி பொதி கையளிப்பு சேவையும் எம்மிடம் உண்டு

ஸ்ரீ துர்க்கா தேவி மாந்திரீக உச்சாடப் பீடம்
162, KOTAHENA ST, COLOMBO - 13.
TEL : 2470615, 2342463, 2342464, FAX : 2344831.
Web : www.drpksamy.com
E-mail : drpksamy@sltnet.lk

ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்
No. 33, தின சந்தை கட்டிடம், நுவரெலியா.
NUWARA-ELIYA TEL : 052-4490031.

ABI Beauty Parlour

உங்கள் அழகினை மேம்படுத்திக்கொள்ள சிறந்த இடம்

Abi Beauty Parlour

Bridal Dressing, Latest Facials
Hair Rebonding, Hair Treatments
Watts Removing....

பயிற்சி வகுப்புகளும் நடைபெறுகின்றன முற்பதிவுகளுக்கு தொடர்புகொள்ளவும்.

No. 60 6/4, Mayfield Road,
Kotahena, Colombo - 13.
Tel : 2387737, Hotline : 077-9539263
after 6'Clock - 2431137
(Ladies Only)



**இன்னொருவர் பார்வையில்**

# ‘சிங்கக் குட்டி’களைத் தேடித் தாக்க அமெரிக்காவில் ஏவுகணைகள் தேடிய புலிக்குட்டிகள்!

**வடக்கு, கிழக்கிலுள்ள புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்திவரும் ‘கிபீர்’ விமானங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்காக SA-18 என்றழைக்கப்படும் சக்திவாய்ந்த ஏவுகணைகளைக் கொள்வனவு செய்வதற்காக முயற்சி செய்தார்களென்ற குற்றச்சாட்டின்பேரில் பத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் அமெரிக்காவில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் எவ்வாறு அமெரிக்க மத்திய புலனாய்வுப் பிரிவினரிடம் (எப்.பி.ஐ.) சிக்கினார்களென்ற விபரம் லண்டனிலிருந்து வெளிவரும் ‘சண்டே டைம்ஸ்’ பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. அதன் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது.**

**நியூயோர்க்** ஸ்ரேரன் ஐலண்டிலுள்ள மாடிக் குடியிருப் பொன்றில் வாழும் தமிழரொருவருக்கு ஜூலை மாத பிற் பகுதியில் ஒரு நாள், நடராசா யோகராசா என்பவரிடமிருந்து தொலைபேசி அழைப்பொன்று வந்தது. அந்த மாடிக் குடியிருப்பில் வாழ்ந்து வருபவர் ஒரு தமிழர் என்பது மட்டு மல்ல, அவர் அமெரிக்க மத்திய சமஷ்டிப் புலனாய்வுப் (எப்.பி.ஐ.) பிரிவின் உளவாளியாகவும் பணியாற்றி வந்தார். போதைவஸ்துக் குற்றச்சாட்டின் பேரில் 1994இல் கைது செய்யப்பட்ட இவர், பரோலில் வெளியே வருவதற்கு எப்.பி.ஐ. சில ஆவணங்களைக் கொடுத்து உதவியது. இதற்கு இவ ருக்குப் பண உதவியும் வழங்கப்பட்டு வருகிறது. யோகராசா (யோகா) ஆயுதக் கொள்வனவு தொடர்பாக ஆயுத வியாபாரியொருவரோடு பேச விரும்புவதாக உளவாளியிடம் தெரிவித்தார். இவர்களின் சம்பாஷணை ஒலிப்பதிவு செய்யப் பட்டது. மறுநாள் மாலை நியூயோர்க்கிலுள்ள குயீன்ஸ் என்ற ஓரிடத்தில் சந்தித்துப் பேசுவதாக முடிவு செய்யப்பட்டது. மறுநாள் கனடாவிலிருந்து வருகை தந்திருந்த சரச்சந்திரன் (சதா) என்பவரோடு யோகா உளவாளியைச் சந்தித்தார். பொட்டம்மானின் அறிவுறுத்தலின் பேரில் தான் செயற்படுவதாக சதா உளவாளியிடம் கூறினார் “கிபீருக்குத் தேவையானவை, எமக்கு வேண்டும்” என்று சதா கூறினார். இஸ்ரேலிய ஹீப்ரு மொழியில் ‘கிபீர்’ என்றால் சிங்கக் குட்டி என்று அர்த்தம். கடந்த ஏப்ரல் முதல் புலிகளின் நிலை மீது கிபீர் விமானங்கள் நடத்திவரும் தாக்குதலை முறியடிப்பதற்கு SA-18 ஏவுகணைகள் கொள்வனவு செய்வதே சதாவின் நோக்கம். சதா, இலங்கையைச் சேர்ந்த கனடியப் பிரஜை. பொட்டம்மானுடன் நேரடியாகத் தொடர்புடைய ‘பெரிய மனிதர்’ ஒருவர் ‘அங்கே, செல்வதாகச் சதா உளவாளியிடம் கூறினார். ‘அங்கே என்பது இலங்கையிலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியைக் குறிக்கிறது. கொள்வனவு செய்ய வேண்டிய ஆயுதங்களின் பட்டியலைப் பெறுவதற் காக அவர் அங்கே செல்வதாக சதா கூறினார். எப்பொழுதாவது தலைவரைச் சந்தித்திருக்கிறீர்களா? என்று உளவாளி சதாவைக் கேட்டார். தலைவர் என்பது பிரபாகரனைக் குறிக்கும். மூன்று வருடங்களுக்கு முன்னர் தலைவரைச் சந்தித்ததாகச் சதா கூறினார்.

இந்தச் சந்திப்பின் இறுதியில், அமெரிக்க புலனாய்வுப் பிரிவு உளவாளிக்குக் கனடாவிலுள்ள சதாவின் மின்னஞ்சல் விலாசத்தை யோகா கொடுத்தார். சந்தித்ததற்கு நன்றி. நான் எனது ஆளுடன் தொடர்பு கொண்டு அவரிடம் இருப்பவை பற்றி அறிந்து கொள்கிறேன். எல்லாம் சரியென்றால் நீங்கள் வாங்கப் போகும் பொருட்களின் படங்களை உங்களுக்கு அனுப்பி வைக்கவா? நீங்கள் என்னோடு தொடர்பு கொள்ள வேண்டுமென்றால் இந்த மின்னஞ்சலுடன் அல்லது எனது செல்போனுக்குப் பேசுங்கள் என்று உளவாளி தெரிவித்தார். ஆகஸ்ட் மாத ஆரம்பத்தில் சதா பதிலளித்தார். “விரைவாக மின்னஞ்சல் அனுப்பியமைக்கு நன்றி. பொருட்களின் படங் களை நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்” என்று பதிலமைந்திருந்தது.

மறுநாள் அமெரிக்க மத்திய புலனாய்வுப் பணியகம் மற்றுமொரு மின்னஞ்சலை உளவாளியூடாக சதாவுக்கு அனுப்பியது. “எனது ஆளிடம் புகைப்படங்களிருக்கின்றன. தோளில் வைத்து ஏவக்கூடிய SA 18 ரஷ்ய தயாரிப்புகள் மற்றும் அவர்களுக்கு வேண்டியது என்ன என்பது பற்றிய பட்டியலொன்றை எனக்குத் தாருங்கள். அவரால் எதனைப் பெறமுடியுமென்று நான் அவரிடம் கேட்கிறேன்” என்று அதில் கூறப்பட்டிருந்தது. அந்த மின்னஞ்சலுடன் SA 18 ரக ஏவுகணைகளின் புகைப்படங்களும் இணைக்கப்பட்டிருந்தன.

நியூயோர்க்கின் குயின்ஸ் என்ற இடத்தில் உளவாளியும் யோகாவும் 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7ஆம் திகதி வாக்கில் சந்தித்துக் கொண்டனர். AK47 ரைபிள்கள் மற்றும் ட்ரக்குகளில் பொருத்தி ஏவக் கூடிய ஏவுகணைகள் உட்பட, புலிகள் இயக்கம் வாங்க விரும்பிய பல்வேறு ஆயுதங்கள் குறித்து அவர்கள் இருவரும் மீண்டும் கலந்துரையாடினர். கனடாவிலுள்ள சதாவின் கையடக்கத் தொலைபேசிக்கு உளவாளியும் யோகாவும் பேசினர். அமெரிக்க உளவாளியின் மின்னஞ்சலைத் தான் பெற்றதாக சதா உறுதிப்படுத்தியதோடு, அதனை ‘அங்கே’ (இலங்கையிலுள்ள புலிகளின் தலைமையகத்துக்கு) அனுப்பி வைத்ததாகவும் குறிப்பிட்டார். ஆகஸ்ட் 8ஆம் திகதி வாக்கில் சதா, இலங்கையில் பொட்டு அம்மானுக்காகப் பணிபுரியும் புலிகளின் தொடர்பாளருக்கு மின்னஞ்சலொன்றினை அனுப்பிவைத்தார். இந்த இரு மின்னஞ்சல்களுமே நீதிமன்றத் தேடுதல் அனுமதியைப் பெற்ற பின்னர் சில அமெரிக்க சமஷ்டிப் புலனாய்வுப் பிரிவினரால், கைப்பற்றப்பட்டன.

ரஷ்யத் தயாரிப்பான SA-18 ஏவுகணைகளின் பெறுமதி 75000 அமெரிக்க டொலர்களாகும். (ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா) என்று மின்னஞ்சலில் விலைகள் குறிப்பிடப்பட்டிருந்தன. Reusable மற்றும் Needle என்று குறிப்பிடப்பட்டிருந்தன. நீடில் ரகம் ஐம்பதாயிரம் அமெரிக்க டொலர்களாகும். அதாவது ஐந்து இலட்சம் ரூபா. ரஷ்யத் தயாரிப்பான விமான எதிர்ப்பு ஏவுகணைக்குப் பயன்படுத்தப்பட்ட பரிபாஷையே நீடில் என்ற சொல்லாகும்.

உளவாளி மின்னஞ்சலோடு தனக்கு அனுப்பி வைத்த இரண்டு ஏவுகணைகளின் புகைப்படங்களையும் சதா புலிகளுக்கு அனுப்பிவைத்தார். ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதி அல்லது அதனை அண்டிய நாட்களில் அமெரிக்க உளவாளியும் சதாவும் தொலைபேசி மூலம் உரையாடினர். “அங்கேயிருக்கும் பெரியப்பாவுக்கு நாம் அதனைக் காண்பித்துள்ளோம். அவர் இதில் நன்கு ஆர்வம் காட்டி யுள்ளார்” என்று சதா அமெரிக்க உளவாளிக்குத் தெரிவித்துள்ளார். பெரியப்பா என்பது, பிரபாகரனைக் குறிக்கிறது. “புகைப்படங்களை மாமா பார்த்தாரா?” என்று உளவாளி கேட்டபோது, அவருக்கு மேலே உள்ளவர்களும் பார்த்தனர் என்று சதா பதிலளித்தார். அவருக்கு மேலேயுள்ள ஒரேயொருவர் தலைவர் மட்டுமே என்று சதா குறிப்பிட்டார். தலைவரென்பது பிரபாகரனைக் குறிக்கும்.

ஆகஸ்ட் 14ஆம் திகதி வாக்கில் கறுப்புச் சந்தை ஆயுத வியாபாரி என்ற போர்வையில் சட்ட அமுலாக்கல் அதிகாரியொருவர் சதாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். அந்த ஆயுத வியாபாரியைப் பற்றி தான் அதிகம் கேள்விப்பட்ட தாகவும், எனவே அவரை விரைவாக சந்திக்க விரும்பு வதாகவும் சதா ஆயுத வியாபாரிக்குத் தொலைபேசியில் கூறி னார். சகபாடியொருவர் வெளிநாட்டிலிருந்து வந்துள்ளாரென்றும் வியாபாரத்தை எப்படி முன்கொண்டு செல்வது என்பதை அறிந்து கொள்வதற்காக வியாபாரியைச் சந்திக்க அவர் விரும்புகிறாரென்றும் சதா சொன்னார்.



*கிபீர் விமானங்களைத் தாக்கக் கூடிய SA-18 ஏவுகணை. கிபீர் என்றால் ஹீப்ரு மொழியில் சிங்கக்குட்டி என்று அர்த்தம்.*

சதா, ஆகஸ்ட் 15ஆம் திகதி உளவாளியுடன் தொலை பேசி மூலம் தொடர்பு கொண்டு, அவர் வந்துவிட்டாரென்று சொன்னார். அதாவது, புலிகள் கொள்வனவு செய்ய விரும்பும் ஆயுதங்களின் பட்டியலைப் பெறுவதற்காக இலங்கைக்கு விஜயம் செய்த கனடாவிலுள்ள பெரிய மனிதரையே அது குறிக்கிறது. ஆகஸ்ட் 18ஆம் திகதி தங்களில் நால்வர் நியூயோர்க் வருவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும், மறுநாள் காலை ஆயுத உளவாளியைச் சந்தித்துப் பேசுவதாகவும் அவர் தெரிவித்தார். ஐந்து, பத்து நீடில்களை வாங்கிப் பயனில்லை, ஐம்பதிலிருந்து நூறு வரையானவற்றையே அவர்கள் வாங்க விரும்புகின்றனரென்று சதா தெரிவித்தார். பத்து ஏவுகணைகளை ஏவினால் இரண்டே தாக்குமென்று சதா உளவாளியிடம் சொன்னார்.

சதாவும் உளவாளியும் மேலும் பல தடவைகள் தொலைபேசியில் பேசிக்கொண்டார்கள். இந்த ஏவுகணைகளை இலங்கைக்குக் கொண்டு வந்து தர வேண்டியிருக்குமென்று சதா கூறினார். பணக்கொடுக்கல் பற்றிக் கேட்டபோது, அங்கு வரும் நபருக்கு அது பற்றித் தெரியும் என்று சதா பதிலளித்தார்.

“நீங்கள் (ஆயுத வியாபாரி) அவற்றை எமது இடத்திற்கு அனுப்பி வைத்தால் அங்கு அவற்றைப் பெற்றுக் கொள் வதற்கான வழிவகைகளை நாம் மேற்கொள்வோம்” என்றும் சதா கூறினார்.

ஆகஸ்ட் மாதம் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை சதாவும் வேறு மூன்று பேரும் (சஹில் தணி உட்பட) கனடாவின் எல்லையைத் தாண்டி கார் மூலம் நியூயோர்க்கிற்குச் செல்ல முயன்றனர். இடையில் அவர்கள் அமெரிக்க சுங்க அதிகாரியொருவரால் விசாரிக்கப்பட்டனர். நியூயோர்க்கிலுள்ள பபலோ என்ற இடத்திற்கு பிரமச்சாரிகளின் விருந்துபசார மொன்றிற்குச் செல்வதாக அவர்கள் பதிலளித்தனர். அரசாங்க தரவு வங்கி ஒன்றோடு இவர்களின் பெயர்களைச் சுங்க அதிகாரி ஒப்பிட்டுப் பார்த்து, அவர்களில் ஒருவர் கிரிமினல் குற்றம் புரிந்தவரென்று பதிவு செய்யப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்தார். அவர் அமெரிக்காவுக்குள் நுழைய அனுமதிக் கப்படவில்லை. ஏனையோர் அனுமதிக்கப்பட்டனர்.

அமெரிக்க சமஷ்டிப் புலனாய்வுப் பிரிவு உளவாளி, சதாவையும் அவரது இரு சகாக்களையும் லோங் ஐலண்டி லுள்ள ஓரிடத்தில் சந்தித்தார். அந்த இடத்திற்கு இரகசியப் பிரிவு அதிகாரியொருவர் காரில் வந்து சேர்ந்தார். பின்னர் உளவாளியும் சதாவும், சதாவின் இரு சகபாடிகளும் உளவாளியின் காரில் பயணம் செய்தனர்.

இரகசியப் பொலிஸ் அதிகாரி தனது காரில் அவரைப் பின் தொடர்ந்தார். மற்றொரு இரகசியப் பொலிஸ் அதிகாரி, இராணுவ உபகரணங்களில் நிபுணத்துவம் கொண்டவர் என்று தன்னை இனங்காட்டிக் கொண்டு வேறோர் இடத்தில் இவர்களைச் சந்தித்தார். இச் சந்திப்பின்போது எதனை வாங்க விரும்புகிறீர்களென்று சதாவையும் அவரின் சகபாடிகளையும் ஆயுத வியாபாரி கேட்டார். “கிபீருக்காக எமக்கு ஏதாவது தேவைப்படுகின்றன” என்று சதாவின் சகபாடிகளில் ஒருவரான தணி என்பவர் பதிலளித்தார். படகுகளை அழிக்கக் கூடிய ஆயுதங்களும் தேவையென்று தணி கூறினார். விலைகள் குறித்தும் பணத்தைச் செலுத்தும் வழிவகைகள் பற்றியும் தாம் முக்கியமாகத் தெரிந்து கொள்ள விரும்புவதாக ஆயுத வியாபாரி வலியுறுத்தினார். திங்கள் அல்லது செவ்வாய்க் கிழமை (2006.08.21 அல்லது 22ஆம் திகதி) பணம் வழங்கப் படுமென்று தணி பதிலளித்தார். சதாவும் சஹில் என்ற அவரது மற்றொரு சகாவும் பணம் கொடுக்கல் பற்றி அறிந்து கொள்வதற்காகத் தமது கையடக்க தொலைபேசி மூலம் ஒருவரோடு தொடர்பு கொள்ள பல தடவைகள் முனைந்தனர். சுவிஸிலுள்ள வங்கிக் கணக்கு, செயின்ட் குரொக்ஸ் அல்லது வேறு ஏதாவது கடற்கரை இடங்களிலுள்ள வங்கிக் கணக்குகள் பயன்படுத்துவது பற்றி அவர்கள் பேசினர். நிதிப் பொறுப்பாளர் போல் தன்னை இனங்காட்டிக் கொண்ட சஹில், தான் பயன்படுத்தும் வங்கிக் கணக்குகள் அடிக்கடி பணம் கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் கணக்குகளாக இருப்பதாகக் கூறினார். உளவாளியின் வங்கிக் கணக்குக்குப் பணத்தை வைப்புச் செய்வதாகவும் ஆயுத வியாபாரி, ஆயுதப் பரிவர்த்தனையை முடித்துக் கொண்ட பின்னர் பணம் அவரது பெயருக்கு மாற்றப்படுமென்றும் அவர்கள் பேசிக் கொண்டனர்.

இந்து சமுத்திரப் பகுதி கப்பலிலிருந்து கப்பலுக்கு ஆயுதங்கள் விநியோகிக்கப்படுவதை தாம் விரும்புவதாகத் தணி கூறினார். இலங்கையிலுள்ள புலிகளின் போராளிகளுக்கு ஏவுகணைப் பயிற்சி அளிப்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது. வீடியோ படக் காட்சிகள் மூலம் பயிற்சியளிக்கலாம். அல்லது தாமே நேரில் பயிற்சியளிப்பதாக ஆயுத வியாபாரி தெரி வித்தார். இறுதியாக ஏவுகணைகளைப் பயன்படுத்துபவர் களுக்கு பயிற்சியளிப்பதற்கு ஆயுத வியாபாரி இலங்கைக்கு வரவேண்டுமென்று தணியும் சஹிலும் கூறினர். ஆயுத வியாபாரியை தாம் பாதுகாப்பாக வைத்திருப்போமென்று அவர்கள் இருவரும் உளவாளிக்குத் தெரிவித்தனர்.

உங்களிடம் தற்போது ரஷ்யத் தயாரிப்பான SA-18 ஏவுகணைகள் உண்டா என்று ஆயுத வியாபாரி கேட்டார். இல்லை. இப்போது எங்களிடம் 7Sகள் தான் இருக்கின்றன என்று தணி பதிலளித்தார். அதாவது ரஷ்யத் தயாரிப்பான SA-7 ஏவுகணைகளையே அது குறிக்கிறது. விமானங்களைத் தாக்குவதில் அவை திறன்மிக்கவையாக இல்லையென்றும், ஒரு விமானத்தைத் தாக்குவதற்கு இரண்டு, மூன்று ஏவுகணைகள் தேவைப்படுகின்றனவென்றும் தணி கூறினார்.

ஏ.கே.-47 ரக ரைபிள்களை தாங்கள் வாங்க விரும்புவதாகவும், தற்போது தாங்கள் பாவிக்கும் சீனத் தயாரிப்பான ஏ.கே.-47 ரைபிள்கள் ‘குப்பை’ என்றும் தணி கூறினார். அமெரிக்க அல்லது ரஷ்யத் தயாரிப்பான ரைபிள்களையே அவர் குறிப்பாகக் கேட்டார். SA-18 கள் மற்றும் ஏ.கே.-47களின் விலை மற்றும் தேவைப்படும் தொகை பற்றி அவர்கள் கலந்துரையாடினர். முதலில் பத்து SA-18 ஏவுகணைகளையும் 500 ஏ.கே.-47 ரைபிள்களையும் கப்பலில் ஏற்றி அனுப்புவதென்று இரு தரப்புகளும் இணக்கம் கண்டன. ஏவுகண்ணகள், ரைபிள்கள் மற்றும் பயிற்சிக்கான செலவு, ஒன்பது இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கும் ஒன்பது இலட்சத்து முப்பத்தேழாயிரத்து ஐந்நூறு அமெரிக்க டொலர் களுக்குமிடையில் வருமெனவும் தெரிவிக்கப்பட்டது.

புலி உறுப்பினர்கள் மூவரும் SA-18 ஏவுகணையையும் ஏ.கே.-47 ரைபிள்களையும் பார்க்க விரும்புகின்றனராவென்று ஆயுத வியாபாரி கேட்டார். தணி ஆமென்று கூறினார். முதலாவது இரகசியப் பொலிஸ் அதிகாரி, மற்றவர்களின் துணையுடன் ஏவுகணையைக் கொண்ட மரப்பெட்டியொன் றினைக் கொண்டு வந்தார். அது சவப்பெட்டியைப் போல் காணப்படுவதாக சஹில் தெரிவித்த போது, தமாஷ் பேர்வழியான ஆயுத வியாபாரி சிரித்து விட்டு, அது சிலரைச் சவப்பெட்டிக்குள் போட்டுவிடுமென்று குறிப்பிட்டார். பின்னர் மற்றொரு இரகசிய பொலிஸ் அதிகாரி இரண்டு ஏ.கே.-47 ரக ரைபிள்களைக் கொண்ட பெரிய கார்ட் போர்ட் பெட்டியொன் றினைக் கொண்டு வந்தார்.

ஏவுகணை வைக்கப்பட்டிருந்த பெட்டி திறக்கப்பட்டபோது, தணி அதற்குள்ளிருந்த குழாயை எடுத்து, விமானமொன்றினைச் சுடுவதற்கு தோளில் வைத்து இலக்கு வைக்கும் அதே பாணியில் தனது தோளில் வைத்தார். எவ்வளவு தூரத்துக்கு இலக்கு வைக்கலாமென்றும், அதன் வேகம் குறித்தும் தணியும் அவரது சகாக்களும் கேள்விகளை எழுப்பினர். சதா, சஹில், தணி ஆகிய மூவரும் தனித்தனியாக ஏ.கே.47 ரைபிள்களைச் சுடும் நிலையில் வைத்துப் பார்த்தனர்.

சஹிலும் தணியும் வேறு பல ஆயுதங்கள் பற்றியும் இராணுவ உபகரணங்கள் பற்றியும் கேட்டனர். இராணுவ உபகரணங்கள் தொடர்பான தொழில்நுட்ப அதிகாரி போல நடித்த முதலாவது இரகசிய பொலிஸ் அதிகாரியிடம், டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள், எதிரி எங்கிருந்து சுடுகிறான் என்பதைக் கண்டுபிடிக்கக்கூடிய உபகரணங்கள் உண்டாவென்றும் அவற்றைப் பயன்படுத்தும் விதம் பற்றியும் தணி கேட்டார். கப்பல்களைத் தாக்கக் கூடிய ஏவுகணைகள் பற்றியும் அவர் விசாரித்தார். அமெரிக்கா மற்றும் பிரான்ஸில் தயாரிக்கப்பட்ட ஏவுகணைகள் ‘நாற்பதுக்கு நாற்பது’ என்பவை உட்படப் பல்வேறு ஆயுதங்கள் பற்றியும் சஹில் விசாரித்தார். அவர்களின் பேச்சுவார்த்தைகளைப் பார்க்கையில், ஒரே நேரத்தில் பல ஏவுகணைகளை ஏவக்கூடியதான உபகரணங்களை அவர்கள் கோரினரென்றுபடுகிறது. இரவில் தெரியக் கூடிய ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய விரும்புகிறீர்களா? என்று ஆயுத வியாபாரி கேட்டார். தணி ஆம் என்றார். பின்னர் இரவில் தெரியக்கூடிய உபகரணங்களை எடுத்து தணியிடம் ஆயுத வியாபாரி கையளித்தபோது அவை பழைய பாணி ஆயுதங்களென்றும் புதிய பாணியிலானவை தேவையென்றும் தணி பதிலளித்தார். இதன் பின்னர்தான் அதிர்ச்சியூட்டும் அந்தக் கணம் வந்தது. இராணுவ ஆயுதங்களில் நிபுணத்துவம் பெற்றவர் போல் நடித்த இரகசிய பொலிஸ் அதிகாரி சமிக்ஞை கொடுத்தார். புலிகளோடு தொடர்புடைய மூவரும் கைது செய்யப்பட்டனர். ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி நியூயோர்க்கின் கிழக்கு மாவட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 21 பக்க குற்றப்பத்திரத்தில் சந்தேக நபர்களைக் கைது செய்தமைக்கான விபரங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. இது தவிர மேலும் ஐந்து பேர் மீது 35 பக்க குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருக் கிறது. சதா, சஹில், தணி, யோகா ஆகிய நால்வர் மீதும் புலிகள் இயக்கத்திற்கு ஆயுத உதவி செய்வதற்கும் வளங் களை வழங்குவதற்கும் சதி செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

திருக்குமரன் சின்னத்தம்பி, டொக்டர் முருகேசு விநாயக மூர்த்தி, நாச்சிமுத்து சோக்கிரடீஸ் உட்பட மேலும் நால்வர் மீதும் இதே நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவர்கள் மீது இராணுவ உபகரணங் களைக் கொள்வனவு செய்ய முயற்சித்தமை, புலிகளுக்கு நிதி சேகரித்தமை, நிதி மோசடி ஆகிய குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

*-நன்றி :- சண்டே டைம்ஸ் (லண்டன்)*


# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

ஒரிஜினல் எழுத்தாளர்கள் ஒருவேளை சோற்றுக்கும் வக்கின்றி வகையின்றி மக்கி மடிந்து போயிருக்கிறார்கள்.

யார் யாரோ மேலுக்கு வர, இப்படி எத்துணையோ ஏணிகள் - சினிமாவின் அனைத்துத் துறையிலும் பயன்படுத்தப்பட்டு இருக்கின்றன.

ஏணிகளும், தோணிகளும் இருந்த இடத்திலேயே இருந்து கொண்டு மற்றவரை மேலேற்றுவதும்,



கரையேற்றுவதுமான காரியத்தைக் காலம் காலமாகச் செய்து கொண்டுதான் வருகின்றன.

ஒரு விழாவில் என் அருமை நண்பரும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தருமான திரு. அவ்வை நடராஜன் கீழ்க்கண்டவாறு பேசினார்:

'காற்று வாங்கப் போனேன்! - ஒரு
கவிதை வாங்கி வந்தேன்! - அதைக்
கேட்டு வாங்கிப் போனாள்! - அந்தக்
கன்னி என்ன வானாள்?'

"என்று கவியரசர் கண்ணதாசன் எழுதினார். இப்படி எழுத இன்று யாரேனும் இருக்கிறார்களா?" என்று என்னைப் பக்கத்தில் வைத்துக் கொண்டே திரு. அவ்வை நடராஜன் அவர்கள் சொன்னபோது, அவை ஆரவாரித்து அதை ஆமோதித்தது.

எனது அன்புச் சகோதரி திருமதி மனோரமா அவர்கள் ஒரு பத்திரிகையில் கீழ்க்கண்டவாறு எழுதினார்:

'கண்போன போக்கிலே-
கால்போகலாமா?
கால் போன போக்கிலே-
மனம் போகலாமா?
மனம் போன போக்கிலே -
மனிதன் போகலாமா?
மனிதன் போன பாதையை -
மறந்து போகலாமா?

-என்று கவிஞர் கண்ணதாசன் அற்புதமான பாட்டை எழுதினார். இப்ப வர்ற சினிமாவிலே, இது மாதிரி யாரு கருத்தோட பாட்டு எழுதுறாங்க?"

- என்று ஒரு வினாவையும் எழுப்பினார் திருமதி மனோரமா.

படத்துறையில் 35 ஆண்டுகளாகத் தொழில் புரிந்துவரும் எனக்கு மேலே பேசியர்களின் வார்த்தைகளால் எந்தவித மனத்தாங்கலும் ஏற்படவில்லை.

ஏனெனில், நண்பர் அவ்வை நடராஜனும், திருமதி மனோரமாவும் குறிப்பிட்டது போல் -

ஒரு பத்திரிகையில், பிரபல படாதிபதி திரு. ஜீ.வி. அவர்கள் -

'நிலவு ஒரு பெண்ணாகி
உலவுகின்ற அழகோ!
நீரலைகள் இடம்மா
நீந்துகின்ற குழலோ!'

- "என்று கண்ணதாசன் எழுதியதுபோல, கற்பனை வளத்தோடு எழுத இப்போது யார் இருக்கிறார்கள்?" என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

இது குறித்தும் நான் விசனப்படவில்லை: வெட்கப்படவில்லை.

ஏனெனில், நண்பர் நடராஜன் அவர்களும் மனோரமா அவர்களும், ஜீ.வி. அவர்களும் சிறப்பித்துப் பாராட்டிய மூன்று பாடல்களும் கண்ணதாசன் எழுதியவை அல்ல; அடியேன் எழுதியவை.

நல்ல பாடல் என்றாலே, அதைக் கண்ணதாசன் தான் எழுதியிருக்க வேண்டுமென்று மேற்சொன்ன மூவரும் நினைப்பதில் தப்பில்லை. இருப்பினும் எதை எவர் எழுதினார் என்று தெள்ளத் தெளிய அறிந்து வைத்துக் கொண்டு பேசுதல் தான் நயத்தகு நாகரிகமாகும்.

இதைத்தான் உடுமலை நாராயணக்கவி அவர்கள் பாட்டாகச் சொல்லியிருக்கிறார்.


பாடல் இதுதான்:

**'தெரிஞ்சாப் பேசணும்,**
**தெரியாட்டிப் கேக்கணும்!'**

(தொடரும்.......)




## உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....




உயர்மட்ட ராணுவ அதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் பேசப்பட்ட விஷயங்கள் பற்றிய குறிப்புகள் அடங்கிய தஸ்தாவேஜைப் பாகிஸ்தான் உளவாளியிடம் அவர்கள் கொடுத்தார்கள். என்றாலும், அந்நிய நாடுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள ரகசியங்கள் நம்முடைய அரசாங்க கட்டுக் கோப்பை பெருமளவு பாதித்துவிட்டது என்பதில் சந்தேகமில்லை.

பாகிஸ்தான் உளவுத் துறையினர் மிகவும் திறமையாகச் செயல்பட்டு கொண்டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. தாஷ்கண்ட் ஒப்பந்தம் கையெழுத்தான கையோடு பாகிஸ்தான் உளவுத்துறையினர் தங்களுடைய ஒற்றர் ஒருவரை இந்தியாவின் விமானப் படைத்தளம் அமைந்த இடத்துக்கு சுரேஷ் என்கிற பெயரில் அனுப்பி வைத்தார்கள். அவன் விமானத்தளத்திற்கு அருகிலேயே லாண்டரி ஒன்று வைத்து நடத்த ஆரம்பித்தான். அங்கிருந்தபடியே பாகிஸ்தானுக்கு ரகசியத் தகவல்களை அனுப்புவது அவனுடைய வேலை. ஆறு வருடங்கள் யாரும் கண்டு பிடிக்காமல் அவன் இந்த வேலையைத் தொடர்ந்து செய்து வந்தான். 1971இல் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையே போர் தொடங்கிய போதுதான் அவனுடைய நடவடிக்கைகள் நம்முடைய உளவுத்துறையினரின் கவனத்திற்கு வந்தன.


அதே சமயம் நம்முடைய உளவுத்துறையினரின் திறமையினையும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. காஷ்மீரில் அமெரிக்க பார்வையாளராய் செயல்பட்டு வந்தவர் ஒரு CIA அதிகாரி என்பதை நம்முடைய உளவுத் துறையினர் வெளிப்படுத்தினார்கள். அவர் உடனடியாக இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பட்டார். 1955இல் காஷ்மீர் இளவரசி என்கிற இந்திய விமானம், நடுவானில் வெடித்துச் சிதறியது. அந்த விமானத்தில் சீனப் பிரதமராக இருந்த சூ-என்-லாய் செல்லுவதாக இருந்தது. கடைசி நிமிடத்தில் அவர் அந்த விமானத்தில் செல்லவில்லை. அந்த விமானம் வெடித்துச் சிதறியதற்கு CIAயின் நாசவேலைதான் காரணம் என்பதை அப்போது நம்முடைய உளவுத்துறையின் தலைவராக விளங்கிய ஆர்.எஸ்.காவோ வெளிப்படுத்தினார்.

பொதுவாக CIA பல்வேறு அமைப்புகளை உருவாக்கி அதன் மூலம் செயற்படுவதுதான் வழக்கம். Asia America Free Labour Institute என்கிற ஒரு அமைப்பை 1979இல் அமெரிக்கர்கள் இந்தியாவில் தொடங்கினார்கள். அது CIA தொடர்புடையது என்பதை அறிந்த இந்திய அரசு, அதை மூடும்படியாக 1983இல் உத்தரவிட்டது. Asia Foundation American Peace Corps போன்ற அமைப்புகளும் CIA தொடர்புடையவை என்று சொல்லப்படுகிறது. இந்தியாவிலுள்ள சில அரசியல் கட்சிகளுக்கும் CIA நிதியுதவி அளிப்பதாக ஒரு கருத்து நிலவுகிறது. இதே மாதிரியாக KGBயும் சில போலி நிறுவனங்களை இங்கு நடத்திக் கொண்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

ஜான் கென்னத் கால்பிரெயித் அமெரிக்க பொருளாதார நிபுணர். அமெரிக்க நாட்டின் தூதராக இந்தியாவிலும் இருந்திருக்கிறார். அவர் வெளியிட்டுள்ள ஒரு கருத்தை இந்தியாவிலுள்ள எவரும் அலட்சியப்படுத்திவிட முடியாது. "இந்திய அதிகார வர்க்கம் இந்திய வெளிநாட்டு அலுவலகமும் மேற்கத்திய நாடுகளில் உளவுத்துறைகளின் விரிவாக்கமே" (Indian Bureaucracy at all levels and the foreign of fice were just an extension of Western inteligence Net Work ) இதை மிகைப்படுத்தப்பட்ட கூற்று என்று வேண்டுமானால் சொல்லலாமே தவிர, ஆதார உண்மைகள் இல்லாமல் இப்படி ஒரு அழுத்தமான அபிப்பிராயத்தை கால்பிரெயித் சொல்லியிருக்க வழியில்லை.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)




**மேலைநாட்டுப்** பாடகிகள் பலரும் திரைப்படங்களில் தலை காட்டும் காலம் இது.

இந்த வரிசையில் இப்போது இடம் பிடித்திருப்பவர் பெயோன்ஸ் நோவ்லஸ்!

இசைத்துறையில் இருக்கும் இந்தப் பாடகிகள் நடிப்புத் துறைக்கு வரும் போது முதலில் செய்யும் தலையாய பணி, தங்களது எடையைக் குறைத்துக் கொள்வதாகும்.

அப்படியானால் எடை கூடிய உடம்பை வைத்துக் கொண்டு தான் மேடைகளில் இந்த ஆட்டம் போடுகிறார்கள் போலும்!

மூன்று வாரங்களில் பெயோன்ஸ் 28 றாத்தல் எடையைக் குறைத்துக் கொண்டுள்ளாராம்.

எல்லாம் உணவு கட்டுப்பாடுதான் காரணம் என்கிறார்...

எடை குறைப்புக்கு தடை மேடை தான் போலும்...




**பிரபல** நடிகையும், மொடல் அழகியுமான ஜெனிபர் எனிஸ்டன் அண்மையில் அமெரிக்க தொலைக்காட்சிகளில் தோன்றி தனது இரசிகர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

37 வயதுடைய ஜெனிபர் சுமார் 10 வருடகாலமாக இரசிகர்களின் உணர்ச்சிகள் மிகுந்த கனவுக் கன்னியாக வலம் வருபவர்.

நன்றி தெரிவித்து உரையாற்றிக் கொண்டிருந்த ஜெனிபர் இடையில் கண்கலங்கியும் விட்டார்! காரணம் இவரது திருமணம் அண்மையில் விவாகரத்திற்கு போகும் அளவுக்கு விபரீதமாகிவிட்டது. பார்ட் பிட் என்பவரைத் திருமணம் செய்திருந்தார் இவர். இவரது கணவரான பிட், நடிகை என்ஜலினா ஜொலியுடன் ஜொலியாக இணைந்து விட்டதால் மனம் உடைந்து போய்விட்டாராம்!

என்றாலும் தான் முன்பு போலவே தனது கணவரை காதலிப்பதாகக் கூறும் இவர், அவர் ஒரு சிறந்த நடிகர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எல்லாமே நடிப்போ?




**துயவு** செய்து ஆடைகட்டி வரவும் என பிரபலப் பாடகி பிரிட்னிக்கு உத்தரவு போட்ட சீன நாட்டில் இடம் பெற்ற ஒரு மொடலிங் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சீன யுவதி இவர்.

ஆசை யாரைத்தான் விட்டது என்பது போல் சீனாவும் அது விட்டு வைக்கவில்லை...

சீனா சென்றேனும் தேட வேண்டியவை கல்வி மட்டுமல்ல என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டி இருக்கிறது!

**நடந்து** முடிந்த உலகக் கால்பந்தாட்டப் போட்டியின் இறுதி நாளன்று தங்களது நாடுகளைச் சார்ந்த வீரர்களை உற்சாகப்படுத்தும் நோக்கில் ஜேர்மன், இத்தாலி, பிரேஸில் போன்ற நாடுகளைச் சேர்ந்த மொடல் அழகிகள் தோன்றிய காட்சி இதுவாகும்.

நல்ல காலம் இத்தாலி இவர்களிடம் காணாமல் போகாமல் தப்பித்துக் கொண்டது!

இதில் இரண்டாவதாக இருப்பவர் ரொனால்டோவின் பெண் நண்பியாவார். மூன்றாமவர் பப்பனின் பெண் நண்பியாவார். இப்போது புரிகிறதா அன்று என்ன நடந்தது என்று... படத்தைப் பாருங்கள்!



# பூட்டிய அறைக்குள் சிக்கிய வன்முறைகளின் சூத்திரதாரி!



பொங்குதமிழின் பெயரால் பாடசாலை மாணவ, மாணவிகள் கல்விக் கூடங்களை விட்டு வீதியில் இறக்கப்பட்டபோது...

புரிந்துணர்வு ஒப்பந்த காலத்தில் யாழ்ப்பாணம் மெல்ல மெல்ல தன் போர்க் காயங்களை சுகப்படுத்திக்கொண்டு தேறிவந்தது உண்மை. அதேவேளை, புலிகள் யாழ்ப்பாணத்துக்கு அரசியல் வேலைகளுக்காக வந்த பிறகு மக்களின் எதிர்பார்ப்பு அதிகரித்ததும் உண்மை.

மக்களின் எதிர்பார்ப்பையோ, விருப்பங்களையோ புலிகள் பிரதிபலிக்காமல், அரசியல் பணி என்ற போர்வையில் மக்களின் இயல்பு வாழ்வைக் குழப்புவதையும் கட்டாயப் பயிற்சி கொடுப்பதையும் நோக்கமாகக் கொண்டு செயல்பட்டனர்.

தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு மாணவர்களை ஆயுதமாக்கினார்கள். மாணவர்களின் அறியாமை, வேகம், துடிப்பு என்பவை அவர்களைச் செதுக்கும் வண்ணம் மாற்றிப்போடும் என்பது புலிகளுக்குத் தெரியும். ஆகவே மூளைச் சலவை செய்ய மாணவர்களைத் தெரிவு செய்தனர். புலிகளால் நன்கு திட்டமிடப்பட்ட இந்த முயற்சி, புலிகளை முகமாலையூடாக தோளில் சுமந்து கொண்டு யாழ்நகருக்கு வருவதில் தொடங்கி, பொங்கு தமிழ், ஹர்த்தால், எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், வகுப்பு பகிஷ்கரிப்பு, மறியல், டயர் எரிப்பு என்று தொடர்ந்தது. மாணவர்களின் கல்வி தடைப்படுவதைப் பற்றிய கவலையில்லாமல் அவர்களை வீதியில் இறக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தன.

புலிகளின் உள்நோக்கத்தைப் புரிந்துகொண்டு சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இவ்வாறு அநேகமான பாடசாலை மாணவர்கள் பெற்றோர்களால்



யாழ். பல்கலைக்கழகம்

கட்டுப்படுத்தப்பட்டனர். பாடசாலை மாணவர்களுக்கு தலைமை தாங்குபவர்களாகவும், வழிகாட்டிகளாகவும் ஒரு சில பல்கலைக்கழக மாணவர்கள் இருந்தனர்.

யாழ். பல்கலைக்கழகம் தமிழ் மக்களுக்கான விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்திலிருந்து தனது பங்களிப்பை வழங்கிய பெருமைக்குரியது. புத்திஜீவிகளும், சமூக சிந்தனையாளர்களும் பல்கலைக்கழகத்திலிருந்து குரல் கொடுத்த காலம், பேராசிரியை ரஜினி திரணகம அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதோடு முடிவுக்கு வந்தது. அதன் பின்னர், புலிகளுக்கு மாணவர்களின் சக்தியை தமக்குச் சாதகமாகத் திருப்பிக் கொள்வதின் முக்கியத்துவத்தை உணர்த்தியது.

தமக்குச் சாதகமான பேராசிரியர்கள் இருப்பு, மாணவர் ஒன்றியத் தலைவர்களின் நியமனம் என்பவற்றைப் புலிகள் வெளியில் இருந்து கொண்டே தீர்மானித்தனர். இதை எதிர்த்த அல்லது விமர்சித்தவர்கள் மிரட்டப்படுவதும், எச்சரிக்கப்படுவதும் இன்னும் தொடர்கதையாகவே உள்ளது. அப்படி மாணவர் ஒன்றியத் தலைவராக இருந்து எஜமானர்களின் கட்டளைகளை நிறைவேற்றிப் புகழ்பெற்றவரே இன்று பாராளுமன்ற உறுப்பினராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

பதவி மாற்றப்பட்டபோதும் அவரது பணி பல்கலைக்கழகத்தை விடுவதாக இல்லை. அது மாணவர்களின் தலையெழுத்து. என்றாலும் நேரடியாக மாணவர் ஒன்றியத்தை நடத்த முடியாது என்பதால் தனது சொந்த இடமான முல்லைத்தீவைச் சேர்ந்தவரும் புலிகளின் சம்மதத்தைப் பெறக்கூடியவருமான பகிரதனை மாணவர் ஒன்றியத் தலைவராக கஜேந்திரன் நியமித்தார்.

> **மாணவர் ஒன்றியத் தலைவர் பயந்தார் என்பதை நம்ப இயலவில்லை. சரி, அப்படித்தான் பயந்து ஒளிந்திருந்தால் உள்ளுக்குள் பூட்டியிருக்கலாம். மாறாக, அவரை உள்ளே விட்டு, வெளியில் பூட்டப்பட்டுள்ளது. அதுதவிர, அவரிடம் யாழ். மக்களின் இயல்பு வாழ்வையும், மாணவர்களின் கல்வியையும் சீர்குலைத்த அத்தனை பினாமி அமைப்புக்களினதும் கடிதத் தலைப்புகளும் இருந்திருக்கின்றன. பேராசிரியர்களுக்கு, படைத்தரப்பிடம் எதுவும் கூறமுடியாத நிலையில் விசாரணைக்காக பகிரதனை படையினர் பிடித்துச் சென்றனர்.**

பகிரதன், மாணவர்களைக் கட்டாயப்படுத்துவது, படையினருக்கும், அரசுக்கும் எதிரான வன்முறைகளைச் செய்து மக்களின் இயல்பு வாழ்வைச் சீர்குலைப்பது போன்ற பணிகளை நெறிப்படுத்துபவராகச் செயல்பட்டார். இவர் வெளியில் இறங்கிச் செய்ய முடியாத பணிகளை, வெளியில் இருந்துகொண்டு செய்பவராக இருந்தவர் தொழில்நுட்ப அலுவலரான கலாராஜ் என்று தற்போதைய தகவல்கள் கூறுகின்றன. இவர்கள் இருவரும் இணைந்து கஜேந்திரனின் திட்டமிடலோடு யாழ்ப்பாணத்தில் பல குழப்பங்களைச் செய்துள்ளனர்.

உதாரணமாக - பொங்கி எழும் மக்கள் படை, எல்லாளன் படை, மக்கள் படை என்ற பினாமிப் பெயர்களில் யாழ்ப்பாணத்தில் நடந்த கொலைகள், வன்முறைகள்,

**சுபாஷ்**

தாக்குதல்கள், மிரட்டல்கள் என்பவற்றைச் செய்துள்ளனர் என்பதை கடந்த ஆகஸ்ட் மாதம் 18ஆம் திகதி பகிரதன் கைது செய்யப்பட்ட போது, அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட மேற்படி துண்டுப் பிரசுரங்களின் கடிதத் தலைப்புகள் உறுதிப்படுத்துகின்றன.

பல்கலைக்கழகத்தில் மாணவர் ஒன்றிய அலுவலகம் எப்போதும் பூட்டியே இருக்கும் அங்கு கஜேந்திரன் வந்தால் மட்டும்தான் அந்த அறை திறக்கப்படும். இதுதான் வழமை. இப்படியானதொரு சூழலில் இடைக்கிடை விரிவுரைகள் இல்லாத நேரங்களில் அங்கு வரும்

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

---





இரகசியப் பொலிஸார் தங்கள் வேலையைத் தொடங்கியது ஜனாதிபதி ஜோன்சனுக்கு அவருடைய உளவாளிகள் மூலம் தெரியவந்தது. அவர்களைத் தன்னால் தடுக்க முடியாது



என்பதை அறிந்து கொண்ட அவர் அவர்கள் வேலையை அவர்கள் பார்க்கட்டும் என்று அவர்களை அவரவர் வழியிலேயே விட்டு விட்டார். தான் இழைத்தது எல்லாம் பிழை என்று அவருக்குத் தெரியும். ஆனாலும் அவற்றை உடனடியாக நிறுத்திவிட்டு நல்லவராவதற்கு அவரால் முடியவில்லை. போனால் போகட்டும், நான் செய்வதைச் செய்து முடிக்க போகிறேன் என்று துணிந்து எல்லாக் காரியங்களையும் செய்ய முற்பட்டார். அவர் எதற்கும் பயப்பட மாட்டேன் என்று தனது வேலையைக் காட்டத் தொடங்கினார். இன்னும் சில தீவிர முடிவுகளை அவர் எடுக்கத் தொடங்கினார். அந்த முடிவுகள் மக்களை எவ்வாறு ஆட்டிப் படைக்கும் என்று அவர் அறிந்திருக்கவில்லை. உடனடியாக எல்லையில் படைகளைக் குவிக்கும் படி கட்டளையிட்டார். அக் கட்டளையினை விமானப் படைத் தளபதியும் ஏற்றுக்கொண்டார். ஜனாதிபதி சொல்வதை அவர் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் அவற்றை ஏன் என்று கூட யோசிக்காமல் அவர் ஏற்றுக் கொண்டார்.

ஆனாலும் அவர் மனதில் இது தேவையில்லாத பழிவாங்கலாகவே தோன்றியது.


என்ன தான் செய்தாலும் அவர்களை மிஞ்ச முடியாது என்று அவருக்குத் தெரியும். ஆனாலும் என்ன செய்வது என்று தன் படைகளை உடனடியாக ஆயத்தமாகுமாறு கட்டளையிட்டார். அவரின் கட்டளையை ஏற்றுக் கொண்ட அவர்களும் தங்கள் ஆயுதங்களுடன் வந்தனர். அவர்களுக்கு உடனே தாக்குதலில் இறங்கும் படி கட்டளையிட்டார். அவர்களும் தங்கள் தாக்குதல் திறமைகளைக் காட்ட ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். ஆனாலும் அவர்களின் தளபதிகள் மனமுடைந்து



போய்த்தான் இருந்தனர். போரினை காரணத்தோடு செய்தால் அவர்களும் தங்கள் திறமைகளை காட்டுவார்கள் என்பது மனோரீதியான உண்மை. இந்த உண்மை புரியாதவராக ஜனாதிபதி ஜோன்சன் நடந்து கொள்வது அனைவரையும் கவலைகொள்ள வைத்தது. விமானப்படைத் தளபதி கூட இதைப் பற்றி யோசிக்காமல் இல்லை.

படைகள் குவிக்கப்பட்டன. சண்டை இதோ அதோ என்று இருந்தது. போரினை எதிர்பார்த்து வியட்கொங் இராணுவத்தினரும் காத்திருந்தார்கள்.

(தொடரும்)



மண்ணும் காற்றும் புனலும் அனலும்
வானும் வந்து வணங்கிநில் லாவோ?
வண்ணு ளோர்பணிந் தேவல்செய் யாரோ?
வெல்க காளி பதங்களென் பார்க்கே.

- சுப்பிரமணிய பாரதியார்

# போலி வேடம்!



ஒரு வீட்டில் நிறைய புறாக்கள் வளர்த்து வந்தனர். அந்தப் புறாக்களை கண்ட காகம் ஒன்று மிகவும் பொறாமை கொண்டது. இந்தப் புறாக்கள் வெள்ளையாக இருப்பதால் தானே மக்கள் இப்படிக் கொஞ்சுகின்றனர். கறுப்பு நிறம் என்றாலே இந்த மக்களுக்கும் ரொம்ப இளக்காரம். ஆனால், தலைமுடி மட்டும் கறுப்பா இருக்கணும்னு நெனைக்கிறாங்கள். இவர்களை ஏமாற்றினால்தான் சரிவரும் என்று நினைத்தது.

ஒருநாள்....

அது அழிக்க முடியாத வெள்ளைச் சாயத்தை எங்கிருந்தோ தேடிக் கொண்டு வந்தது. அந்த வெள்ளைச் சாயத்தைத் தன்னுடைய இறகுகள் மீது பூசிக் கொண்டது காகம். இப்போது காகம் முழுவதும் வெள்ளை நிறமாக மாறிவிட்டது. உடனே அது வீட்டில் வளர்ந்து வரும் புறாக்களோடு போய் சேர்ந்து கொண்டது. புறாக்களுக்கும் அடையாளம் தெரியவில்லை. அதுவும் தங்களைப் போல் ஒரு புறாதான் என்று எண்ணிக்கொண்டன.

புறாக்களுக்குக் கிடைத்த மரியாதை எல்லாம் இப்பொழுது காகத்திற்கும் கிடைத்தது. புறாக்களை வளர்த்து வருபவர்கள் காகத்திற்கு நல்ல உணவு அளித்து அதனுடன் அன்போடு பழகினார்கள். காகத்திற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இப்படியே தன் வாழ்நாளைக் கழித்து விடலாம் என்று மனக்கோட்டை கட்டியது.

## பாப்பா முரசு சிறுகதை

ஒரு நாள் இரவு நேரத்தில் புறாக்கள் உற்சாகத்துடன் பெருங்குரல் எடுத்துக் கொக்கரித்து மகிழ்ந்தன. அதைக் கண்ட காகத்திற்கு தானும் அதுபோலச் செய்ய வேண்டுமென ஆசை ஏற்பட்டது.

அது தன் வாயைத் திறந்து புறாக்களைப் போல் கொக்கரிக்க முயன்றது. ஆனால், காகத்தின் இயற்கைக் குரலான "கா.. கா" என்ற குரல் ஒலி தான் காக்கையின் வாயில் இருந்து வெளிவந்தது.

அதைக் கேட்ட புறாக்கள் திடுக்கிட்டன. இவ்வளவு நாட்களாகத் தங்கள் இனத்தைச் சேர்ந்த ஒரு புறா என்று எண்ணிக்கொண்டிருந்தது உண்மையில்லை என்று அவைகளுக்கு விளங்கியது. கேவலம் ஒரு காகத்தை இத்தனை காலமாகத் தங்களைப் போன்ற புறா என்று எண்ணி ஏமாந்துவிட்டோம் என புறாக்கள் ஆத்திரம் அடைந்தன. உடனே அத்தனை புறாக்களும் ஒன்று சேர்ந்து காகத்தின் மீது பாய்ந்து அதனைக் கொத்தி விரட்டிவிட்டன. அவமானமும் வேதனையும் அடைந்த காகம், மீண்டும் தன் காக்கை இனத்திடம் சேரச் சென்றது. காகங்கள் புதிதாகத் தங்களிடம் வரும் அந்தப் புதிய பறவையை வெறுப்புடன் நோக்கின. "நீ இங்கு வராதே", என்று விரட்டின. காகம் பரிதாபமான குரலில், "நானும் உங்கள் இனத்தவன்தான். என் குரலைக் கொண்டு என்னை அடையாளம் தெரியவில்லையா? என்னையும் உங்களுடன் சேர்த்துக் கொள்ளுங்கள்", எனக் கெஞ்சியது.

"உன் குரல் எங்களுடைய குரல் போல இருக்கலாம். ஆனால், உன்னுடைய நிறத்தைப் பார்த்தால் எங்களோடு சேர்ந்தவனாகத் தெரியவில்லை. நீ எங்களுடைய விரோதியான ஒரு பறவையோ என சந்தேகம் ஏற்படுகிறது. காகத்தின் இறக்கைகள் கறுப்பாக இருப்பதுதான் இயற்கை. ஆகவே, நீ உடனே இந்த இடத்தை விட்டுப் போய் விடு," என்று விரட்டி அடித்தன. காகத்தின் நிலை பரிதாபத்திற்குரியதாகிவிட்டது. அது புறாக்களுடனும் சேர முடியவில்லை. தன்னுடைய இனமான காக்கைகளுடனும் சேர முடியவில்லை. இறைவன் தனக்குக் கொடுத்த நிறத்தில் திருப்தியடையாமல் தேவையில்லாத ஆசையால், தான் இந்தக் கதிக்கு ஆளானதை எண்ணி மிகவும் வருந்தியது காகம்.

# ஆத்திசூடி

## ஒப்புரவு ஒழுகு

நீ உலக நடைமுறைகளைத் தெரிந்து அதற்கேற்ப நடட.

-ஔவையார்

எஸ். நிரஞ்சலா, கண்டி.

# நோயற்ற வாழ்வு!


தூய்மையே உடலுக்குப்
பாதுகாப்பு!
துங்கி விழித்த பின்
பல்துலக்கு!
வாய்மையே
உள்ளத்துக்குப் பாதுகாப்பு!
பொய்மையை –
அறவே – நீ விலக்கு!
நலம் பெற சுகாதாரம்
அவசியமே!
நகக் கண்ணிலும்
துய்மை அவசியமே!
காலையும் –
மாலையும் – நீராட –
உடலும் – உள்ளமும் –
சிறந்திடுமே!



பசித்துப் புசிக்கக் கற்றுக்கொள்!
மசித்து உணவை
விழுங்கிக்கொள்!
ருசித்துச் சாப்பிடுதல் –
நலம் தருமே – நேரம்
கழித்துச் சாப்பிடுதல்
கேடன்றோ!
வேளா வேளைக்கு
உணவுண்டால் –
வேண்டா
நோய்களைத்
தவிர்த்திடலாம்!
காய்கறிகளைப் பெரிதும் –
உட்கொண்டால் – எக்
காலமும் – நலமாய்
வாழ்ந்திடலாம்!


# அதிசய உலகம்

## நான்கு கண்கள்!



அனெபல்பெட் என்ற மீன், மத்திய அமெரிக்காவில் காணப்படுகிறது. இதற்கு நான்கு கண்கள் உள்ளன ஒவ்வொரு கண்ணும் இரண்டு இரண்டாகப் பிரிந்துள்ளது. இந்த மீன் இனம் நீரின் மேற்பரப்பில் வசிக்கும். இதன் பாதி கண்கள் தண்ணீரின் மேல் பகுதியில் இருக்கும். தண்ணீரின் மேலே உள்ளதைப் பார்க்கும் தன்மை கொண்டவை. கீழ்ப் பகுதிக் கண்கள் தண்ணீரின் உள்ளே பார்க்கும் தன்மை கொண்டவை. இந்த மீனின் நீளம் 20 செ.மீ. இதன் இரை சிறிய பூச்சிகள், குட்டி மீன்கள். எதிரிகள் பயமுறுத்தினால் துள்ளிக் குதித்து தரையில் விழும். முட்டையிட்டு தன் உடம்பிலேயே வைத்துக் குஞ்சு பொரிக்கும் இயல்புடையது. மீன் குஞ்சுகள் உடனேயே நீந்த ஆரம்பித்துவிடும்!


## எறும்புகள்!



அவசர அவசரமாக எறும்புகள் ஊர்ந்து செல்வதைப் பார்த்திருப்பீர்கள். எறும்புகளில் பெண் வேலைக்கார எறும்பு இனம் 'டெம்னோதோராக்ஸ் அல்பிபென்னிஸ்' என்று அழைக்கப்படுகிறது. இந்த எறும்பினம் புதிதாக வேலைக்குச் சேரும் வேலைக்கார எறும்புகளுக்கு எப்படி உணவைச் சேகரிப்பது என்று சொல்லித்தரும்.

இதில் டீச்சர் எறும்பு முன்னே செல்லும். மாணவ எறும்புகள் டீச்சரின் பின் கால்களைத் தொட்டுக்கொண்டே செல்லும். அப்படிச் செல்லும்போது சில நேரங்களில் டீச்சர் எறும்புகள் சீக்கிரமாகச் சென்றுவிட்டால் உடனே மெல்ல வேகத்தைக் குறைத்து, மாணவ எறும்புகள் வந்து டீச்சர் எறும்பின் பின் காலைத் தொடும் வரை காத்திருக்கும். பிறகு டீச்சர் எறும்பு ஊர்ந்து சென்று உணவு தேடுவது எப்படி என்று சொல்லித்தரும். பல மிருகங்களும் இப்படித்தான் ஒன்றைப் பார்த்து ஒன்று கற்றுக் கொள்கின்றன.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 12.09.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 660**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 658

**பரிசுக்குரியவர்:**
சகானுஜா தியாகேசன், இல. 55, மேல் மாடி தெரு, மட்டக்களப்பு.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| பூஸ்ரா, UKG, கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, முகத்துர்வாரம், கொழும்பு - 15. | ஈ. பிரவீனா, 34/54, வில்பிரட்டவுன் ஹட்டன். |
| ரா. திவ்யா, 175 லோவர் வீதி, பதுளை. | வை. ஜும்லாட் பிர்ளா, மக்குளூற்று, வெள்ளைமணல். |
| ஜே. பி. சுதர்ஷிலா, 32/2 கோணவல வீதி, ரஜவெல. | கே. பிரசாந்தி, 89, பாபா பதி இல்லம் ரொசிட்டா வீடமைப்புத் திட்டம், கொட்டகலை. |
| எம். சொப்னா, இல.31, ரொசிட்டா பஜார், கொட்டகலை. | அப்துல் மாஜித், தரம் 3A, அல் இக்மா கல்லூரி, கொழும்பு - 12 |
| எப். மசியா மஃஜூட், B-14 1/7, சொய்சாபுர, மொரட்டுவ. | ஏ. ஜே. பாத்திமா பஸ்னா, 61.1A/1, மகாபுத்கமுவ, கொடிகாவத்த. |

# சில விடுகதைகள்

1. அலைஅலையென இங்கும் அங்கும் அலைந்து கொண்டிருப்பான், அவ்வப்போது குரல் கொடுத்தபடி - அவன் யார்?
2. சிவப்பன் இருக்கும் இடத்தில் கறுப்பனும் இருப்பான் அவர்கள் யார்?
3. ஓங்கி வளர்ந்தவள் ஒரு பிள்ளை பெற்றாள், உயிரை விட்டாள் -அவள் யார்?
4. ஒருவனுக்கு உணவிட்டால் ஊரையே கூட்டுவான் -அவன் யார்?
5. ஒற்றைக் கண்ணன் ஓடி ஓடி வேலி அடைப்பதில் மன்னன் -அவன் யார்?
6. வான தேவனுக்கு வைத்த வண்ணப்பொட்டு பூமி முழுக்க ஒளிருது, உள்ளம் குளிருது -அது என்ன?
7. ஓங்கி வளர்ந்தவன் உயரத்தில் குடை பிடிக்கிறான் -அவன் யார்?
8. கண்ணீர் விட்டபடி எரிந்தாலும் கனிவான வெளிச்சம் தருவான் -அவன் யார்?
9. இளமையில் பச்சை, முதுமையில் சிவப்பு -அவன் யார்?
10. அங்கும் இங்கும் ஆடுவான், அசையாமல் நிற்கும்போது சரியான கணக்கு -அவன் யார்?

**விடைகள்**

1. கடல் அலை
2. நெருப்பு - புகை
3. வாழை மரம்
4. காகம்
5. தையல் ஊசி
6. நிலா
7. தென்னை மரம்
8. மெழுகுவர்த்தி
9. மிளகாய்
10. தராசு


# தகவல் பெட்டி

# கொழுத்த மரை




இந்த மரைக்கு இரண்டே இரண்டு வயதுதானாகிறது. கொழுத்த மரைப் போட்டியில் இதற்கு முதலிடம். இதன் உரிமையாளரான டொன் வேஜஸ் என்பவர், புல், பூண்டுகளைத் தான் ஊட்டி வளர்த்ததாகக் கூறுகிறார். மூன்று வயதாகும்போது அது இன்னும் கொழுத்துவிடுமென்று கட்டியம் கூறுகிறார். டொன் வேஜஸ்.

# ஜெற் கார்




நீங்கள் படத்தில் காண்பதை 'ஜெற் கார்' என்று அழைக்கிறார்கள். பத்துத் தொன் எடையும் 52 அடி நீளமும் இரு ஜெற் என்ஜின்களையும் கொண்ட இதனை, ஆண்டி கிறீன் என்ற பிரிட்டிஷ் யுத்த விமானி, நெவாடோ என்ற இடத்துக்கு வடக்கேயுள்ள பாலைவனப் பகுதியில் ஓட்டிச் சாதனை படைத்திருக்கிறார். 1963 முதல் ஐந்து தடவைகள், 400, 500, 600 என்ற மைல் வேகத்தில் (மணித்தியாலத்துக்கு) ஓடிச் சாதனை படைத்த, கிராய்க் பிறீட்லோவ் என்பவரை, ஆண்டி கிறீனின் குருவான ரிச்சர்ட் நோபள் என்பவர் தோற்கடித்தார். தனது குரு 14 வருடங்களுக்கு முன்னர் ஏற்படுத்திய சாதனையை முறியடித்திருக்கிறார் ஆண்டி கிறீன்.

# இடைவிடா விமானப் பயணம்



அமெரிக்காவின் சென் பிரான்சிஸ்கோவைச் சேர்ந்த ஸ்ரீவ் பொஸெற், கோடி, கோடியாகச் சம்பாதித்து வைத்திருக்கிறார். இருந்தாலும் மனிதருக்கு ஏதாவது சாதனை புரியவேண்டுமென்ற மனோவியாதி. முதலில் பலூனில் பறந்து சாதனை புரிந்த ஸ்ரீவ், தன்னந்தனியனாக விமானத்தில் உலக வலம் வந்து சாதனை படைத்திருக்கிறார். இதில் மூக்கின் மேல் விரலை வைக்கக் கூடிய ஆச்சரியமென்னவென்றால், மனிதர் எங்குமே விமானத்தைத் தரையிறக்காமல் ஒரே மூச்சிலேயே பறந்து முடித்திருக்கிறார். 23 ஆயிரம் மைல்களை 67 மணித்தியாலங்களில் சுற்றி வந்திருக்கிறார். எரிபொருள் நிரப்புவதற்குக் கூடத் தரையிறங்கவில்லையென்றால் பாருங்களேன். கன்சாஸ் என்ற இடத்தின் மத்திய பகுதியில் இவர் தரையிறங்கும்போது, ஆயிரக்கணக்கான மக்கள் வாயைப் பிளந்தபடி வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

# முறியடிப்பு



வானத்தில் பறந்து கொண்டிருக்கும் பலூனிலிருந்து பரசூட் மூலம் ஏக காலத்தில் தரையில் குதித்துச் சாதனை புரிந்திருக்கிறார்கள்

நியூசிலாந்துக்காரர்கள் நெதர்லாந்தின் கிழக்குப் பகுதியிலுள்ள மார்க்கெல்லோ என்ற குக்கிராமத்தில் குதித்துச் இச் சாதனை புரியப்பட்டிருக்கிறது. இரண்டு கிலோ மீற்றர்கள் உயரத்திலிருந்து இருபது பேர் ஒரே நேரத்தில் பரசூட் மூலம் பாய்ந்தார்கள். பிரிட்டிஷ்காரர்கள் 16 பேர் பாய்ந்து நிகழ்த்திய சாதனை இதன் மூலம் முறியடிக்கப்பட்டது.



சிங்கப்பூரில் மகப்பேற்று மற்றும் பெண் நோய் சிகிச்சை முறைகள் மிக நீண்டகாலமாகவே இடம்பெற்று வருகின்றன. இதனால் அங்கு பெண்களின் ஆயுட்காலம் அதிகரிப்பதோடு பிரசவத்தின் போது ஏற்படும் மரணங்கள், பிரசவத்தின் பின் ஏற்படும் மரணங்களின் விகிதம் கணிசமாகக் குறைந்துள்ளது. 'பிடொன்ஸ்' என்றழைக்கப்படும் பயிற்சி பெறாத பாரம்பரிய மருத்துவிச்சிகளே பழைய காலங்களில் மகப்பேற்றைக் கவனித்து வந்தனர். 19ஆம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப வருடங்களிலும் வீடுகளிலேயே பிரசவங்கள் பார்க்கப்பட்டு வந்தன. 1960கள் வரை பொதுவான மருத்துவர்களே மகப்பேற்றைக் கவனித்து வந்தனர். 1920 களிலேயே மகப்பேற்று மருத்துவிச்சிகள் தொடர்பான ஆரோக்கியமான நடைமுறை அங்கு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. 1940களிலிருந்து 1960கள் வரை மகப்பேற்று மற்றும் பெண் நோய் மருத்துவப் படிப்பு, மருத்துவப் பின் பட்டப்படிப்பு ஆகியவை சிங்கப்பூருக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. இன்று சிங்கப்பூரில் 230 பெண் நோய் மற்றும் மகப்பேற்று வைத்திய நிபுணர்களும், 40 பயிற்சி மருத்துவர்களும் உள்ளனர். பெண்களின் ஆயுட்காலம் இதனால் கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளது.




# நட்சத்திரக் கல்யாணம்



**த**மிழ் திரையுலக நட்சத்திரங்கள் சூர்யா - ஜோதிகா, மனோஜ் - நந்தனா, செல்வராகவன் - சோனியா அகர்வால், மற்றும் அருண்குமார் ஆகிய 7 பேருக்கு திருமணம் நடக்கிறது.

சூர்யா - ஜோதிகா திருமணம் இந்த மாதம் (செப்டெம்பர்) 11ஆம் திகதி அடையார் பார்க் ஓட்டலில் நடக்கிறது. இது காதல் திருமணம். 'பூவெல்லாம் கேட்டுப்பார்' படத்தில் அறிமுகமான ஜோதிகா, 'வாலி', 'குஷி', 'காக்க காக்க', 'சந்திரமுகி', பேரழகன், வேட்டையாடு விளையாடு உட்பட பல படங்களில் நடித்துள்ளார்.

சூர்யாவும், ஜோதிகாவும் சேர்ந்து நடித்தபோது நட்பு ஏற்பட்டு பிறகு காதலானது. முகூர்த்தம் நெருங்கி வருவதையடுத்து திருமண வேலைகளில் இருவரும் தீவிரமாக உள்ளனர். உறவினர்கள், நண்பர்களுக்கு அழைப்பிதழ் கொடுக்கும் பணியில் மும்முரமாக இருக்கிறார்கள்.

மனோஜ் - நந்தனா திருமண தேதியும் நிச்சயமாகி உள்ளது. மனோஜ் பிரபல டைரக்டர் பாரதிராஜாவின் மகன். தாஜ்மகால், பல்லவன், வருஷமெல்லாம் வசந்தம் உட்பட பல படங்களில் நடித்துள்ளார். மனோஜை மணக்கும் நந்தனா, சக்சஸ், ஏ.பி.சி.டி. படங்களில் நடித்துள்ளார். இவர்கள் திருமணம் வருகிற 19ஆம் திகதி நடக்கிறது.

நடிகை சோனியா அகர்வாலை, டைரக்டர் செல்வராகவன் மணக்கிறார். காதல் கொண்டேன் படத்தில் சோனியா அகர்வால் அறிமுகமானார். 7 ஜி ரெயின்போ காலனி, புதுப்பேட்டை, திருட்டு பயலே உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். இவர்கள் திருமணம் டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் நடக்கிறது.

நடிகர் அருண்குமார் திருமணமும் டிசம்பர் 1ஆம் திகதி நடக்கிறது. பிரபல நடிகர் விஜயகுமாரின் மகனான இவர், பிரியம் படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமானார்.

முறை மாப்பிள்ளை, கண்ணால் பேசவா, ஜனனம், பாண்டவர் பூமி, அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது போன்ற படங்களில் நடித்துள்ளார். தற்போது நடிகர் அர்ஜுன் தயாரிக்கும் 'தவம்' படத்தில் கதாநாயகனாக நடித்து வருகிறார்.

மதுரையைச் சேர்ந்த டாக்டர் மோகனின் மகள் ஆர்த்தியை அருண்குமார் மணக்கிறார். இவர்கள் திருமண நிச்சயதார்த்தம் இம் மாதம் (செப்டெம்பர்) 11ஆம் திகதி சென்னையில் நடக்கிறது.

சி னி வி சி ட்

# ரஜினியும் கமலும் சினிமா கடவுள்கள் : இந்தி நடிகர் சுனில் ஷெட்டி புகழாரம்

**இ**ந்தி சினிமா நட்சத்திரங்களில் பழகுவதற்கு மிகவும் இனிமையானவர் என்று பெயர் பெற்றவர் சுனில் ஷெட்டி. அவருக்கு மிகவும் பிடித்த நகரங்களில் ஒன்று சென்னை.

இயக்குநர் ப்ரியதர்ஷனின் படம் ஒன்றில் அவர் நடிக்கிறார். அந்தப் படத்தின் படப்பிடிப்பில் கலந்து கொள்வதற்காக சென்னை வந்த அவர், ஓட்டல் உபகரண அறிமுக விழாவில் கலந்து கொண்டார். அப்போது சென்னை பற்றியும் இங்குள்ளவர்கள் பற்றியும் சிலாகித்து பேசினார்.

சுனில் ஷெட்டி கூறியதாவது :-

ப்ரியதர்ஷன் படத்தில் நடிக்கும் ஒவ்வொரு முறையும் நான் சென்னை வந்து போவேன். எனக்கு மிகவும் பிடித்த சென்னை நகருக்கு வந்து போகும் வாய்ப்பினைத் தருவதற்காக நான் அவருக்கு நன்றி கூற வேண்டும். இங்கு வந்து பணிபுரிவது ஒரு சிலிர்க்க வைக்கும் அனுபவமாக இருக்கும்.

இங்கு உள்ளவர்கள் தொழில் பக்தி மிகுந்தவர்கள். இவர்கள் செய்யும் வேலையின் தரம் ஆச்சர்யப்பட வைக்கிறது. சினிமா உலகின் கடவுள்களான ரஜினியும் கமலும் இங்கே இருப்பது சென்னைக்கு கூடுதல் சிறப்பு. மொத்தத்தில் சென்னை என் போற்றுதலுக்குரிய இடம்.

ப்ரியதர்ஷனுடன் தொடர்ந்து பணிபுரிவது மகிழ்ச்சியான, பெருமையான விஷயம். நாங்கள் இருவரும் சேர்ந்து சிறந்த படங்கள் பல தந்திருக்கிறோம்.

இவ்வாறு சுனில் ஷெட்டி கூறினார்.







# பீதியில் பாவனா!

'**நா**ன் கடவுள்' படத்தில் எப்படி நடித்து முடிக்கப் போகிறோமோ என்ற பீதியில் இருக்கிறார் பாவனா.

பாலா இயக்கத்தில் உருவாகவுள்ள 'நான் கடவுள்' படத்தில் முதலில் நடிக்க இருந்த அஜீத் தூக்கப்பட்டு ஆர்யா ஹீரோவாகியுள்ளார். மேலும் அஜீத்திடம் கொடுத்த காசை கந்து வட்டி கும்பல் ஸ்டைலில் பறித்துள்ளது பாலா தரப்பு.

இந்தச் சர்ச்சை இன்னும் ஓயாத நிலையில், படத்தின் நாயகி பாவனாவுக்குப் புதிய கவலை பிறந்துள்ளதாம். ஆரம்பமே இப்படி அடிதடியாக இருக்கிறதே, இனி அடுத்தடுத்து என்னவெல்லாம் வருமோ? நமக்கு என்ன பிரச்சினையெல்லாம் வருமோ? என்று கவலைப்பட ஆரம்பித்துள்ளாராம் பாவனா.

தமிழ் இளம் நடிகர்களில் முன்னணியில் உள்ள அஜீத்துக்கே இந்த நிலை என்றால், நாளை நமக்கு ஒரு பிரச்சினை என்று வந்தால் பாலாவின் ஆட்களும் கந்து வட்டி கும்பலும் எப்படியெல்லாம் நடப்பார்களோ என்ற பீதியில் உள்ளாராம் பாவனா.


தொடர்ந்து நடிக்கலாமா அல்லது எதையாவது சொல்லி கழன்று விடலாமா? என்ற தீவிர சிந்தனையில் அவர் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

பாவனாவின் பயம் இப்படி இருக்க, பாலாவுக்கு புதுக் கவலை பிறந்துள்ளது. அஜீத் விவகாரம் தொடர்பாக தனக்குச் சிக்கல் வரலாம் என்று அவர் கவலைப்படுகிறார்.

இதற்கிடையே பாலாவின் இந்தப் படத்திலிருந்து ஆர்யா விலகிவிட்டதாக கோடம்பாக்கத்தில் பரபரப்பு கிளம்பியது.

இது குறித்து ஆர்யாவிடம் கேட்டபோது, யாரோ இவ்வாறு வதந்தி கிளப்பிவிட்டுள்ளார்கள். நான் நடித்து வரும் 'ஆட்டோ' படம் சில நாட்களில் முடிந்துவிடும். அதன் பின்னர் சரணின் இயக்கத்தில் 'வட்டாரம்' படத்தில் நடிக்கிறேன். இம்மாதம் அது முடியும். இதையடுத்து பாலாவின் படத்தில் நடிப்பேன் என்றார்.






## விஜயகாந்த் நடிக்கும் 'சபரி'

ஸ்ரீ சரவணா கிரியேஷன்ஸ் சார்பில் சேலம் ஏ.சந்திரசேகரன், 'கஜினி' பட வெற்றிக்குப்பின் பிரமாண்டமான பொருட்செலவில் 'சபரி' என்ற புதிய படத்தைத் தயாரிக்கிறார்.

இப்படத்தின் கதை, திரைக்கதை எழுதி இயக்குபவர் சுரேஷ். இவர் அரசு, கம்பீரம் ஆகிய வெற்றிப் படங்களை இயக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை ஏற்றிராத முற்றிலும் மாறுபட்ட கதாபாத்திரத்தில் விஜயகாந்த் இதில் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகிகளாக ஜோதிர்மயி, மாளவிகா ஆகியோர் நடிக்கின்றனர்.

இப்படத்திற்கு பட்டுக்கோட்டை பிரபாகர் வசனம் எழுத, வை. என்.முரளி ஒளிப்பதிவு செய்ய, மணி சர்மா இசையமைக்கிறார்.

இப்படத்தின் படப்பிடிப்பு சென்னை, புதுவை, ராமேஸ்வரம், ராஜஸ்தான், ஜெய்ப்பூர் ஆகிய இடங்களில் தொடர்ந்து நடைபெற உள்ளது.




## சினி துளிகள்

✦ 'சித்திரம் பேசுதடி' இயக்குநர் மிஸ்கின், தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்னத்துக்கு ஒரு படம் பண்ணுகிறார். கதாநாயகன் ரவிகிருஷ்ணா.

✦ ஜோதிகிருஷ்ணா இயக்கிய 'கேடி' படத்துக்கு மூன்று படத்துக்கான அளவுக்கு காட்சிகளை எடுத்து விட்டார்களாம். படத்தின் இயக்குநர் ஜோதிகிருஷ்ணா எடிட்டிங்கில் உட்கார்ந்து நீளத்தை வெட்டித் தள்ளி வருகிறார்.

✦ தேவயானியின் இளைய தம்பியான நகுல், ஷங்கரின் 'பாய்ஸ்' படத்தில் 5 நாயகர்களில் ஒருவராக நடித்திருந்தார். மிகவும் குண்டாக இருந்த அவருக்கு தொடர்ந்து வாய்ப்புகள் கிடைக்கவில்லை. தற்பொழுது, உடல் எடையைக் குறைத்து, 'காதலில் விழுந்தேன்' என்ற படத்தில் கதாநாயகனாக நடித்து வருகிறார்.



## ஜோதிகா படம் ரிலீஸ்

ஜோதிகா - சூர்யா நடித்த சில்லுன்னு ஒரு காதல் ரிலீசுக்குத் தயாராக உள்ளது.

செப்டெம்பர் 11ஆம் திகதி இவர்களது திருமணம் நடக்க இருக்கிறது. எனவே திருமணத்தையொட்டி படத்தை வெளியிட்டால் பேசப்படும் என்று கருதி செப்டெம்பர் 7இல் ரிலீஸ் செய்கிறார்களாம்.

புதுப்பெண் ஜோதிகா திருமணத்துக்கு முன் நடித்து முடித்துக் கொடுத்துள்ள 'மொழி' படமும் நன்றாக வந்துள்ளதாம். இதில் ஜோதிகா ஊமை வேடத்தில் அட்டகாசமாக நடித்துள்ளதாகப் படக்குழு பாராட்டுகிறது.

டப்பிங்கிலும் அவரே ஊமையாக ஆ...ஊ...என்று கத்திப் பேசினாராம். இந்தப் படத்தில் ஜோதிகாவுக்கு விருது நிச்சயம் என்கிறார்கள் நடிப்பைப் பார்த்தவர்கள்.



சுஷ்மிதா சென்

## விஜய் முந்தினார்!

தெலுங்கில் இருபது நாட்களுக்கு முன்பு பொம்மரிலு என்ற தெலுங்குப் படம் வெளியாகி சக்கை போடு போடுகிறது. சித்தார்த், ஜெனிலியா நடித்துள்ளனர்.

இப்படத்தின் தமிழ் உரிமைக்குக் கடும் போட்டி நிலவியது. பெரிய கம்பெனிகள் இப்படத்தை வாங்க முயற்சித்தன. ஆனால் விஜய் முந்திக் கொண்டார். தமிழ் ரீமேக் உரிமை விஜய் கைவசம் வந்துள்ளதாம்.

## ஏங்கும் கமலினி!


கமலுடன் 'வேட்டையாடு விளையாடு' படத்தில் நடிப்பில் விளையாடியிருக்கும் வங்கத்து மங்கை கமலினி முகர்ஜி, கிளாமராக நடிக்க ரெடியாக இருக்கிறாராம். ஆனால் இவரது குடும்ப குத்துவிளக்கு தோற்றத்தைப் பார்த்துவிட்டு இயக்குநர்கள்தான் அந்த மாதிரி கேரக்டர்களை தரமாட்டேன் என்கிறார்களாம்.

இதனால் ரொம்ப விசனத்தில் இருக்கிறார் கமலினி.

ஆரம்பத்தில் விளம்பரங்களில் கலக்கியவர் கமலினி. அப்படியே ஆந்திராவில் வந்து வேட்டையாடிக் கொண்டிருந்தவரை 'வேட்டையாடு விளையாடு' படம் மூலம் தமிழுக்குக் கொண்டு வந்தார் கமல்.

இந்தப் படம் தவிர கமலினிக்கு வேறு புதிய படம் ஏதும் இதுவரை புக் ஆகவில்லை. அச்சச்சோ, என்னாச்சோ என்று கமலினியைப் பிடித்து விசாரித்தோம்.

"நடிக்க மாட்டேன் என்றெல்லாம் இல்லை. கொஞ்சமாக ஒரு கேப் விட்டுள்ளேன். இப்போது மீண்டும் விளம்பரங்களில் தீவிர கவனம் செலுத்தி வருகிறேன். அதுக்காத்தான் சினிமாவுக்கு சின்னதாக டாட்டா காட்டியுள்ளேன்" என்று விளக்கினார்.



குடும்பப் பாங்காகத்தான் நடிப்பேன் என்று கண்டிசன் போடுறீங்களாமே? என்று ரொம்ப முக்கியமான கேள்வியைக் கேட்டபோது....

"யார் சொன்னது. நான் அப்படியெல்லாம் சொன்னதே இல்லை. கிளாமராகவும் நடிக்க நான் தயாராகத்தான் இருக்கிறேன். ஆனால் அப்படிப்பட்ட ரோல்கள் இன்னும் என்னைத் தேடி வரவில்லை. எனக்கு அப்படி ரோல்கள் கிடைக்காதது வருத்தமா இருக்கு. வந்தால் நிச்சயம் துணிச்சலாக நடிப்பேன்" என்று வயிற் றில் 'பீர்' வார்த்தார்.

கமலினி, தமிழில் கமலுடன் நடித்த கையோடு தெலுங்கில் 'கோதாவரி' என்ற படத் திலும் நடித்தார். அது படு பிக்கப் ஆகி பெரும் ஹிட் ஆகி விட்டதாம்.

கமல் என்று கேள்வியை ஆரம்பிக்கு போதோ...கமலினி முகத்தில் கிலோ கணக் கில் ரசகுல்லா பெருமை.

'கமல் சாருடன் நடித்தது ரொம்ப சந் தோஷமா இருந்தது. அதில் சின்ன ரோல் தான். இருந்தாலும் எனது நடிப்பு ரசிகர் களைக் கவர்ந்துவிட்டது. ஏகப்பட்ட பாராட் டுக்கள். ஸோ, தமிழிலும் தொடர்ந்து நடிக்க ஆசையா இருக்கேன" என்கிறார் கமலினி.

யூஸ் பண்ணிக்கப்பா!






## பெண்ணே நீ...

ஆயிரம் ஆயிரம் பெண்களின்
அழகுக்கு கவி பாடிய
கவிஞர்கள் - உன் அழகை
ஒப்பிடும்படி ஒரு கவிதை
எழுதவில்லையே...

எட்டு அதிசயங்களை
கண்ட இந்த உலகம்
நடமாடும் அதிசயம் - நீ
எனப் போற்ற மறந்தது ஏன்...?

பெண் என்றால் பூக்கள் - என்று
சொல்லும் கூற்று
உனக்கு மட்டும்தான்
பொருந்தும்!

உன்னை அழகுபடுத்த
ஆபரணங்கள் தேவையில்லை
அவைகளை அழகுபடுத்த - உன்
விரல்போதும்...!

பெண்களுக்குப் பெருமை
சேர்க்கும் பேரழகியை
அல்லவா ஈன்றெடுத்தாள்
இந்தப் பூமியில்...
உன் தாய்.

*-பி.சசி,*
*நானாட்டான்.*

## விடிவு வேண்டும்!

சுனாமி,
அனர்த்தப் பிடிகளுக்குள்
ஏற்கனவே துவண்ட
இதயங்கள் நாங்கள்
மீண்டும் மீண்டுமேன்
தீப்பட்ட காயத்தில்
தேள்வந்து கொட்டுவதாய்
எங்கள் மீதான
உங்கள் யுத்தங்கள்?

தேசத்தாயில்
திடீர் திடீரென விழுந்து
வடு படுத்தும் செல்வீச்சுக்கள்
எங்கள்
நிம்மதி தொலைத்து
விரட்டிவிடும் அது
எங்களை.

அப்பாவிகள் நாங்கள்
எந்நிலத்தில் சென்று
நிம்மதிப் பெருமூச்சுவிடுவோம்?
யுத்தத்தினதும்
இயற்கை அனர்த்தத்தினதும்
மடிகளில் நாங்கள்
எப்படித் துயிலுவோம்?

ஆயுதப் போரும்,
இயற்கை அனர்த்தங்களும்,
மனுக்குலத்தையழித்து
கோரப் பசிதீர்க்கும்
இப்பாரினில்
விடிவு ஒன்று இல்லையோ
ஏகனே?

*-எச்.எம்.எம்.பாஹிம்,*
*இறக்காமம் - 01.*

## 'வார்' விளையாட்டு

நீங்கள்
குழுக்களாய் பிரிந்து
குல்மால் பண்ணி
வார் அடித்து விளையாட,
எங்கள் விளைபுலந்தான்
ஏற்புடைய ஆடுகளமோ?
நீங்கள் -
ஒருவரையொருவர்
துரத்தி யடிப்பதும்,
சிறைப் பிடிப்பதும்...
இன்று, நேற்று தொடர்ந்த
விளையாட்டா...?
உங்கள் உக்கிரப் பாய்ச்சல்
ஓட்ட ஆட்டங்களால்
எங்கள் நாற்றங்காற்
பயிர்கள் அல்லவா
நாச மாகின்றன.

சிநேக பூர்வமாய்த்
தொடர வேண்டிய
விளையாட்டு
சில்லறைத் தகராறுகளால்
நடுத் தீர்ப்பாளரையும் மீறி
கை கலப்பில்
முடிவதுதான்...
காரிய சித்தியாமோ?

நியாயம்,
யார் பக்கம் என்பது
வெற்றியின் அளவு
கோலாயினும்,
நியாயத்தை,
யார் மதிக்கின்றார் என்பதே
தோல்வியாளர் கூடப்
பெறும் பெறுமதியான
விருதாகும்.

*-ஏறாவூர்*
*அனலக்தர்.*

## நிரந்தர சமாதானமே...!

உருக்கப்பட்ட நாங்கள்
உருவாக்கப்பட
மாட்டோமா?

இறந்த காலத்தில்
இறந்தவர்களை எல்லாம்
இலங்கை கண்டு
கொண்டதா?

கண்டனங்கள் விடுவதும்
காட்சிப்பொருளாய்
வருவதும்
வாடிக்கையான
வேடிக்கைதானே?

வாழ்வாதாரத்திற்கு
வழிதேடும் மக்களுக்கு
வழிகள் இருக்கின்றனவா?
சமாதானம் வெளிவர...!

போர்முனைகள்
ஓய்ந்தாலும்
யுத்த நிறுத்தம்
வந்தாலும்
நித்தமும் வேண்டுவது
நிரந்தர சமாதானமே...!

*-அ.ரவி,*
*மட்டக்களப்பு.*

## தட(டு)மாற்றம்

வழியெங்கும் வற்றாத -
கண்ணீருடன்
வரி வரியாய் வற்றாது -
மக்கள் திரள்
இரத்தக் கறைபடிந்த
பாதைகள்
செல்களால் சல்களான -
மனிதர்கள்
மருங்குகளில் -
புழுதியால் நிறமிழந்த
வயல்வெளிகள்.

வானம் பார்த்துக்
கிடக்கும்
அன்னையர்களின்
சடலங்கள்
குடலறுத்து கிடக்கும்
குழந்தைகளின்
சடலங்கள்
வயிறுகள் நிறைய
செல்களுடன் என் -
சகோதரர்கள்
தாயின் மார்பைத்
தொட்டழும் -
குழந்தைகள்
சேற்றினுள் புதையுண்டு
போன
சிறுவர்களின்
ஜனாஸாக்கள்.

தலை தெறிக்க
ஓலமிட்டபடி
வாலையுயர்த்தி ஓடும் -
மந்தைகள்
வயிறுகள் நிறைய
வைத்த
புல்வெளிகளில் நிறைந்த
ஜனாஸாக்கள்
காற்றை ஈரப்பதனாக்கும்
- நதிகள்
இரத்த வாடை
வீசுகின்றது - இன்று.

கலாசாலைகளெல்லாம்
கல்லறைகளாக
பொருளாதாரமெல்லாம் -
போக்கிரிகளான
தத்தாரியர்களால்
தந்திரமிட்டு
தட்டிப்பறித்த குள்ள நரிக்
கூட்டத்தினரால்
இன்று தடம்பெயர்ந்து -
மக்களற்ற
பாலைநிலமாக முத்தூர் -
நகரம்
இன்று.

*-எஸ்.மொஹமட் அன்ஸார்,*
*முள்ளிப்பொத்தானை.*

## வேதனையற்ற முகங்களை...!

வேதனையற்ற
முகங்களைத் தேடுகிறேன்...
காணவில்லை
கவலையாக இருக்கிறது.

ஆர்முகத்தைப் பார்த்தாலும்
அழுகை நிறைந்ததாக
அவலங்கள் கொண்டதாக...

ஓ...
என் வாழ்க்கையில்
மட்டுமல்ல
எல்லோர் வாழ்க்கையிலும்
விதியும் போரும்
விளையாடித் தான்
இருக்கிறது.

சீதனக் கொடுமையினால்
சீரழியும் ஏழைக் கன்னியரும்...
சீ வேண்டாம்
வாழ்க்கையென்று
வாழ்வின் விளிம்பில்
நிற்கும் காளையரும்...

பிள்ளைகளை இழந்த
பெற்றோர்களும்...
பெற்றோர்களை இழந்த
பிள்ளைகளும்...

கணவரை இழந்த
மனைவியரும்...
மனைவியரை இழந்த
கணவர்களும்...

வயிறு கழுவ
வழியேதுமில்லாமல்
வாடுகின்ற ஏழைகளும்...
வேதனையின் உருவமாகவே
வெந்துழலும் தோட்டத்
தொழிலாள மக்களும்...

பட்டம் பெற்று
பல வருடங்கள்
கடந்த பின்னும்
பதவியொன்று கிடைக்காமல்
பட்டமரமாய் நின்றேங்கும்
பட்டதாரிகளும்...

எட்டாக் கனி தானா?
சமாதானம் என்று கேட்டு
கொட்டாவி விட்டேங்கும்
நம்மினிய மக்களும்...

ஆர் முகத்தைப் பார்த்தாலும்
அழுகை நிறைந்ததாக...
அவலங்கள் கொண்டதாக...

நம் நாட்டில்
வேதனைகள் நிறைந்த
முகங்களைத் தவிர
வேறென்ன தான்
மலிந்து கிடக்கின்றன...?

நாளை கருவாகி உருவாகும்
நம் பிஞ்சுகளின்
முகங்களிலாவது
புன்னகைப் பூக்களைக்
காண முடியாதா...?
புதுத் தேசமாய் ஈழம்
உருவாகாதா...?
ஆம், வேதனையற்ற முகங்களைத்
தேடுகிறேன்.

*-கன்னிமுத்து,*
*வெல்லபதியான்.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

(பயிற்சிக் களம்)

## சிறப்புக் கவிதையும் - கவிஞரும்

*கவிதை உலகில் காலடி வைத்தவர்களில் சிலர் மங்கிப் போனதும் உண்டு. தம்முடைய திறமையை உலகறிய வைத்தவர்களும் உண்டு. அந்த வகையில் வளர்ந்து வரும் கவிஞர்களான புதுவை ஞானம் மற்றும் யாழன் ஆதி எழுதிய இரு கவிதைகளை உங்களுக்காக சிறப்புக் கவிதை எனும் பகுதியில் தருகின்றோம். இவர்களின் கவிதைகளில் இருக்கும் வித்தியாசத்தை நீங்கள் வாசிக்கும் போதே உணர்ந்து கொள்வீர்கள்.*

## யாரைத்தான் நம்புவதோ தோழா!

செத்த மாட்டிலிருந்து
சென்னா குன்னிவரை
கழித்துக் கட்டியதையே
சீவனமாய் உண்டு
செருப்புத் தைப்பது முதல்
செத்த பிணத்தை எரிப்பது வரை
அத்தியாவசியமான அனைத்தையும்
செய்து
தீண்டத் தகாதவனாய்
நீண்ட காலம் வாழ்ந்து வந்து...
திருட்டுத் தடியர்கட்கு
இருப்பிலே சொர்க்கம் வைத்து
இகலோகம் வெறுத்து
பரலோகம் போக எண்ணி
சுடலை மாடனையும்
பாவாடை ராயனையும்
முனியனையும் இருளனையும்
இளப்பமாய் ஒதுக்கி
மேல் சாதிச் சாமியாம்
சிதம்பர நடராசனைத் தேடி
தீப்பட்டுக் கருகிய நந்தன் முதல்
திசை மாறிப் போனாய் நீ!
திசை மாறிப்போன நந்தன் தான்
தீவிர வாதியென்று
ஆலயப் பிரவேச நாடகம் நடித்த
மேல் ஜாதிப் பக்கிரி காந்தியை நம்பி
ராம் - ரஹீம் பாடியும்
ராப்பட்டினி பகல் பட்டினி.
உன்னில் சில பேர்கள்
குலாக்களின் எச்சில் இலைகளுக்கோ
கூச்சல் குழப்பம் இழுபறி!
இலை கிடைக்காதோர் இணைந்ததே
ஹரிஜன் லீக்
ஏ...பாவிகளே! இளைப்பாற வாரீர்! -
என்ற
சீமை நாய்களின் ஏமாற்று வித்தையில்
சுவிஷேஷம் தேடிப் பெற்ற பெயரோ
வேதப் பறையன்!
அல்லுலேயா...ஆமாஞ்சாமியோவ்!
ஆரிய மாயையை எதிர்த்த வீரிய
இயக்கமாம்
ஈரோட்டுப் பாதையும் தனித் தனியே
'உம்... சுடுகாட்டுப் பாதை போல
மற்றும்
உம்...டீக்கடைச் சிரட்டை போலே!
காஞ்சி தந்த கரிபால்டி தென்னாட்டு
பெர்னாட்ஷா
இந்நாட்டு ரூசோவின் கருணை மிகு
ஆட்சியில் தான் கருக்கப்பட்டது
நாற்பத்து நான்கு
வெண்மணி வித்துக்கள்...குடிசையுடன்!
இரத்தம் செத்து குருடாகிப் போனேன்
ஆயினும்
மறக்க முடியுமா அந்த மாபாதக அரக்கு
மாளிகையை!
ஓடினேன்...ஓடினேன்! வாழ்க்கையின்
ஓரத்துக்கே ஓடினேன்
ஒக்காளம் நிற்கவில்லை! இன்று
நினைத்தாலும்
புரட்டுகிறது வாயும் வயிறும்!
செங்கொடி விற்று சோறு தின்னும்
மானம் கெட்ட வலதும் இடதும்
சாதித்ததெல்லாம் சாதிக்
கொடுமைக்கோர் நினைவுச் சின்னம்
அதன் பேரால் வசூல் நிறையவே!
ஆக...
சிதம்பரம் - வெண்மணி இன்னும் யான்
அறியா
எத்தனையோ அக்கினிக் குண்டம் தாண்டி
விழுப்புரம் மார்க்கம் வந்தவரை நீ
நம்பியது
பழி வாங்கும் பூசாரிகளையே...
பூனூலுடனும் - அது இல்லாமலும்.
உன்னில் படித்தவர்கள் உன்மத்தம்
பிடித்தவர்கள்
கோட்டா சுகத்தினிலே கொட்டாவி
விடுபவர்கள்
நீலக்கொடி காட்டி நீட்டி முழக்குபவர்
வெள்ளைக் கொடி காட்டுகிறார்
உம்மைக் கொள்ளை அடிப்பவர்க்கே.
யாரைத்தான் நம்புவது தோழா
என்கிறாயா?
உன்னைத்தான் உன்னைத்தான்
உன்னைத்தான்
தன்னை நம்பு தலை விதி மாறும்!

*-புதுவை*
*ஞானம்*

## புணர்தலும் புணர்தல் நிமித்தமும்

மெலிய அரும்பாய் அவிழ்ந்த
காமத்தின் முகில்களை
தன் திசைகளில் நகர்த்துகிறது
உனக்கான காற்று.

கொஞ்சம் கலைந்த கேசத்தின்
இழைகளை
கோதிவிடுகையில்
கலைந்துப் போனது இரவு.

தகிக்கும் உடல்களில்
நனையும் நிலவை
ருசித்து சுகிக்கிறது இருளின் காமம்.

வனத்தில் கீச்சிடும் பூச்சியின்
நெடுமூச்சில் கலைகிறது
கிளையில் தத்தும்
கிளிகளின் ஊடல்.

இமைகளின் ஓரத்தில் கசியும்
நட்சத்திரங்களைக் கண்டு
மாலை தொடுக்கிறேன்
உன் வாசனையோடு.

செந்நிற வண்ணத்தில்
பூப்பூத்திருந்தது
தோட்டத்தில் கள்ளி
அன்றுதான் நீயே தொடங்கினாய்
முத்தங்களிலிருந்து.

காலைச் சூரியனின்
ஒளிக்கீற்றுகளில் கமழ்ந்தது
ராத்திரியின் கலவி வாசனை.


பிரிந்த போதுகளில்
ஞாபக மூட்டுகின்றது
ஓங்கிப் படர்ந்த
நம் ஊரின் அரச மரம்.

அழுந்திய பற்கடிகளில்
புரிகிறது
மென்மைக் காதல்.


கருமைப் பதிந்த வானின்
வெளியெங்கும் புரண்டுக் களித்து
கதவுகளைத் திறந்து
உள் வருகிறது காற்று
உன்னாடையில் நான் பூப்பித்த
முத்தப் பூக்களுக்காய்.

*-யாழன் ஆதி*

## பேனா நண்பர் பகுதி - பேனா நண்பர் பகுதி - பேனா நண்பர் பகுதி



பெயர் :எம். ஏ. எம். ஸர்ராஜ்
வயது : -
முகவரி : கெப்பரோல், தபால் பெட்டி இல. 5536, டோகா, கட்டார்.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், கணனி விளையாட்டு



பெயர் : U. L. ஆசிக்
வயது : 16
முகவரி : கச்சக் கொடித்தீவு, கிண்ணியா, - 05, திருகோணமலை.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.



பெயர் : S. ஜெகன்
வயது : 22
முகவரி : கெப்பரோல், தபால் பெட்டி இல. 5536, டோகா, கட்டார்.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல் தொலைக்காட்சி பார்த்தல்.



பெயர் : எஸ். தேவதாசன்
வயது : 22
முகவரி : கெப்பரோல தபால் பெட்டி இல. 5536 டோஹா, கட்டார்.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி பார்த்தல், பத்திரிகை வாசித்தல்




# சிசேரியன் தேவைப்படுவது எப்போது?

இயல்பான பிரசவத்தில் கர்ப்பப்பை வாய் திறந்து குழந்தை வெளியேவருகிறது. அதில் சிக்கல் இருந்தால் சிசேரியன் கைகொடுக்கும். கர்ப்பிணியின் அடிவயிற்றைக் கீறி, கர்ப்பப்பையைக் கிழித்து, உள்ளேயிருக்கும் குழந்தையை வெளியே எடுப்பதுதான் சிசேரியன் முறை. தாய், சேய் இருவரின் உயிரையும் காப்பாற்றுவதே இம்முறையின் அடிப்படை நோக்கம்.



தாயாகிற பெண்ணின் கூபக எலும்புக்கட்டு குறுகி இருந்தால் குழந்தை, வரும் பாதையும் குறுகிவிடும். அதனால் இயல்பான வழியில் குழந்தை வெளிவருவது சாத்தியம் இல்லாது போகும். அந்நிலையில் சிசேரியன்தான் தீர்வாக அமையும்.


குழந்தையின் தலை பெரிதாகவும், தாயின் கூபக எலும்பு குறுகியும் இருந்தால் அப்போதும் சிசேரியன் சிபாரிசு செய்யப்படும். குட்டையான பெண்கள் தாம் பெரும்பாலும் இப்பிரச்சினைக்கு உள்ளாவது.

கர்ப்பப்பையின் அடிப்பாகத்தில் நஞ்சு இருநீதால் இயற்கைப் பிரசவத்தின் போது உதிரப்போக்கு அளவை மீறி - தாய், சேய் இருவரின் உயிருக்குமே ஆபத்தை உண்டாக்கலாம். அதனால் பிரச்சினைக்குத் தீர்வாக சிசேரியனைத்தான் நாடவேண்டி இருக்கும்.

பொதுவாக, பிரசவத்தின் போது குழந்தையின் தலைதான் முதலில் வெளியே வரும். சில அசாதாரண நிலைகளில் குழந்தையின் கால் முதலில் வெளிவரத் துவங்கும். அப்போதும் பிரசவத்தை நல்லவிதமாக செய்து வைக்கவே மருத்துவர்கள் முயல்வார்கள். குழந்தையின் எடை அதிகமாக இருந்தாலோ, உடல் கனமாக இருந்தாலோ, குழந்தைப் பிறப்புப் பாதையில் ஏதேனும் தடங்கல் ஏற்பட்டாலோ சுகப்பிரசவம் சாத்தியப்படாது. சிசேரியன் அவசியமாகிவிடும்.

பிரசவத்தின்போது குழந்தைக்கு எந்தவிதத்திலாவது மூச்சுத் திணறல் ஏற்படுமானால் உடனடியாகக் குழந்தையை வெளியே எடுக்க சிசேரியன்தான் வழியாக அமையும்.

சுகப்பிரசவம்



சிக்கலாகிவிடுவதற்கு கர்ப்பப்பையில் குழந்தை குறுக்காக இருத்தல், சாய்ந்து இருத்தல், நச்சுக்கொடி முதலில் வருதல், கை முதலில் வருதல் போன்றவை காரணங்களாக அமைந்து விடுகின்றன.

அடிக்கடி கருச்சிதைவான பெண்களுக்கு சுகப்பிரசவம் ஆவது கடினம். சிலருக்கு வயிற்றிலேயே குழந்தைகள் இறந்து பிறந்திருக்கும். அத்தகையவர்களுக்கு முன்னதாகவே நாள் குறித்து சிசேரியன் செய்கிறார்கள்.

தாய்க்கு இரத்த அழுத்தம் அதிகமாகி, உடம்பு முழுதும் வீங்கி இருந்தால் பிரசவத்தில் தாய்க்கு வலிப்பும், மயக்கமும் வரக்கூடும். அதனால் தாய், சேய் இருவர் உயிருக்கும் ஆபத்து நேரலாம். இதனைத் தடுக்க சிசேரியன் உதவும்.

கர்ப்பப்பை வாயில் புற்று நோய், அல்லது கட்டி கர்ப்பப்பை அருகில் கட்டி இருந்தால் சிசேரியன்தான் உகந்தது.

நீரிழிவு, இருதயநோய் உள்ள கர்ப்பிணிகளுக்குச் சிசேரியனையே மருத்துவர்கள் சிபாரிசு செய்வார்கள்.

ஒருமுறை சிசேரியன் செய்துகொண்ட பெண், அடுத்த முறை சிசேரியன் மூலம்தான் குழந்தை பெறவேண்டும் என்பதில்லை. ஆனால் நீடித்த நோய் உபாதை உள்ளவர்களுக்கு இரண்டாவது முறையும் சிசேரியன் செய்யும்படி இருக்கும்.

இப்போதெல்லாம் மருத்துவர்கள் யாருக்கு சிசேரியன் தேவை என்பதை முன்கூட்டியே ஸ்கேன் மூலம் கண்டறிந்து சொல்லிவிடுகிறார்கள்.

சிசேரியன் செய்து கொண்ட தாய் குறைந்தது ஒன்றரை மாதம் ஓய்வில் இருக்க வேண்டும்.

அதன் பிறகு வீட்டிலும், அலுவலகத்திலும் வழக்கமாகச் செய்கிற வேலைகளைத் தொடரலாம்.

சிசேரியனுக்குப் பிறகு மூன்று ஆண்டுகள் கருவுறாமல் இருப்பது நல்லது.

ஒரு தாய்க்கு மூன்று முறைக்கு மேல் சிசேரியன் செய்வதில்லை.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது —ஷோபா—

## ஆப்பிள் ஐஸ்கிரீம்

**தேவையான பொருட்கள் :-**

தோல் சீவி, விதை நீக்கிய பெரிய ஆப்பிள் பழம் - 2
சீனி - 4 மேசைக்கரண்டி
பால் பவுடர் - 4 மேசைக்கரண்டி
மில்க் கிரீம் - 1 கப்
பால் - 1 கப்
கிராம்பு - சிறிதளவு (பொடியாக்கப்பட்டது)
முந்திரி - 8


**செய்முறை :-**

மேலே சொல்லப்பட்ட ஆப்பிள் பழத்தையும், சீனியையும், பால் படவுரையும், மில்க் கிரீமையும், பாலையும் ஒன்றாகச் சேர்த்துக் கலந்து - முட்டையை அடிப்பது போல் அடித்துக் கொள்ள வேண்டும். அத்துடன் கிராம்புத் தூளையும், முந்திரிப் பருப்பையும் கூடச் சேர்த்துக் கொள்ளவும்.

ஒன்றில் ஒன்று நன்றாக இவை கலந்தவுடன் இதனை ஐஸ் ஆக்கக்கூடிய ட்ரேக்களில் ஊற்றி, அதனை அப்படியே பிரிட்ஜில் வைத்து விடவும். இரண்டு மணி நேரம் கழித்து, இதனை வெளியில் எடுத்து விடவும். மிகவும் சுவையாக இருக்கும்.

# குறும்பு செய்யும் குழந்தையை அடக்குவது எப்படி?

உங்கள் குழந்தை அளவுக்கு அதிகமாக சேட்டை பண்ணுகிறதா? சொன்ன பேச்சை கேட்கமாட்டேன் என்கிறதா? சரியாகப் படிக்கவில்லையா?



அடித்துத் துவைத்து எடுத்தால் எல்லாம் சரியாகி விடும் என்று எண்ணாதீர்கள். ஆற அமர செயல்பட்டால் அழகு பையனாகி விடுவான்.

அக்கம் பக்கத்தில் உள்ள அமைதியான குழந்தைகளோடு உங்கள் குழந்தையையும் விளையாடவிடுங்கள்.

மூளைக்கு வேலை தரும் விளையாட்டுப் பொருட்களை வாங்கித்தந்து விளையாடக் கற்றுக்கொடுங்கள்.

வெண்டைக்காய், வெங்காயம், கேரட் ஆகியவற்றை அவ்வப்போது பச்சையாக உண்ணக் கொடுங்கள்.

தினசரி கைகளை நீட்டுவது, கால்களை விரிப்பது, யோகாசனங்கள் போன்ற உடற்பயிற்சிகளை உடன் இருந்து சொல்லிக் கொடுங்கள்.

சாமி கும்பிடுகிற வாக்கில் சுமார் 15 நிமிடங்கள் அமைதியாக...ஒரே இடத்தில் அமரச் செய்து...தியானம் செய்ய வைக்க முயலுங்கள்.

* ஒவ்வொரு நல்ல பழக்கமாக, நிதானமாகக் கற்றுக்கொடுங்கள். அவசரப்பட வேண்டாம்.

உறவினர்கள், நண்பர்கள் மூலம்



உங்கள் குழந்தையைக் கண்டிக்கச் சொல்லுங்கள். கட்டுப்படுவான்.

மொத்தத்தில் மனரீதியாக மெது, மெதுவாக அவனைத் திருத்தப்பாருங்கள்! அதுவே அவன் திருந்துவதற்குரிய சரியான வழியாகும்.


# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

38

பெயர் : ....................

முகவரி : ....................

BL

தே.அ. அட்டை இல : ....................

கையொப்பம் : ....................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.

மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

ஒருவர் ஒன்றுக்கு மேற் பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி
முரசு பரிசுப் போட்டி -38
தினமுரசு வார மலர்
த.பெ.இல - 1772
கொழும்பு.

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:
12.09.2006

பரிசுப் போட்டி இல - 36
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி


லூ. மொறிஸ் ரெலா
32A, நீர்பாசவீடுதி, வீகாரை வீதி, திருகோணமலை.

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.




எழுதியது: ஹென்ரி ஷாரியர்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

**எ**ங்கள் கட்டடத்துக்கும், ஜூலட் இருந்த கட்டடத்துக்கும் நடுவே ஒரு தோட்டம் இருந்தது. அதில் ஏராளமான பூக்கள். ஜூலட் ஒரு ஜன்னலின் பக்கம் தலையைக் காட்டினான். அவன் கையில் ஒரு சிலேட்டுப் பலகை இருந்தது. அதில் சோக்குக் கட்டியால், 'சபாஷ்!' என்று எழுதி எங்களுக்குக் காட்டினான். ஒரு மணி நேரம் கழித்து அட்டெண்டெண்ட் அவனிடமிருந்து ஒரு கடிதம்



கொணர்ந்தான். "நான் உங்கள் வார்டுக்கு வர முயற்சி செய்துகொண்டிருக்கிறேன். என் முயற்சி பலிக்கவில்லை என்றால் நீங்கள் என் வார்ட்டுக்கு வர முயற்சி செய்யுங்கள். உங்கள் வார்டில் எதிரிகள் இருக்கிறார்கள். அவர்கள் கண்ணில் மண்ணைத் தூவி விடலாம்."

மரச் சுத்தியை உபயோகிப்பதில் ஜூலட் வல்லவன். அவனுக்குச் 'சம்மட்டிக்காரன்' என்று பெயர் ஏற்பட்டதே அதனால் தான்.

நாங்கள் ஆஸ்பத்திரிக்கு வந்து ஒரு வாரம் ஆகிவிட்டது. நேற்று அட்டெண்டெண்டுக்கு இருநூறு பிராங்க் கொடுத்தேன். எங்கள் இருவரையும் ஆஸ்பத்திரியில் வைத்திருப்பதற்கான வாராந்தப் பணம் அது. சிநேகிதம் செய்துகொள்ள வேண்டுமென்பதற்காக, புகைப்பதற்கு எதுவுமில்லாது இருந்தவர்களுக்குப் புகையிலை வழங்கினோம். கரோரா என்று அறுபது வயதுக் கிழவன் ஒருவன். மார்ஸேல்ஸிலிருந்து வந்தவன். தேகாவுக்குச் சிநேகிதமாகிவிட்டான். பணம் நிறைய இருக்குமானால் தப்புவதற்கு முயற்சி செய்யாமலே இருக்கும்படி அடிக்கடி இந்தக் கிழவன் சொல்லிக் கொண்டிருந்தானாம்.

"அந்தக் கிழம் இங்கே இருபது வருடமாக அடைந்து கிடக்கிறது. அதிலிருந்தே தெரியவில்லையா அது பெரிய கோழை என்று? அதன் பேச்சைக் காதில் போட்டுக் கொள்ளாதே," என்றேன் நான். ஆனால் தேகாவுக்கு அந்தக் கிழத்தின் பேச்சுத்தான் அதிகம் பதிந்திருந்தது. தேகாவுக்குத் தைரியமூட்டுவது பெரும் பாடாயிருந்தது எனக்கு.

கால்கானியைப் பார்க்க ஏற்பாடு செய்யும்படி ஸீராவுக்கு ஒரு குறிப்பு அனுப்பினேன். அதற்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. அடுத்த நாளே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டான் கால்கானி. கம்பித் தடுப்புக்கள் இல்லாத அறை அது. கால்கானியின் பணக்குழாயை அவனிடம் திருப்பிக் கொடுக்கவேண்டும். எப்படிச் செய்வது என்று யோசித்தேன்.

அட்டெண்டெண்டிடம் நான் கட்டாயம் கால்கானியுடன் பேசியாக வேண்டியிருக்கிறது என்று கூறினேன். பன்னிரெண்டு அடிக்க ஐந்து நிமிஷம் இருக்கும்போது கால்கனியை என்னிடம் அழைத்து வருவதாகச் சொன்னான்.

சொன்ன நேரத்துக்கு, கால்கானி என் ஜன்னலருகே வந்தான். டக்கென்று அவனுடைய அலுமினியக் குழாயை அவன் கையில் கொடுத்தேன். மலைத்து நின்றான் கால்கானி. அவன் கண்களிலிருந்து நீர் வழிந்தது.

இரண்டு நாட்கள் கழித்து அவனிடமிருந்து ஒரு செய்திப் பத்திரிகை வந்தது. பிரித்துப் பார்க்கிறேன். உள்ளே ஆயிரம் பிராங்க் நோட்டுக்கள் ஐந்து இருக்கின்றன. ஒரு துண்டுக் காகிதத்தில் 'தாங்ஸ்' என்ற குறிப்புடன்!

அன்றிரவு மெஷின் துப்பாக்கிகள் சுடுகின்ற ஓசை கேட்டோம்.

மறுநாள் தெரிந்தது. 'சம்மட்டிக்காரன்' தப்பியோடிவிட்டான் என்று. நல்ல மனிதன். கடவுள் அவனுக்குத் துணை புரியட்டும். தப்புவதற்கு ஏதோ வாய்ப்புத் தெரிந்தது போலும். சட்டென்று பயன்படுத்திக் கொண்டிருக்கிறான். அதுவரையில் நல்லதுதான்.

இதோ நானும், தேகாவும் பெர்னாண்டஸூம் காத்துக் கொண்டிருக்கிறோம், தகுந்த சந்தர்ப்பத்துக்காக. நடு நடுவே நான் ஜன்னலின் குறுக்கே இருக்கும் கம்பிகளைக் கவனித்துக் கொண்டிருந்தேன். நிஜமாகவே ரயில் தண்டவாளத்தில் செய்தவைதான் அவை. ஒன்றும் பண்ணிக்கொள்ள முடியாது. ஒரே வழி, வாசல் கதவுதான். அங்கே ஆயுதம் தாங்கிய மூன்று வார்டர்கள் இரவு பகலாகக் காவலில் இருந்தார்கள். ஜூலட் தப்பியோடிய பின்னர் காவல் இன்னும் கெடுபிடியாகிவிட்டது. ரோந்துக் காரர்கள் முன்னைக் காட்டிலும் அதிகத் தடவை வந்தார்கள். டாக்டரும் அவ்வளவு சிநேகிதமாக இருக்கவில்லை.

இரண்டாவது வாரமும் ஓடிவிட்டது. தேகா, தப்பியோடுவதைத் தவிர, மற்ற எல்லாவற்றையும் பற்றிப் பேசிக் கொண்டிருந்தான்.

எழுபது பேர் கொண்ட எங்கள் வார்டில் ஒவ்வொரு நாளும் இரண்டொருவர் சீதபேதியில் செத்துக் கொண்டிருந்தார்கள்.

அன்று இராத்திரி நான் தேகாவிடமும், பெர்னாண்டஸிடமும் ஒரு யோசனை சொன்னேன்.

"அந்த அரபு வாட்ச்மேன் சில சமயம் ராத்திரி உள்ளே வருகிறான். உடம்பு சரியில்லாதவர்கள் தங்கள் முகத்தைப் போர்வையால் மூடிக்கொண்டிருந்தால் அதை இழுத்துத் தள்ளிவிட்டுப் போகிறான். முட்டாள், அவனை அடித்துத் தள்ளி, அவன் சட்டையை நாம் மாட்டிக்கொள்ளலாம். (நாங்கள் சட்டையும், நிஜாரும் மட்டுமே அணிந்திருந்தோம்.) நான் அவன் உடையை மாட்டிக் கொண்டு வெளியே போய், காவலாட்களில் ஒருவனடைய துப்பாக்கியைக் கப்பென்று பறித்து விடுகிறேன். மற்றக் காவலர்களை அந்தத் துப்பாக்கி முனையில் மிரட்டி, ஓர் அறைக்குள் போகச் சொல்லிக் கதவைத் தாளிட்டு விடுவோம். ஆஸ்பத்திரி மதில் சுவரைத் தாண்டிக் குதிப்போம். தண்ணீர்ப் பக்கமாகக் குதித்து, தண்ணீர் போகிற போக்கோடு போவோம். அடுத்து என்ன செய்வது என்பதைப் பற்றி அப்போது முடிவு செய்து கொள்ளலாம். எங்களிடம் தான் பணம் இருக்கிறதே, ஒரு படகும், கடல் பிரயாணம் செய்வதற்கான மற்றப் பொருள்களும் வாங்கிக் கொள்ளலாம்."

இதுதான் யோசனை. இருவரும் அதை நிராகரித்து விட்டார்கள். அதைப்பற்றி என்னைக் குறைகூடச் சொன்னார்கள். இரண்டு பேரும் சரியான பயந்தாங்கொள்ளிகளாக ஆகிவிட்டதை அறிந்து கொண்டேன். ஏமாற்றமும், கசப்பும் என்னை வாட்டியெடுத்தன.

ஆஸ்பத்திரிக்கு நாங்கள் வந்து மூன்றாவது வாரமும் முடியும் சமயம்.

1933ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் திகதி மறக்க முடியாத தினம். ஜோன்ஸ் என்ற கைதி எங்கள் வார்டுக்கு வந்து சேர்ந்தான். அவன் கண்கள் மூடிக்கிடந்தன - பார்க்கவே முடியாதபடி. அவ்வளவு சீழ் பிடித்திருந்தது கண்களில்.

மூன்று நாட்களுக்கு முன்பு ஒவ்வொரு கண்ணிலும் வேண்டுமென்றே ஓர் ஆமணக்கு விதையைப் போட்டுக் கொண்டானாம். இப்படிச் சீழ் பிடித்துவிட்டது. ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்துவிட்டார்களாம்.

தப்பிச் செல்வதில் வெகு துடிப்பாக இருந்தான் அவன். "நான் அதற்காக எதுவும் செய்யத் தயார். கொலையே செய்ய வேண்டி நேர்ந்தாலும் சரி. எப்படியாவது தப்பத்தான் போகிறேன்," என்றான். அவனிடம் மூவாயிரம் ஃபிராங்க் பணம் இருந்தது.

தேகாவிடம் சொன்ன திட்டத்தை இவனிடமும் சொன்னேன். அவனுக்கு அது பிடித்திருந்தது.

""இரும்புக் கட்டிலின் கால்களைக் கழற்ற முடியும். ஆளுக்கொரு காலைக் கழற்றி வைத்துக் கொண்டால் ஒரே அடியில் வீழ்த்திவிடலாம்." என்றான் ஜோன்ஸ்.

ஆஸ்பத்திரியிலிருந்து தப்புவதற்கு ஒரு தோணி தயார் செய்வது பற்றிப் பேச விரும்பினால், முன்னாள் கைதி ஒருவனைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று ஸீரா தகவல் தெரிவித்தான்.

அந்த முன்னாள் கைதியின் பெயர் ஜீஸஸ்.

அவனைச் சந்திக்கவேண்டுமென்றால், எக்ஸ்ரே எடுக்கப்படும் பிரத்தியேகப் பகுதிக்கு நான் எப்படியாவது சென்றுவிட வேண்டும். ஆஸ்பத்திரி கட்டடத்துக்குள்ளேயே இந்தப் பகுதி இருந்தது. ஒரு கள்ளப் பாஸ் வாங்கிக்கொண்டு ஜீஸஸ் அங்கே வந்து சேர்ந்துவிடுவான். பரிசோதனைக்குப் போகுமுன், ஆசன வாய்க்குள் செருகியிருக்கும் அலுமினியக் குழாயை வெளியெ எடுத்து வைத்துவிடும்படி ஸீரா எழுதி அனுப்பினான். இல்லாவிட்டால் மார்புக்குக் கீழேயும் டாக்டர் எக்ஸ்ரே செய்து கண்டுபிடித்து விடக்கூடும் அல்லவா?

ஜீஸஸை எக்ஸ்ரே பகுதிக்கு வர ஏற்பாடு செய்யும்படியும், நான் அங்கு அனுப்பப்படுவதற்கான ஏற்பாடுகளை அட்டெண்டெண்ட் மூலம் செய்யும்படியும் ஸீராவுக்குத் தகவல் அனுப்பினேன். அன்று மாலையே ஸீராவிடமிருந்து பதில் வந்தது - நாளை மறுநாள் ஒன்பது மணிக்கு ஏற்பாடு செய்திருப்பதாக.

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*




**என்ன** உலகமோ! ஏனிந்த கோலமோ! மனிதரின் அவலமோ இன்னும் மாறவில்லை. மனிதா! மண்ணில் பிறந்து விண்ணிற்கே குறிவைத்து விட்டாய், ஆனால் ஒரு மிருகத்தை விட கேவலமாக அல்லவா மனிதனை நடத்துகின்றாய். இது உண்மையா? என உன்னையே கேட்டுப்பார்! அதனுடன் வீடு, சூழல் நகரம், நாடு உலகம் என்பவற்றையும் கவனித்துப்பார். அப்பொழுது மனிதனின் உண்மை நிலை நன்றாகப் புரியும். மனிதனை மனிதனாக மதிக்காமலும், அவனிருக்கும் நிலையில் வைத்தே, அவனை மனிதனாக ஏற்றுக் கொள்ளாமலும் தொடர்கிறது மனித வாழ்க்கை. சிலவேளைகளில் சடப்பொருட்களைப் போன்றும் மனிதர்கள் கையாளப்படுகிறார்கள். மதிக்கப்படவேண்டிய அவர்களின் உணர்வுகள் உணர்ச்சிகள் மறுக்கப்பட்டு புறக்கணிக்கப்படுகின்றன.



இவ் இருபதாம் நூற்றாண்டிலே சுதந்திரம் சமத்துவம், சகோதரத்துவம், சுயாதீனம், மனித உரிமை, விடுதலை என்று "மனித உரிமை சாசனங்களும்" பலவாறு போர்க்கணைகள் தொடுப்பது போல பரவலாக குரல் எழுப்புகின்றன. அவ்வாறே இவற்றை அமுல்படுத்துவதற்காகவும் பல அரசியல் சார்பான, சார்பற்ற இயக்கங்கள் செயல்படுகின்றன. இவ்வாறு மனித உரிமைக்காக எழுப்பிய கோஷங்கள் பல வேலைகளில் வெறும் வெளிவேஷங்களைப் போல வெளிப்பகட்டாக முடிவடைந்துள்ளன எனலாம். ஏனெனில் ஜனநாயக ஆட்சி முறையில் ஒவ்வொரு தனி மனிதனும் பேச்சுரிமை, எழுத்துரிமை, சொத்துரிமை என்ற மூவுரிமைகளைப் பெற்றிருக்க வேண்டும். இவ் அளவுகோளைப் பயன்படுத்தி ஜனநாயக ஆட்சிமுறை நாடுகளை அளவீடு செய்யும்போது ஜனநாயகத்திலே சில பலவீனங்களும் உள்ளன என்பதையும் ஒத்துக்கொள்ள வேண்டும்.

**தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் - ஜகத்தினை அழித்திடுவோம் - (பாரதியார்)**

என பாரதியார் பாடினார். வாழ்க்கையில் இந்நிலை இன்னமும் வரவில்லையே! ஏனெனில் இருபத்தோராம் நூற்றாண்டினுள் அடியெடுத்து வைக்கப்போகும், மனுக்குலத்தினுள் பெரும்பான்மையினர், தங்களது அடிப்படை மனித உரிமைகளை இழந்து பணம் படைத்த, பலம் படைத்த ஒரு கூட்டத்தாரின் கையில் "குறைந்த பட்ச அடிமைகளாக" (Semi Slaves) வாழ்கின்றனர். அவர்களின் மனித உரிமை, மனித மாண்பு, மனித நேயம், மனிதத்துவம், மனித ஆளுமை அனைத்தும் மறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட நிலையில் உணர்வுகளும், உணர்ச்சிகளும் அற்ற ஒரு உற்பத்தி செய்யும் இயந்திரத்தைப் போன்று அடிமைக் கூலியாட்களாக மாறியுள்ளனர். இந்நிலைக்குத் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கும் மனுக்குலத்தில் "எங்களுக்கு விடிவே இல்லையா" என குமுறிக்கொண்டிருக்கும் ஒரு சிறு கூட்டமே மலையக தேயிலைத் தோட்ட தொழிலாளிகள் ஆவர். எம் தேசத்தின் வரலாற்றுப் பக்கத்தில், "வதைத்து சிதைக்கப்பட்ட உரிமையும், சொல்லொனா துயர் நிறைந்த அடக்குமுறை காயங்களும், சங்கமித்து மௌனமாக கசப்பு வரலாறுகளைப் படைக்கின்றனர்" என்றால் சாலப் பொருந்தும்.

எம் நாட்டில் அன்று தொடக்கம் இன்று வரை அதிகமான அந்நிய செலாவணியைப் பெற்றுக் கொடுக்கும் பிரதான ஏற்றுமதிப் பொருள் எதுவென தெரியாதோர் இல்லை எனலாம். எமது நாட்டின் வருமானத்திற்கு முதுகெலும்பு போன்று பிரதான இடத்தை வகித்துவருவது தேயிலையாகும். அன்றைய ஆங்கிலேய ஆட்சியிலிருந்து இன்றைய சிங்கள பௌத்த ஆட்சி வரை எம் நாட்டின் பொருளாதார ரீதியான உயிர் நாடியாகவும் தேயிலை விளங்குகின்றது. இத் தேயிலை உற்பத்திக்கு மூலக்காரணியாகிய தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் வசதியற்ற வாழ்க்கையினை மாற்ற வேண்டும் என கரிசனை கொள்வார் உண்டோ என அவதானிக்கும்போது, அதிலும் கிடைப்பது ஆதரவற்ற நிலையாகும். "அதி சிறந்த இலங்கைத் தேயிலை" என அழகு வார்த்தை கூறும் ஆங்கிலேயர், அவதியுறும் தொழிலாளர்களின் அவல வாழ்க்கையினைப் பார்த்து, கரிசனையுடன் அழகு வாழ்க்கை அமைத்துக் கொடுக்க குருடராய்ப் போனார்கள். அன்றிலிருந்து இன்று வரை இம் மக்கள் ஒடுக்கப்பட்டவர்களாகவும், உயர்-மத்திய வகுப்பினரால் ஒதுக்கப்பட்டவர்களாகவும் வாழ்க்கையின் எல்லா நிலையிலும் நசுக்கப்பட்டவர்களாகவும் வாழ்கின்றனர். கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக இலங்கை மண்ணிலே வாழ்ந்துள்ளனர். இம் மண்ணில் பிறந்து, அதில் விளைந்ததை உணவாக்கி, உயிர்வாழ்ந்து, உழைத்து, உயிர் துறந்து தேயிலை செடிகளுக்கே உரமாக மாறுகின்றனர். தாயகத்தை விட்டுவந்து இலங்கையின் மலையக தேயிலைத் தோட்டங்களுக்கு தமது தசை, குருதி, எலும்பு அனைத்தையும் பசளையாக்கி, "தேயிலை வாடினால் எம் நாடே வாடிவிடும்" என வாழ்நாள் முழுவதும்

ஸ்ரீ முகன்

கஷ்டப்பட்டு உழைக்கும் தியாகிகளாகக் காணப்படுகின்றனர்.

சொகுசாக அமர்ந்து தேநீரைச் சுவைத்து அருந்தும் மக்களுக்கு, இத் தொழிலாளர் குடும்பங்கள், அவதியுறும் நிலைமைகள் அறியாமல் போனது ஆச்சரியமாய் இல்லையா? தெரிந்தவர்களும் கூட தெரியப்படுத்தவும் முன்வரவில்லை. தெரியாதவர்கள் போலவே அவர்களும் நடிக்கின்றனர். தற்போதுள்ள வேண்டா வெறுப்பான சூழலில் ஏதும் செய்து வாட்டம் போக்கிட நினைப்பார்களோ என்பதும் சந்தேகம்தான். பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் கோப்பி பயிர்ச்செய்கை முடிவடைந்து, தேயிலை உற்பத்தி ஆரம்பித்த அந்நாள் தொடக்கம் இதன் உற்பத்தியில் பெரும் பங்கினை வகிப்பவர்கள் பெண்கள் ஆவர். தேயிலை தொழிலாள சமுதாயத்தை இழிவாகவே பார்க்கும் கண்களுக்கு, அதனுள் அடிமையிலும் அடிமையைப் போல் வாழும் பெண்களைக் குறித்து ஏதும் கரிசனை உண்டோ என்பது கூற முடியாது.

*(துளிர்க்கும்)*

# வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்



**அதை** எடுக்கலாம் என்று சாப்ளின் எண்ணியபொழுது அந்த கடோத்கஜன் அதன் மேல் தன் காலை வைத்து மூடி விடுகிறான். அதை அவனிடமிருந்து பிடுங்க பல யுக்திகளைக் கையாள்கிறார் சாப்ளின். அதையெல்லாம் முறியடிக்கிறான் அவன். அதைக் கடித்துப் பார்க்கிறான். அப்பொழுது புரிகிறது, அது செல்லாக் காசென்று!

இந்தச் சங்கடமான நிலையில் ஒரு வசதியான ஓவியன் இவர்கள் அருகில் வந்து உட்காருகிறான். இருவரையும் தம்பதிகள் என்று நினைத்து அவர்களை ஓவியமாக வரையப் போவதாகச் சொல்கிறான். மூவருடைய சாப்பாட்டு பில்லை அவன் கொடுக்க முன்வருகிறான். தன் கௌவரத்தைக் குறைத்துக் கொள்ளக்கூடாது என்ற எண்ணத்தில் சாப்ளின் பணம் தர முன்வருகிறார். இந்தப் போட்டி சில விநாடிகள் நடக்கிறது. முடிவில் அந்த ஓவியன் சாப்ளினே கொடுக்கட்டும் என்று



இருந்து விடுகிறான்! சாப்ளினிடம் காசே இல்லையென்று அவனுக்குத் தெரியாது. அந்த ஓவியன் சப்ளையருக்கு இனாமாக (Tip) ஒரு பெரும் பணத்தை தட்டில் வைக்கிறான். அதற்கடியில் பில்லை நுழைத்து விடுகிறார் சாப்ளின்.

'இமிக்ரெண்ட்' உலகெங்கும் வெற்றிகரமாக ஓடியது. தைரியமும் திறமையும் உள்ள ஒரு மனிதனுக்கு வாழ்க்கையில் முன்னேற ஏழ்மை ஒரு தடையல்ல என்பதை இந்தப் படம் ஏடுத்துக் காட்டியது. இதை அடுத்து வந்த மியூச்சுவல் நிறுவனத்திற்காக சாப்ளின் உருவாக்கிய 2 படங்கள் "தி க்யூர்", (The Cure) "தி அட்வென்ச்சரர்". 'தி க்யூர்' படத்தில் தான் சாப்ளின் சுழலும் கதவு (Revolving Door) அமைப்பை வைத்து உலகத்தையே சிரிக்க வைத்தார். நடமாடும் 'மாடிப்படி'... 'சுழலும் கதவு'... தன் இஷ்டம் போல் நடந்து கொள்ளும் 'மர்பி படுக்கை! இப்படி உயிரில்லாத பொருட்களையெல்லாம் உயிரூட்டி நடிக்க வைத்தவர் சாப்ளின். இது அந்நாளில் யாரும் செய்திடாத சாதனை.

"தி அட்வென்ச்சரர்" படத்தில் ஒரு நகைச்சுவைக் காட்சி மிகவும் பிரபலம் அடைந்தது. அது பல வழிகளில் இன்றைய அளவிலும் பல மொழிப் படங்களில் வருவதைக் காணலாம்.

பால்கனியில் சாப்ளினும் எட்னாவும் ஐஸ்க்ரீம் சாப்பிடுகிறார்கள். அதில் ஒரு பகுதி இவருடைய ஸ்பூனிலிருந்து நழுவி பேண்டிற்குள்ளே விழுந்து விடுகிறது. அது அவருக்குத் தெரியக்கூடாதென்று சமாளிக்கப் பார்க்கிறார். ஏதோ ஒரு வழியாகக் காலையும், பேண்டையும் உதறி, உதறி வெற்றி பெறுகிறார். விடுதலை பெற்ற அந்த ஐஸ்க்ரீம் துண்டு பால்கனிக்குக் கீழே சாப்பிட்டுக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணின் கவுனுக்குள் நுழைகிறது! அவள் அலறுகிறாள். அவளை சமாதானப்படுத்த அவள் அருகில் உட்கார்ந்திருக்கும் ஆண், கையை உள்ளே விடுகிறான். அவள், அவனை பளாரென்று அறைந்து விடுகிறாள். அருகிலிருக்கும் பலர் அவன் எண்ணத்தைத் தவறாகப் புரிந்து கொண்டுவிட்டார்கள். மேலிருந்து சாப்ளின் அதைப் பார்த்து ரசிக்கிறார். வாழ்க்கையில் சில நேரங்களில் உதவி செய்ய முன் வருவது எதிர்பாராத விளைவுகளைக் கொடுக்கும் என்று விளக்குகிறது, இந்த நகைச்சுவைக் காட்சி.

சார்லி சாப்ளினின் மியூச்சுவல் நிறுவனத்தின் ஒப்பந்தம் முடிவடைகிறது. நகைச்சுவை படமென்றால் வெறும் கேலிக் கூத்தாகத் தான் இருக்கும் என்று எண்ணிய படித்தவர்கள், மேல் மட்டத்து மக்கள், அறிவு ஜீவிகள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் போன்றவர்களெல்லாம் இவர் படங்களில் பாடங்களும் இருக்கின்றனவே என்பதைப் புரிந்து கொண்டு இவரைப் பார்த்து நட்புறவு கொண்டாட முன் வந்தார்கள். அந்நாளில் அமெரிக்காவில் திரைப்பட உலகில் கலைஞர் என்று பாராட்டப்பட்ட ஒரே மனிதர் 'டி.டபிள்யு.க்ரி:.பிப்த்'. சினிமாவின் தந்தை என்றழைக்கப்பட்ட க்ரி:.பிப்தின் படங்களைப் பற்றித்தான் முதல் முறையாக விமர்சனங்கள் வரத் தொடங்கின. அதை எழுதியவர்கள் புகழ்பெற்ற கவிஞர்கள். அந்த வகையில் அமெரிக்காவின் இரண்டாவது



கலைஞனாக சாப்ளின் கருதப்பட்டார். உலகப்புகழ்பெற்ற லாஸ் ஏஞ்சலிஸிற்கு யார் வந்தாலும் அவர்கள் சாப்ளினை பார்க்க முடியுமா என்று கேட்டுக் கொண்டுதான் வருவார்கள். அண்ணன் ஸிட்னி சாப்ளின் அப்படி வருபவர்களை வரவழைத்து சாப்ளினிடம் அழைத்துச் செல்ல ஒரு விமானப் போக:குவரத்து நிறுவனத்தையே தொடங்கினான். உலகத்திலேயே முதல் விமானப் போக்குவரத்து நிறுவனம் இது.

மியூச்சுவல் நிறுவனம் ஒரு ஒப்பந்தத்தை சாப்ளினுக்கு அளித்தது. அதன்படி அவருடைய சம்பளம் 12 படங்களுக்கு 10 லட்சம் டாலர்கள். திரை உலகமே கனவிலும் காணாத தொகை இது. இதை அறிந்த அமெரிக்கா மட்டுமல்லாமல் உலகமே ஸ்தம்பித்து விட்டது. சாப்ளின் பொன் முட்டைகளாகவே இடும் ஒரு வாத்து என்பதை திரையுலக வியாபாரிகள் புரிந்துகொண்டு விட்டார்கள். (First National) :.பர்ஸ்ட் நேஷனல்" என்ற



ஒரு நிறுவனம் வேறு ஓர் ஒப்பந்தத்தை இவர் முன் நீட்டியது. அவர்கள் கொடுக்க முன் வந்த சம்பளம் குறைவாக இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட நீளத்திற்கு மேலாக நீளமாக இருந்தால் அதற்குத் தேவையான செலவை சாப்ளினே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை இருந்தது. எனினும் அந்த நிறுவனத்தார் சாப்ளினுக்கு இலாபத்தில் பங்கை அளித்தார்கள். அது மட்டுமல்ல, படத்தின் விநியோகத்தை மட்டுமன்றி, மற்ற வேறு எல்லா விஷயங்களிலும் அந்தப் புது நிறுவனம் தலையிடாது. "தன் காட்டிற்கு தான் தான்" ராஜா" என்ற ஒரு நிலைமை சாப்ளினுக்கு மிகவும் பிடித்து விட்டது. தன்னுடைய சிந்தனைகளுக்குத் தகுந்தபடி யாருடைய தலையீடும் இல்லாமல் படத்தை உருவாக்கலாம் என்பது அவரை மிகவும் கவர்ந்தது. "பாட்டும் நானே" "பாவமும் நானே" என்று அவர் மனதில் ஒலித்தது. விளைவு அந்தப் புதிய நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்.

சார்லி சாப்ளின் :.பிலிம் கார்ப்பரேஷன் என்று தன் சொந்த நிறுவனத்தை உருவாக்கினார். இது அவருடைய வாழ்க்கையில் ஒரு ஒரு

*(தொடரும்)*

---

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள்

## 26

### பூஜா பட்

**அந்தரங்கங்கள்** பற்றி நாம் இப்பகுதியில் பார்த்துக் கொண்டிருக்கும் வேளையில் இன்று




பிரபலத்தினைப் பற்றிப் பார்ப்போம் இவர் தன்வாழ்க்கையை திரையுலகத்தின் பக்கம் திருப்பிக் கொண்டவர். இவர் தமிழ் மட்டுமல்ல ஹிந்தி சினிமாவிலும் தன் பெயரை நிலைநிறுத்திக் கொண்டவர்.

இவரை எல்லோரும் பூஜா பட் என்று அழைப்பர். இவரின் அந்தரங்க வாழ்க்கைக் குறிப்புகளை இப்போது பார்ப்போம்.

பூஜா பட் சினிமாவில் தனது இடத்தைத் தக்க வைத்துக் கொள்ள என்ன என்ன கஷ்டங்களை அனுபவித்தார் என்று பார்த்தால் அவற்றை தன்னால் எடுத்துச் சொல்ல முடியாது என்று சொல்லியிருக்கிறார்.

ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி பிறந்த இவர் தனது பூர்வீக பூமியாக உத்தர பிரதேசத்தை கொண்டவர். மிகவும் நல்ல குடும்பத்தில் பிறந்தவர். அதாவது இவரின் அப்பா ஒரு இராணுவக் கேணல் அம்மா மிகவும் குடும்பப்பாங்கான பெண்மணி. அம்மா யாருடனும் அதிகமாகப் பேசமாட்டார். உலக நடப்புகள் அறியாதவர். ஆனாலும் தனது குடும்பத்தை நன்கு நடத்திக் கொண்டு செல்வார். இவரின் வீட்டிற்கு யாரும் வந்து போவது குறைவு காரணம் அப்பா இராணுவத்திற்குச் சென்று விட்டால் வீட்டில் யாரும் இருப்பதில்லை. அம்மாவும் தனது வேலையுண்டு என்று இருந்து விடுவார். அம்மா தன் வேலையை மட்டும் பார்த்து வந்ததால் அவர் தன் மகளை பராமரித்தார் அவரின் தேவைகளை அறிந்தவர் ஆனால் அவள் எங்கு போகிறாள் எங்கு வருகிறாள் என்று அவர் கவனிப்பதில்லை. எங்கு சென்றாலும் அவர் கேட்பதில்லை. இப்படியான குடும்பச் சூழ்நிலையில் வளர்ந்தவர் பூஜாபட் அவள் வெளியில் யாருடன் கதைக்கிறாள் என்று யாரும் கேட்பதில்லை யாரும் கவலைப்படுவதில்லை.

அது தனக்குச் சாதகம் என்று பூஜா பட் நினைத்துக் கொண்டாரோ என்னவோ தெரியவில்லை. அவர் தன்னுடைய வேலைகளை எல்லாம் வீட்டிற்கு வெளியே நிறைய அமைத்துக் கொண்டார். சிறு வயது முதலே பாடசாலைக்கு காரில் தான் சென்று வரும் பூஜா ஒரு வயதுக்கு பின் தனது தேவைகளை நிவர்த்தி செய்ய காரில் செல்வதை தவிர்த்துக் கொண்டார்.



எது தேவையென்றாலும் பஸ்ஸில் தான் சென்று வருவாள் இது தனது எளிமையைக் காட்டும் நடவடிக்கை என்று நினைத்தால் அது தவறு காரில் செல்லும் போது தனது பிரத்தியேக வேலைகளைச் செய்ய முடியாமல் இருப்பதாக கருதினார். பிரத்தியேக வேலை என்றால் இரவு விடுதிகளுக்குச் செல்வது டிஸ்கோ ஆடுவது என்று தனது பாதையை மாற்றிக் கொண்டார்.

இவருக்குப் பல நண்பர்கள் இருந்தார்கள் அனைவரும் இரவு விடுதி நண்பர்களே அவர்கள் அவளை ஒரு தப்பான வழியில் அழைத்துச் செல்வதை அவர் அறிந்திருக்கவில்லை. அவரின் அப்பா கூட இதைக் கவனிக்கவில்லை. பூஜா படிப்புக்காகத் தான் இப்படி இருக்கிறாள் என்று எண்ணினார்.

இளமை அழகுடன் திகழ்ந்த இவள் சிறிது நாட்களியே கல்லூரியில் சேர்ந்து பொருளாதாரத்துறையை தேர்ந்தெடுத்து படிக்க ஆரம்பித்தார். ஆயினும் இவரின் தொடர்புகள் தொடர்ந்து கொண்டிருந்தன. கல்லூரியில் நடைபெறும் எல்லாப் போட்டிகளிலும் இவர் தான் முதலிடத்தில் வந்தார். அதாவது படிப்பு சம்பந்தப்பட்டவையல்ல. அழகு மற்றும் கல்லூரி நடனம் போன்ற பொழுது போக்கு துறையில், இப்படியிருக்கையில் கல்லூரி சார்பில் அவள் பங்கு பற்றிய ஒரு அழகுராணிப் போட்டியில் முதலிடத்தைப் பெறவே கல்லூரி அதிபரின் சிபாரிசுடன் உலக அழகிப் போட்டிக்கு 1993 ஆம் ஆண்டு அனுப்பி வைக்கப்பட்டாள்.

அப்போட்டியிலும் அவர் முதலிடத்தை பெறவே அவளின் புகழ் உலக அளவில் பரவியது. இதை சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொண்ட பூஜா தன்னை நாடி வந்த சினிமாக்காரர் களிடம் எல்லாம் ஒப்பந்தம் செய்து கொண்டார்.



இதை சற்றும் எதிர்பாராத அம்மாவும் அப்பாவும் பெரும் போராடி னார்கள். அவரை நடிக்க வேண்டாம் என்று எப்படிக் கூறினாலும் அதை ஏற்றுக் கொள்ளாமல் நடிப்புத் துறையை நாடி வந்தவர். இப்போது புகழின் உச்சியில் இல்லாவிட்டாலும் ஏதோ தனக்கென்று இடத்தை ஒதுக்கி வாழ்ந்து கொண்டிருக்கிறார். இவரின் அப்பா மற்றும் அம்மா, சகோதரங்கள் அவளை ஒதுக்கி விட்டு அவர்கள் தங்களையே ஒதுக்கிக் கொண்டார்கள்.

தமிழ், மலையாளம், ஹிந்தி என்று பல படங்களின் நடித்து இருக்கும் இவர் இன்று தன்னை நாடி வரும் எந்தப் படத்திற்கும் மறுப்பு தெரிவிக்காமல் நடித்து வருகிறாராம். தனது புகழுக்காக இன்றும் திருமணம் கூட செய்து கொள்ளாமல் இருக்கும் இவர் இனிமேலும் என்ன தான் செய்து கொள்ளப் போகிறாரோ என்று அவளின் ரசிகர்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

*(இரகசியங்கள் தொடரும்...)*

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## இடைக்கால நிர்வாகத் தலைவரை நியமிப்பதில் இழுபறி

**திலீபன்** உண்ணாவிரதமிருந்த நாட்களில் இந்தியப் படைக்கதிரான ஆர்ப்பாட்டங்களிலும் ஹர்த்தால் நடவடிக்கைகளிலும் டுபட்டுவந்த புலிகள், திலீபனின் மரணத்தையடுத்து ஆங்ங்கே ஏற்பட்ட வன்செயல்களைக் கட்டுப்படுத்தும் முயற்சிலில் ஈடுபட்டனர். சில இடங்களில் அரசாங்க பஸ்களுக்குக் ற்கள் வீசப்பட்டன. பயணிகள் சிலர் காயமுற்றனர். அரச ட்டடங்களுக்கும் பஸ்ளுக்கும் தீ வைக்கும் யற்சிகளிலும் சிலர் டுபட்டனர். எவரையும் ன்செயல்களில் ஈடுபட வண்டாமென்று புலிகள் யக்கம் கோரிக்கை டுத்தது. சேவையிலீடு ட்டிருந்த சில இ.போ.ச. ஸ்களை புலிகள் இயக்க றுப்பினர்கள் தாமாகவே ட்டிச் சென்று டிப்போக்ளில் பாதுகாப்பாக நிறுத்தினர். "தமிழீழத்திலுள்ள சொத்துகள் னைத்தும் தமிழீழத்துக்கே சொந்தம். எனவே அவற்றை சப்படுத்த வேண்டாம்" என்று பிரபாகரன் கோரிக்கை டுத்திருந்தார். வன்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு ந்தியப் படை தயாராகவிருந்தது. இதனால் வன்சசெயல்களில் டுபடும் நபர்கள் மீது இந்தியப் படையினர் துப்பாக்கிப் பிரயோம் செய்யலாம். அதனால் மோசமான சூழ்நிலை ஏற்படலாமன்று புலிகள் இயக்கம் பயந்தது. திலீபனின் பூதவுடல் மக்ளின் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர், யாழ்.பல்கலைக்ழக மருத்துவ பீடத்திடம் கையளிக்கப்பட்டது.

### 176 தேனீர்க் கோப்பைக்குள் இரத்தம்!

இதற்கிடையில் செப்டெம்பர் 26, 28 ஆம் திகதிகளில் தீக்ஷித் தலைமையிலுள்ள இந்தியத் தரப்பினருடன் நடத்திய பச்சுவார்த்தைகளில் பிரபாகரன் மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்தார். இப் பேச்சுவார்த்தைகளின்போது பிரபாகரனின் மொழிபெயர்ப்பாளராக அன்ரன் பாலசிங்கம் செயற்பட்டார். தனது கோரிக்கைகள் சிலவற்றை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற முன்வந்தால் மட்டும் போதாது, இந்திய அரசாங்கமும் சில கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கோரினார். இந்தியப் படைக்கு எதிராகப் புலிகள் நடத்திவரும் எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்தும் ஆயுதங்களனைத்தையும் புலிகள் இயக்கம் கையளிக்காதமை குறித்தும் இந்திய ஊடகங்கள் செய்துவரும் விமர்சனங்களை நிறுத்த வேண்டுமென்பதே பிரபாகரனின் கோரிக்கையாகும். இதற்கிடையில், புலி இயக்க உறுப்பினர்களின் தேவைகளைக் கவனித்துக் கொள்வதற்கு மேலும் பண உதவி செய்யுமாறு இந்தியாவிடம் கோரிக்கை விடுத்தார் பிரபாகரன்.

**இடைக்கால நிர்வாகத்தின் தலைவராக சி.வி.கே.சிவஞானத்தின் பெயரை ஜனாதிபதி தேர்ந்தெடுத்தார். இது குறித்து புலிகள் இயக்கத்துக்கு உடனடியாகவே தகவல் அனுப்பப்பட்டது. சி.வி.கே. சிவஞானம் தலைமை நிர்வாகியாக நியமிக்கப்படுவதை பிரபாகரன் விரும்பவில்லை. பத்மநாதனை நியமிக்குமாறு பிரபாகரன் வலியுறுத்தினார். இந்த மூன்று பெயர்களையும் பிரபாகரனே சிபார்சு செய்திருந்தார். அதனால் அவர் வலியுறுத்துவது போன்று எதனையும் செய்ய முடியாதென்று தீக்ஷித் தெரிவித்தார்.**

செப்டெம்பர் 23ஆம் திகதியும் 26ஆம் திகதியும் பிரபாகரன் தரப்பினருக்கும் இந்தியத் தரப்பினருக்குமிடையில் எட்டப்பட்ட முடிவுகள் குறித்த ஆவணத்தில் கைச்சாத்திடுமாறு பிரபாகரனைக் கேட்டார் தீக்ஷித். தான் புலிகள் இயக்கத்தின் இராணுவத் தலைவராக இருப்பதால், அதில் கைச்சாத்திட முடியாதென்றும் அதற்குப் பதிலாக மாத்தையா கைச்சாத்திடுவாரென்றும் பிரபாகரன் கூறினார். அந்த ஆவணத்தில் மாத்தையாவே கைச்சாத்திட்டார். இதனையடுத்து தீக்ஷித்

(அரசியல் தொடர்)

அந்த ஆவணத்தில் கைச்சாத்திடாமல், இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் முதலாவது காரியதரிசியான ஹர்தீப் பூரியைக் கைச்சாத்திடுமாறு பணித்தார். இந்த ஆவணத்தின் படி இடைக்கால நிர்வாகத்தின் தலைவராக ஒருவரை நியமிப்பதற்கு மூன்று பேரின் பெயர்களைப் பிரபாகரன் சிபார்சு செய்வாரென்றும் அதில் ஒருவரை ஜனாதிபதி ஜெயவர்த்தனா தேர்ந்தெடுத்து நியமிப்பாரென்றும் கூறப்பட்டது. இடைக்கால நிர்வாகத்துக்கு 12 பேரை நியமிப்பதென்றும் புலிகளின் சிபார்சில் ஐந்து பேரை நியமிப்பதென்றும், தமிழர் விடுதலைக் கூட்டணி இருவரையும் முஸ்லிம்கள், சிங்களவர்கள் சார்பாகத் தலா இருவருமாக மொத்தம் 12 பேரை நியமிப்பதென்றும் முடிவு காணப்பட்டது. அதாவது, தமிழர் விடுதலைக் கூட்டணி சிபார்சு செய்யும் இருவரில் ஒருவரின் பெயரைப் புலிகளுடன் கலந்தாலோசித்தே முடிவு செய்வதென்றும் இணக்கம் காணப்பட்டது. இதற்குப் புறம்பாக, முஸ்லிம் பிரதிநிதிகளில் ஒருவரைப் புலிகளே சிபார்சு செய்வதென்றும் இரு தரப்பும் இணக்கம் கண்டிருந்தது. புலிகள் இயக்கம் சிபார்சு செய்யும் ஐவரில் ஒருவர், புலிகளின் தோழமை அணியான ஈரோஸ் இயக்கத்தைச் சேர்ந்தவராக இருப்பாரென்றும் பிரபாகரன் தெரிவித்தார். இடைக்கால நிர்வாகத்தின் தலைமைப் பொறுப்புக்கும் ஒருவரைப் புலிகளே சிபார்சு செய்ய வேண்டுமென்பதும் இணக்கம் காணப்பட்ட விதி. இவற்றை வைத்துப் பார்த்தால், 12 பேரைக் கொண்ட நிர்வாக சபையில் எட்டுப் பேர் புலிகள் இயக்கத்தினால் சிபார்சு செய்யப்படுவார்கள். இதற்கிடையில் உத்தேச இடைக்கால நிர்வாகத்தின் தலைமைப் பதவியைப் பிரபாகரனுக்கு வழங்க ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஏற்கனவே இணக்கம் தெரிவித்திருந்தார். பிரபாகரன் இடைக்கால நிர்வாகத்தின் தலைமைப் பதவியை ஏற்பதாக இருந்தால், தலைவராக ஒருவரை நியமிப்பதற்கு மூன்று பேர்களைத் தான் கேட்கப் போவதில்லையென்றும் ஜெயவர்த்தனா தெரிவித்திருந்தார். ஆனால் அப் பதவியை ஏற்றுக் கொள்வதற்குப் பிரபாகரன் மறுத்துவிட்டார்.

பிரபாகரன் தரப்பினருக்கும் தீக்ஷித் தரப்பினருக்குமிடையில் இணக்கப்பாடு காணப்பட்டு 48 மணித்தியாலங்களுக்குள், ஜனாதிபதி ஜெயவர்த்தனா தனது செயலாற்று அதிகாரத்தைப் பாவித்து இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டுமென்பது மற்றொரு முக்கிய விதியாகும். புலிகள் இயக்கம் முன்வைத்த ஐந்து அம்சக் கோரிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேச இடைக்கால நிர்வாகம் வசதிகளைச் செய்யும் என்றும் இணக்கம் காணப்பட்டது. இந்தியப் பிரதமர் ஜுலை மாதம் அளித்த வாக்குறுதிக்கிணங்க, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்த புலிகள் இயக்கம் பூரண ஒத்துழைப்பை வழங்குமென்றும் பிரபாகரன் இணக்கம் தெரிவித்திருந்தார். புலி இயக்கத் தலைவர்களின் பாதுகாப்புக்கென வைத்திருக்கும் ஆயுதங்களைத் தவிர, ஏனைய அனைத்து ஆயுதங்களையும் கையளிப்பதென்று இணக்கம் காணப்பட்டது. மாகாண

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

சபைக்கான தேர்தல்களை நீதியாகவும் நியாயமாகவும் நடத்த புலிகள் இயக்கம் ஒத்துழைப்பு வழங்குமென்றும் உறுதியளிக்கப்பட்டிருந்தது. இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் முடிவில் இடைக்கால நிர்வாகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்காக மூவரின் பெயர்களை பிரபாகரன் சிபார்சு செய்தார். இந்த மூவரில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சார்ந்தது என்றும் இணக்கம் காணப்பட்டிருந்தது. ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியரான ஆர்.சிவஞானசுந்தரம், மட்டக்களப்பில் உதவி அரசாங்க அதிபராகப் பணியாற்றிக் கொண்டிருந்த எஸ்.பத்மநாதன், முன்னாள் யாழ்.மாநகரசபை ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம் ஆகியோரின் பெயர்களையே பிரபாகரன் சிபாரிசு செய்திருந்தார். உடனடியாகவே விமானம் மூலம் கொழும்பு திரும்பிய உயர்ஸ்தானிகர் தீக்ஷித், ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்து பிரபாகரனோடு ஏற்பட்ட இணக்கங்கள் குறித்துத் தெரிவித்தார். இடைக்கால நிர்வாகத்தின் தலைவராக சி.வி.கே.சிவஞானத்தின் பெயரை ஜனாதிபதி தேர்ந்தெடுத்தார். இது குறித்து புலிகள் இயக்கத்துக்கு உடனடியாகவே தகவல் அனுப்பப்பட்டது. சீ.வி.கே. சிவஞானம் தலைமை நிர்வாகியாக நியமிக்கப்படுவதை பிரபாகரன் விரும்பவில்லை. பத்மநாதனை நியமிக்குமாறு பிரபாகரன் வலியுறுத்தினார். இந்த மூன்று பெயர்களையும் பிரபாகரனே சிபார்சு செய்திருந்தார். அதனால் அவர் வலியுறுத்துவ்து போன்று எதனையும் செய்ய முடியாதென்று தீக்ஷித் தெரிவித்தார். பிரபாகரனின் திடீர் மாற்றம் பற்றிய தகவல் ஜெயவர்த்தனாவுக்குத் தெரிவிக்கப்பட்டபோது, தனது முடிவை மாற்றுவதற்குத் தான் தயாரில்லையென்று அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார். மட்டக்களப்பில் தீவிரவாதிகள் தப்பிச் செல்ல உதவி புரிந்தவர் பத்மநாதன் என்றும் குற்றம் சாட்டினார் ஜெயவர்த்தனா. "நாட்டின் பரந்துபட்ட நலனைக் கருதி நான் இணக்கத்துக்கு வரலாம்தான். ஆனால் இன்னமும் நான் தான் இந்த நாட்டின் ஜனாதிபதி. எனது நாட்டின் ஒரு பகுதி நிர்வாகத்தை நான் எப்படி நடத்த வேண்டும் என்பது தொடர்பான ஒவ்வொரு விடயத்திற்கும் பிரிவினைவாத, தீவிரவாத இயக்கமொன்றின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய அவசியமில்லை" என்று சொன்னார் ஜெயவர்த்தனா. இடைக்கால நிர்வாகத்தின் தலைவராக பத்மநாதன் நியமிக்கப்படாவிட்டால், புலிகள் இயக்கம் அதில் பங்குபற்றப் போவதில்லையென்று திட்டவட்டமாக அறிவித்தது. இடைக்கால நிர்வாகம் ஒன்றினை அமைத்து, அதன் தொடர்ச்சியாக வடக்கு, கிழக்கு மாகாண சபையொன்றினை ஏற்படுத்தும் முயற்சி முளையிலேயே கிள்ளியெறியப்பட்டது.

இதற்கிடையில் வடக்கு, கிழக்கு மாகாண இணைப்புக்காகவும் அதிகாரப் பகிர்வு விடயங்கள் தொடர்பாகவும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் ஆகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் இலங்கை - இந்திய அரசியலமைப்பு நிபுணர்களின் கூட்டங்களில் ஆராயப்பட்டு வந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்ட வல்லுநர்களின் அபிப்பிராயங்களும் இதற்கெனப் பெறப்பட்டன. அதிகாரப் பகிர்வுக்கான யோசனைகள் பற்றி இங்கு முடிவெடுக்கப்பட்டது. இவற்றின் அடிப்படையிலேயே மாகாண சபைகளை ஏற்படுத்துவதற்கான 13ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டது.

(தொடர்ந்து வழியும்....)




ஸ்ரீதேவியும், குமாரும் பிரபாகரனைப் பற்றிக் கதைத்தபடி நடக்கிறார்கள் அவனது நடத்தையில் சந்தேகம் இருப்பதாக ஸ்ரீதேவி சொல்ல, குமார் ஏற்றுக் கொள்கிறார். அதேவேளை சந்துநாயரும் ஜயந்தனும் ஸ்ரீதேவியின் எலும்புக் கூட்டை அழிக்க வழிதேடுகிறார்கள்

"**அந்த** எழும்புக் கூட்டை இங்கே கொண்டு வந்து கொடுத்தால் போதுமில்லையா?" கோவிந்தன் கேட்டான்.

சந்துநாயரும், ஜயந்தனும் பரஸ்பரம் பார்த்துக் கொண்டனர். அவர்கள் இருவரது யோசனையும் ஒன்றுதான்.


கோவிந்தனால் அந்த எலும்புக்கூட்டை அவ்வளவு சுலபத்தில் அழிக்க முடியாது. எனவே அவன் அந்த எலும்புக்கூட்டை இங்கு கொண்டு வந்தால் மற்றதைத் தாங்களே கவனித்துக் கொள்ளலாம் என்று நினைத்தார்கள்.

"சரி, அப்படியே செய். மற்றதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்." - ஜயந்தன் கூறினார்.

மறுநாள் காலையில் குமார் எழுந்து குளித்து முடித்தவுடன் நேராக பிரபாகரனின் வீட்டுக்குத்தான் போனார்.

பிரபாகரனின் அம்மா தோசை வார்த்து வைத்திருந்தார்.

"ராத்திரியில பிரபாகரன்



வந்திருந்தான். ஆனால், ஒண்ணும் சாப்பிடலை, அவனுக்கு என்ன ஆச்சுன்னே தெரியலை. இப்ப வீட்டிலேருந்து அவன் எதையுமே சாப்பிடறதில்லை." - அம்மா முறையிட்டார்.

**எழுதுவது சிவன்**

"அவனோட புது சிநேகிதன் அவ்வளவு நல்ல ஆளாத் தெரியலை. எதனால பிரபாகரன் இந்த மாதிரி மாறிப் போனான்னு யோசிச்சுப் பார்க்குறேன், ஒண்ணும் பிடி கிடைக்கலை." - குமார், அம்மாவைப் பார்த்தபடி பேசினார்.

"நானும் அதைப் பத்தித்தான் யோசிக்கிறேன். இவ்வளவு சீக்கிரம் அவன் எப்படி மாறிப் போவான் பாருங்க. எல்லாம் மாயமா இருக்கு. பகல் நேரத்துல அவனைக் கண்ணால கூடப் பார்க்க முடியலை."

"என்ன வந்தாலும் சரி, இன்னிக்கு பகல்ல நான் அவன் எங்க இருக்கிறான்னு தேடி விசாரிக்கிறேன்." குமார் தனது காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பினார்.

எங்கெல்லாமோ தேடியலைந்தார்.

இதுவரை, கள்ளுக்கடைப் பக்கமாகப் போனதில்லை என்றாலும் அங்கேயும் போய்த் தேடிப் பார்த்தார். அன்றொருநாள் குட்டப்பனுடன் வந்ததைத் தவிர, அதற்கப்புறம் பிரபாகரனைப் பார்க்கவே இல்லையென்று கடைக்காரன் சொன்னான். ஆனால், மதியத்துக்குப் பிறகு குட்டப்பன் வருவதுண்டு என்றும் தெரிவித்தான்.

எனவே குட்டப்பனை நேரில் பார்த்து விசாரிப்பது தான் நல்லதென்ற முடிவுக்கு வந்தார் குமார்.

மதியத்துக்குப் பிறகு கள்ளுக் கடைக்கு வந்தார்.

ஒருநாளும் இல்லாத திருநாளாக கள்ளுக் கடையில் குமார் உட்கார்ந்திருப்பதைப் பார்த்த எல்லோருமே அவரிடம் குசலம் விசாரித்தனர். அவர் கள் குடிப்பதற்காக வரவில்லை என்பது மற்றவர்களுக்கு நன்றாகவே தெரியும். கேட்டவர்களிடம் தான், பிரபாகரனைப் பார்க்க வந்திருப்பதாக மட்டும் தெரிவித்தார்.

"என்ன திருமேனி திடீர்னு இந்தப் பக்கம்?" கடைக்குள் நுழைந்த குட்டப்பன் கேட்டான்.

உட்கார் குட்டப்பா, உங்க ரெண்டு பேரையும் தேடித்தான் வந்திருக்கிறேன்?" -குமார்.

குட்டப்பன் துணுக்குற்றான். "எதற்காக நம்மைத் தேடி வந்திருப்பார்?" அவன் மனம் யோசிக்கத் தொடங்கியது.

உட்காரக்கூடத் தயங்கினான்.

"உட்கார் குட்டப்பா?" - குமார் வற்புறுத்தினார்.

உட்கார்ந்தான்.

"நான் பிரபாகரனைத் தேடி வந்திருக்கிறேன். அவனைப் பார்த்தே ரெண்டு மூணு நாளாச்சு. கடைசியா அவனை உன் கூடத்தான் பார்த்ததா ஆளுங்க சொல்றாங்க. அதுக்குப் பிறகு அவனைப் பத்தி எந்த விவரமும் தெரியாதுன்னு மத்தவங்க சொல்றாங்க. குமார் சொன்னார்.

"நிஜமாவா சொல்றீங்க?"

"நிஜமாத்தான். நான் எங்கயெல்லாமோ விசாரிச்சுப் பார்த்துட்டேன். அப்புறம் மத்தவங்க சொன்ன விஷயமும் ஞாபகத்துக்கு வந்தது. அதனாலதான் சரி., எதுக்கும் உன்னையே பார்த்துக் கேட்டுடலாம்னு வந்தேன். முக்கியமா அவனை இப்போ பகல் நேரத்துல பார்க்கவே முடியறதில்லை,"

"ஐயோ... இது இப்படிப்பட்ட ஒரு விஷயமாப் போச்சே!" - குட்டப்பன் தன்னையும் மீறி நெஞ்சில் கை வைத்தான்.

"நீ பயப்படாத குட்டப்பா. அவனை பகல் நேரத்துல பார்க்க முடியலை. ராத்திரி நேரத்துல அவன் வீட்டுக்கு வந்துட்டுப் போறதா அவங்க அம்மா சொல்றாங்க!"

இந்த வார்த்தைகள் குட்டப்பனுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது.

"இப்படித் தான் நிம்மதியா இருக்கு!"

"அவனோட உயிருக்கு எந்த ஆபத்தும் ஏற்படலைனு அவங்க அம்மா சொன்னதிலேருந்து தெரியுது. அதனால அதைவிட்டுத் தள்ளுவோம். ஆனா, இப்ப அவன் எங்க இருக்கிறான்? ஏன் இப்படி ஒளிஞ்சு திரியுறான்? அவன் மேல ஏதாவது கேஸ் இருக்கா? உனக்கு இதைப்பத்தி ஏதாவது தெரியுமா?

"சேச்சே... அப்படியெல்லாம் எதுவும் இல்லை"-கள் எடுத்து வந்த சப்ளையரிடம் வேண்டாம் என்று கையால் ஜாடை செய்தபடி பேசினான் குட்டப்பன்.

"அவனால பல காரியங்கள் ஆக வேண்டியிருக்கு. அதனால அவனோட இருப்பிடத்தை முதலில் கண்டுபிடிக்கணும். அவன் இல்லாம நான் தனியா ஒண்ணும் பண்ண முடியாது. அதனாலதான் கேட்குறேன்!"

"நான் விசாரிச்சு என்ன ஏதுன்னு உங்ககிட்ட வந்து சொல்கிறேன். திருமேனி நீங்க புறப்படுங்க. நானே வர்றேன்!" - குட்டப்பன் சொன்னான்.

குமார் தனது இல்லத்துக்குத் திரும்பினார்.

கள்ளுக் கடையிலிருந்து வெளியேறிய குட்டப்பன், பிரபாகரனைத் தேடி அலைந்தான். எங்கெல்லாம் அவனைப் பற்றித் தெரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் தேடினான்: விசாரித்தான்.

ஒரே ஒருத்தர் மட்டும் இரவு நேரத்தில் அவனைப் பார்த்ததாகச் சொன்னார்.

(வாசனை வீசும்....)

மனதுக்கு நிம்மதி

# அன்பே... அன்பே!

பொன்னின் தரத்தை வேண்டுமானால் உரை கல்லில் தேய்த்துப் பார்க்கலாம். பூவின் தரத்தை அதில் உரசிப் பார்க்க முடியாது. மென்மையாகத் தொட்டு ரசிக்கவும், குளிர்ந்த உள்ளத்தோடு அதன் மணத்தை நுகரவும் தெரிந்தவர்களுக்குத்தான் பூவின் அருமை புரியும்.

இதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?! அவ்வளவுதான் விஷயம். இதை இன்னும் விளக்கமாகப் பேசலாம்!


அவன் கோபக்காரன். இருபத்துநாலு மணி நேரமும் கோபமாகவே இருப்பான். யாரைப் பார்த்தாலும் கோபம் வரும். எதற்கெடுத்தாலும் கோபம் வரும். ஒரு நாள் அவனைப் பார்க்க ஞானி ஒருவர் வந்தார். யோகா, மூச்சுப் பயிற்சி என்று செய்து உடம்பை வஜ்ஜிரம் போல திடகாத்திரமாக வைத்திருக்கும் ஞானி அவர்.

அவரைப் பார்த்ததும் அவன் வழக்கம் போல உர்ரென்று ஆனான். அவரை ஏற இறங்க ஒரு முறை பார்த்துவிட்டு, "உனக்கென்ன பெரிய பிஸ்தானு நினைப்பா? இப்ப எனக்கு அட்வைஸ் பண்ண வந்திருக்கியா? எப்பவும் முகத்துல அப்படி என்ன ஒரு சிரிப்பு! என்னைப் பத்தி மனசுக்குள்ள ஏதோ நக்கலா யோசிச்சுக்கிட்டிருக்கியா?" என்று கத்த ஆரம்பித்தான். 'இந்த ஆள் சரியான சூடு பார்ட்டி!' என்று ஞானிக்குப் புரிந்து போனது. முகத்தின் சிரிப்பை விலக்கிக் கொண்டார். பளிச்சென்று தன் முஷ்டியை முறுக்கிக் காட்டினார்.

ஞானி தன்னை அடித்துவிடுவாரோ என்ற பயத்தில் அவன் சற்றே பின்வாங்கினான். அப்போது முறுக்கிய முஷ்டியைக் காட்டி அந்த ஞானி கேட்டார்.

"நான் எப்போதும் இதே மாதிரி முஷ்டியை முறுக்கி வைத்துக் கொண்டே இருந்தால் என்ன அர்த்தம்?"

அந்தக் கோபக்காரன் முதல்முறையாக கொஞ்சம் சிந்தித்து பதில் சொன்னான். "உங்கள் கை



ஊனமாயிருக்கிறது என்று அர்த்தம்."

இப்போது அந்த ஞானி முறுக்கியிருந்த தன் முஷ்டியை தளர்த்தி விரல்களை விரித்து "என்னால் என் கையை இதே மாதிரி விரித்தபடிதான் வைத்துக் கொள்ள முடியும். இதை மடக்கவே முடியாது என்றால் அதற்கு என்ன அர்த்தம்?" என்று கேட்டார். அதற்கு கோபக்காரன் சொன்னான். "அப்பவும் உங்கள் கை ஊனப்பட்டிருக்கிறது என்றுதான் அர்த்தம்!"

ஞானி மறுபடி பொதுவானதொரு புன்னகையைச் சிந்தினார். "இந்த அளவுக்கு நீ சிந்தித்தால் போதும். சதா சர்வ நேரமும் கோபப்பட்டுக்கொண்டே இருக்கிறாயே... அதற்கு என்ன அர்த்தம்?" என்று கேட்டார்.

"கோபமும் ஒரு ஊமைதான்.." என்று அவனது வாய் முணுமுணுத்தது.

இந்தக் கதையை இங்கு சொன்னதற்குக் காரணமில்லாமல் இல்லை.

"பாவி... என் அப்பன்தான் என் வாழ்க்கையைக் கெடுத்தான்" "சண்டாளி... இவ சொல்படி கேட்டு நடந்ததால் என் வாழ்க்கையே நாசமா போச்சு", "கஷ்டப்பட்டு சேர்த்து வெச்சிருக்கும் சொத்தை எல்லாம் அழிக்கத்தான் இந்தத் தவறுதலை எனக்குப் புள்ளையா வந்து பொறந்திருக்கு."

- இப்படி அப்பா, அம்மா, மனைவி, பிள்ளைகள் என்று ஒருவர் விடாமல் வீட்டில் இருக்கும் அத்தனை பேரையும் திட்டித் தீர்க்கும் காரெக்டர்கள் நிறையவே உண்டு. எனக்குத் தெரிந்த பெங்களூர் பத்திரிகையாளர் ஒருவர்கூட இப்படித்தான். அவர் வீட்டுக்குள் நுழைந்தாலே போதும்... அதுவரை கிளிக்கூட்டம் மாதிரி சந்தோஷமாக இருப்பவர்கள் கப்சிப் என்று அடங்கிடுவார்கள். ஆனால், மனிதரோ சும்மா இருக்கமாட்டார். "ஏன் இழவு வீடு மாதிரி இப்படி ஆளாளுக்கு உட்கார்ந்திருக்கிறீங்க?" என்று வந்ததும் வராததுமாக சத்தம் போட ஆரம்பிப்பார். அவரைப் பற்றி அவரது வீட்டார் வருத்தத்தோடு என்னிடம் முறையிடுவார்கள்.

இங்கே ஒரு முல்லா கதையை சொல்லலாம். ஒரு நாள் முல்லா தன் வீட்டில் நண்பர்களோடு உட்கார்ந்து பொருளாதாரம், சமூகவியல் என்று சிக்கலான தத்துவங்களையும், சித்தாந்தங்களையும் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். அப்போது திடீரென கரண்ட் கட்! விளக்குள் அனைத்தும் அணைந்து வீடே இருளில் மூழ்கியது.

முல்லா மண்ணெண்ணெய் விளக்கை ஏற்றுவார் என்று நண்பர்கள் பொறுமையாக இருந்து பார்த்தார்கள். ஆனால், முல்லா விளக்கை தேடி ஏற்றுவதற்கு கொண்டிருந்தவர், இப்போது வீட்டைச் சூழ்ந்த இருட்டையும் மின்வெட்டுக்குக் காரணமான அரசாங்கத்தையும் கடுமையாக விமர்சனம் செய்ய ஆரம்பித்தார். பொறுமை இழந்த நண்பர்களில் ஒருவர் "முல்லா... உங்க கைக்குப் பக்கத்திலேயே ஒரு லாந்தர் விளக்கும் தீப்பெட்டியும் இருப்பதை நான் வெளிச்சம் இருக்கும் போதே பார்த்தேன். நீ ஏன் அதை ஏற்றக்கூடாது?" என்று சொல்ல... முல்லா கூறினார்.

"விளக்கு எங்கிருக்கு என்பது எனக்குக்கூடத்தான் தெரியும். ஆனால், இந்த இருட்டில் என் கைகள் எங்கே இருக்கு என்று தெரியலியே.." ஏற்கனவே பல முறை நான் சொன்னது போல முல்லா முட்டாள் இல்லை. அவர் ஒரு ஞானி. காலத்தைக் கடந்த பாத்திரம் இது. தன்னை முட்டாளாக்கிக்கொண்டு அதன் மூலம் பல விஷயங்களை உலகுக்குப் புரியவைக்கும் மகான்.

நன்றாக யோசித்துப் பாருங்கள். லாரி ஸ்டிரைக்கை மத்திய - மாநில அரசுகள் எப்படிக் கையாண்டிருக்க வேண்டும் என்பதில் ஆரம்பித்து சார்ஸ் நோய்க்கு என்ன தீர்வு என்பதுவரை டீக்கடையிலும் ஆபீஸ் கான்டீனிலும் உட்கார்ந்து பேசும் நமக்கு நம்முடைய பிரச்சினைகளை எப்படிக் கையாளுவது என்று தெரிவதில்லை.

அப்பா, அம்மா, மனைவி, பிள்ளைகள் என்று அத்தனை பேரையும் வார்த்தைச் சம்மட்டியால் அடித்துக் கொண்டேயிருக்கும் நபர்கள், நம்மிடையே நிறையப் பேர் இருக்கிறார்கள். 'நான்தான் புத்திசாலி. நான் சொல்வதைக் கேட்டுத்தான் வீட்டில் இருப்பவர்கள் அத்தனை பேரும் நடக்க வேண்டும். யாரும் சொந்தமாகச் சிந்திக்கவோ செயல்படவோ கூடாது' என்ற அகம்பாவத்தோடும் சதா எரிச்சல் மனோபாவத்தோடும் பலர் நடப்பதைப் பார்க்கிறோம்.

இப்படிப்பட்டவர்கள் "என் வீட்டுல கொஞ்சங்கூட நிம்மதியே இல்லை. அதை எப்படிச் சரிபண்றதுன்னும் புரியலை" என்று புலம்புவதையும் கேட்க முடியும். தீர்வு தங்களிடம்தான் இருக்கிறது என்று உணராமல் தன் கைகள் இருக்குமிடமே புரியாமல் குடும்பத்தைச் சதா நேரமும் இருட்டில் வைத்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட மனிதர்களுக்கு நான் சொல்ல விரும்புவது இதுதான்:

நமக்கு இருக்கும் மிகச் சின்ன அறிவை வைத்துக் கொண்டு எந்த நேரமும் மோதல் போக்கைக் கடைப்பிடித்தால் நம்மைச் சுற்றியிருக்கும் சொந்தங்கள் மற்றும் நண்பர்களின் இதயத்தைப் புரிந்துகொள்ள முடியாது. அன்பைப் புரிந்து கொள்ள அன்பினால் மட்டுமே முடியும்.

(தொடர்ந்து வரும்.....)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 183க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

எம். எம். றிபைஸ், மக்குளூற்று, வெள்ளைமணல்.

## பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

1. எம். சி. கலீல், 72, ஹனிபா வீதி, கல்முனை - 05.
2. செ. பிரவீனா, 1/13, P.3, கதிரானவத்தை, பாம்ரோட், மட்டக்குளிய, கொழும்பு - 15
3. பைசுல் அமீனா ஜலீல், 61/1A/1 மகாபுத்கமுவ, முல்லேரியாவ.
4. கே. எம். எஸ். அப்ன், 36 போல்ஸ் வீதி, யு.சி.விடுதி, புத்தளம் - 09.
5. தவம் கமலநாதன் 16/1 கோணர் வீதி, மட்டக்களப்பு.
6. ச.சொ.மகிழ்ராஜ், 70/3 ஏ, அலென் ஒழுங்கை, தெஹிவளை.
7. ஜெ.சில்வின், பெத்தனி, கிரான், மட்டக்களப்பு.
8. திருமதி. சுந்தரலிங்கம், 22 புதுச் செட்டித் தெரு, கொழும்பு - 13.
9. எம்.எல். பாத்திமா றிஸ்வானா, 547 பெண் பாடசாலை வீதி, ஏறாவூர் - 03.
10. ஏ.அனுப், பிரதான வீதி, மன்னார்.

## குறுக்கெழத்துப் போட்டி 185

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 6 |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | | 18 |
| | | | 22 | | 24 |
| 25 | | 27 | 28 | | |
| 31 | 32 | 33 | | 35 | 36 |

### இடமிருந்து வலம்

1.யுத்த ஆயுதமொன்று.

7.அழுக்கு அல்லது கன்ம வினை என்று பொருள்படும். (குழம்பியுள்ளது)

11.பயம் அல்லது குழப்பம்.

13.இராசிகளில் ஒன்று. (குழம்பியுள்ளது)

27.ரதம் என்றும் கூறலாம்.

31.ஆசனம்.

35.முருகக் கடவுளுடன் தொடர்புடையது.

### மேலிருந்து கீழ்

1. வாசனைத் திரவியங்களில் ஒன்று.
2. குழந்தை என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)
3. இசைக் கருவியொன்று. (குழம்பியுள்ளது)
6. சாஸ்திரம் என்றும் கூறலாம்.
16. அர்ஜுன் நடித்த திரைப்படமொன்று. (குழம்பியுள்ளது)
25. சந்தோஷம் அல்லது குதூகலம். (தலைகீழ்)
27. தவளை இனங்களில் ஒன்று.

## குறுக்கெழுத்துப் போட்டி 183 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | 2 ரா | 3 ன் | | 5 ஆ | 6 மா |
| 7 ர | 8 சா | 9 தி | | 11 சா | 12 லை |
| 13 ல் | 14 ய | 15 ச | 16 மை | | 18 ஆ |
| | 20 ம் | 21 ங் | 22 ப | 23 த | |
| 25 இ | | 27 ர | 28 ன் | | 30 பீ |
| 31 றை | 32 ந | | | 35 வா | 36 டை |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 12.09.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-185
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# மின்சாரக் கதைகள்

- வழங்குவது றாஹில்

## பெப்ரவரி - 14

"இனியும் தாமதிக்கக் கூடாது...என் விருப்பத்தை நான் தெரிவிக்காது போனால் யாரோ ஒருவன் தன் விருப்பத்தைத் தெரிவித்து விடுவான்..."

கோடித் தாரகைகள் பூத்தூவ... இன்னும் சில கோடித் தாமரைகள் கைதட்ட...

என் காதலை வாழ்த்துக்களுடன் வைப்பதென முடிவு செய்தேன்.

என் இதயம் நிமிடத்திற்குப் பத்தாயிரம் தடவை துடித்துக் கொண்டிருந்தது.

உன் கண்கள் கண்டு கயல்மீன்கள் கனவு காதலிக்கும்.

உன் புருவங்களை வானவில் திருடிக்கொள்ள முடிவெடுக்கும்.

உன் கிளீழுக்கு அழகு பருகி நிலாக்கூட நீ வேண்டுமென்று விண்ணப்பிக்கும்.

எத்தனை ஆப்பிள் தோட்டங்கள் இருந்தாலும் உன் இரு கன்னங்களுக்கு ஈடாகுமா?

நூறு நிலவுகள் உருவாகும் உன் முகம் பார்த்து மகிழ்வதற்கு.

உன் விரல்களில் மலர்வதற்குத் தாமரைகள் தவியாகத் தவிக்கும்.

உன் இருபது நகங்கள் பார்த்து பூக்கள் பொறாமையால் மூச்சுத் திணறும்.

ஆயிரம் ரோஜாச் சோலைகளானாலும் உன் கூந்தல் முடிகளுக்கு இணையாகுமா?

கரும் பூக்கள் இத்தனை அழகா என்று வெண்மல்லிகை மலர்கள் உன் கூந்தலில் உட்கார அடம்பிடிக்கும்.

உன் நிறம் பட்டுத்தான் நிலா ஒளிர்கிறது.

உன் நடைகேட்டுத்தான் தென்றல் அசைகிறது.

பிரம்மன் உன்னைப் படைத்து உன் பின்னாடி வந்தான்.

நீ உயிருள்ள தேன்.

இதுவரை எந்த எழுதுகோலும் சிந்தாத கவிதை நீ!

கம்பன் காலத்தில் நீ வசித்திருந்தால் நூறு காவியங்கள் உனக்காகப் படைத்திருப்பான்.

சாஜஹான் யுகத்தில் நீ சுவாசித்திருந்தால் நூறு தாஜ்மஹால்கள் உனக்காகக் கட்டியிருப்பான்.

வயது வந்தவர்களுக்கு நீ காதல் தேவதை.

வயதானவர்களுக்குக் காம ரசனை நீ!

நீ! முனிவர்கள் தவத்திற்குத் தோல்வி கொடுக்கின்ற தேன்.

உன் கண்களுக்காக மட்டும் ஒரு காவியமே பாடலாம்.

நீ ஜீன்சில் வசிக்கும் போது ஐரோப்பிய தேவதைகள் 'ஆஹா எத்தனை அழகு?' என்பார்கள்.

சுடிதார் உன்னைச் சுவைக்கும் போது பாகிஸ்தான் குமரிகள் பார்வை இழுபடும் உன் பின்னால்.

உன் தேகம் சேலை தொடும்போது தமிழ் நாட்டுக் கன்னியர்கள் உன்னிடம் அழகு கேட்டுக் கெஞ்சுவார்கள்!

இப்படி...

உன்னைப் பற்றி என் வயது ஓவியங்கள் வரைந்தன.

நான் இறந்து கொண்டே வசிக்கிறேன் உன்னால் அதனால்.

என் காதலை உன் கையில் ஒப்படைக்க ஓலை படைத்தேன்.

உன் புன்னகைதான் என் ஆகாரமானது.

உன் பார்வைதான் என் குடிநீரானது.

உன் வார்த்தைகள் தான் என் தாகமானது.

என் பசி தொடர்கிறது. என் தாகம் நீள்கிறது நீ எனக்குள் வாழ்வதால்!

நீ என் பக்கத்தில் வரும்போது நூறு சொர்க்கங்கள் எனக்குள் நிரம்புகின்றன.

உன் முத்தம் கேட்டு என் வயது அடம் பிடிக்கிறது.

உன் சத்தம் தொட்டுத்தான் என் மனது துடிக்கிறது.

என் காதல் வானம் வரை வளர்ந்திருக்கிறது.

உன் வாசல் எனக்காக நீ திறந்தால் நான் இன்னுமொரு கிரகம் அழைத்து வருவேன் நாம் மகிழ்வதற்காக!

உன் வாசம் வீசித்து அதில் உறங்கும் போது என் சுவாசம் இனிக்கிறது.

என் நேசம் கேட்டு என் உயிர் தவம் செய்யும் போது நான் கோடிப் பூச்செண்டுகளால் நிறைந்து போகிறேன்.

பருவம் செய்கின்ற கற்கண்டுதான் காதல்.

உருவம் செய்கின்ற அமுத நெருப்புத்தான் காதல்.

விழித்திருக்கிறேன், நீ தான் நிறைகிறாய் கண்களில்.

இமை மூடுகிறேன், நீதான் நிரம்புகிறாய் என்னில்.

நீ என் நரம்புகளைத் திசைதிருப்பிவிட்டாய்.

என் குருதியின் போக்கை மாற்றிவிட்டாய்.

என் கதவுகள் கழன்று விழுந்தன உன்னால்.

என் வயதை அற்புதமாக்கிவிட்டாய்.

என் மனதில் ஒளிபாய்ச்சினாய்.

உன் கண்களால்தான் நான் பார்க்கிறேன்.

நொடிக்கு நூறு தடவைகள் கண்ணாடி பார்க்கிறேன்.

சலவை செய்த என் ஆடைகளை மீண்டும் மீண்டும் சலவை செய்கிறேன்.

என் இதழ்களில் "லிப்ரீக்ஸ்' பூசாலாமா என்று யோசிக்கிறேன்.

உனக்கு அடுத்தபடியாக நான் அதிகம் நேசிப்பது முகம் காட்டும் கண்ணாடியைத்தான்!

சூரியன் புன்னகைத்தால் பெப்ரவரி - 14. விடிந்தது.


என்னைக் கடிதமாக்கி உன் கையில் வைப்பதற்காக வந்தேன், நீ எனக்காக ஒரு ரோஜாவுடன் வருவது அறியாமல்.

# இணை பிரியா நண்பர்கள்!

**நந்தனும்,** கோபாலும் நல்ல நண்பர்கள். சின்ன வயதிலிருந்தே இருவரும் எங்கு சென்றாலும், எது செய்தாலும் சேர்ந்தே செய்வார்கள். எந்தக் கஷ்டம் என்றாலும் இருவருமே பகிர்ந்து கொள்வர். எந்த விஷயத்திலும் இருவரும் விட்டுக் கொடுத்து நடந்து கொள்வார்கள் படிக்கும்போது கூட அப்படித்தான் படிப்பு முடிந்து இருவரும் ஒரே ஆபீஸில் வேலை செய்தார்கள். நந்தனின் வீட்டாருக்குக் கோபாலை நன்றாக பிடிக்கும். தன் பிள்ளை போல் பார்ப்பார்கள். அதுபோலத் தான் நந்தனையும் கோபாலின் வீட்டாருக்கும் பிடிக்கும். அவனையும் தங்கள் குடும்பத்தில் ஒருவராய் பார்ப்பார்கள். எப்போதுமே பிரியமாட்டார்கள். அப்படி ஒரு நண்பர்கள் மத்தியில் பூகம்பமாய்த் தோன்றினாள் விஜிதா, அவள் ஒரு தேவதை போல் காட்சியளித்தாள். நந்தனும், கோபாலும் வேலை செய்யும் ஆபீஸ்ல் அவள் ஒரு பெரிய பதவியில் அமர்ந்தாள். அவள் வந்த முதல் நாளே தன்னை எல்லோருக்கும் அறிமுகம் செய்தாள். ஏற்றத்தாழ்வு இல்லாமல் எல்லோரிடமும் அன்பாகப் பழகினாள். அவள் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவள். தன்னுடைய வேலையும் அவளுமாய் இருந்தாள். அவள் ஆபீஸ்க்கு வந்து மூன்று வாரங்கள் ஆகியன. விஜிதாவின் அறைக்கு எதிர்த்தாற்போல் நந்தன் வேலை செய்யும் அறை இருந்ததால் அடிக்கடி அவனைப் பார்ப்பாள். அதனால் அவன் பார்ப்பதில்லை. அவன் வேலையைச் செய்வான். இப்படியாக அந்த மூன்று வாரங்களுக்கிடையில் அவர்கள் இருவரும் பேசியதே இல்லை. கோபால் ஏழு, எட்டுத் தடவை ஆபீஸ் விஷயமாய் அவளுடன் பேசியிருக்கிறான். ஆனால் அவனுக்கு விஜிதாவில் கொஞ்சம் பிடிப்பு இருந்தது. அதை அவன் மனதில் வைத்துக் கொள்ளாமல் தன் நண்பனிடம் அவளைப் பற்றியே கதைப்பான். விஜிதாவிடம் தான் நெருங்கிப் பழகினான். இதை நந்தன் கவனித்து வந்தான். ஒருநாள் கோபாலைப் பார்த்து, டேய் மச்சான் விஜிதாவை நீ காதலிக்கிறியா? என்று சட்டென்டு கேட்டான். கோபால் இல்லைடா மச்சான் அவளோடு பழகிறேன் காதலா என்று எனக்குத் தெரியாதுடா எனச் சொன்னான். டேய் கோபிக்காதே, ஏதோ ஒரு அக்கறையில் தான் அதுதான் கேட்டன். இதுக்கெல்லாம் கோபித்தால் இவ்வளவு காலமும் நாம் பழகியதில் அர்த்தமில்லாமல் போய்விடும் என்றான் கோபால். உனக்குப் பிடிக்கவில்லையென்றால் அவளைப்பற்றி உன்கிட்ட பேசமாட்டேன். சரி வா போகலாம் எனச் சொல்லி இருவரும் புறப்பட்டார்கள்.

அடுத்த நாள் காலையில் இருவரும் ஏதோ விசயமாய் வெளியூர் செல்வதற்காக ஆபீஸில் லீவு போட்டுவிட்டுக் கிளம்பி விட்டார்கள். அன்று அவர்கள் ஆபீஸ்க்கு வராததைக் கண்டாள் விஜிதா. என்ன இது இருவரும் சீக்கிரமாகவே வருவார்கள். இன்னும் காணவில்லை. ஏதும் பிரச்சினையாக இருக்குமோ என நினைத்தாள். சரி, கோபாலுக்கு போன் பண்ணிப் பார்ப்போம் என்று ரிசீவரை எடுத்து நம்பரை சுழற்றினாள். அவளுக்குத் தொடர்பு கிடைக்கவில்லை. என்ன இது சரி நேராகவே போய்ப் பார்ப்பம் என கோபாவின் வீட்டுக்குக் கிளம்பினாள் விஜிதா. அங்கு கோபாலின் அம்மாவிடம் அவர்களைப் பற்றி விசாரித்தாள். அதற்கு கோபாலின் அம்மா பார்வதி, அவர்கள் இருவரும் வெளியூருக்கு ஏதோ அவசர அலுவலாய் போயிருக்கிறார்கள். எதற்கு கேட்கிறாய். நீ யாரு? என்று கேட்டாள். நான் அவர்களோடு வேலை செய்கிறேன். ஒரு நாளும் லீவு போடமாட்டார்கள். இன்றைக்கு வரவில்லை. அதனால் தான் வேறு ஏதும் பிரச்சினையோ தெரியாது என்றபடியால் தான் வந்தேன். நான் போயிற்று வாரன் என்று கிளம்பிவிட்டாள். அப்படியே ஆபீஸ்க்கு செல்ல விருப்பமில்லாமல் வீட்டுக்கே போய் விட்டாள். அவள் கோபாலுடன் நெருங்கிப் பழகுவது நந்தனின் மனதில் இடம்பிடிக்கத்தான். அவள் ஆபீஸ்க்கு வந்தவுடனே முதல் பார்த்தது, அவள் மனதில் முதல் பதிந்தது அவன் முகம் தான் நந்தன். அன்றிலிருந்தே அவனை அவள் நேசிக்கத் தொடங்கினாள். அவனை நேரில் பார்க்கவோ, பேசவோ அவளுக்குத் தைரியம் இல்லை. அதனால் அவன் நண்பன் மூலமாகத் தன் காதலை வெளிப்படுத்த நினைத்து கோபாலிடம் நெருங்கிப் பழகினாள். தான் காதலை அவள் மனதினுள் பூட்டி வைத்து மன வேதனையால் துடித்தாள்.

வெளியூர் சென்ற நண்பர்கள் இருவரும் தங்களுடைய வேலையை முடித்துக் கொண்டு வீடு திரும்பினார்கள். கோபாலின் மனதில் விஜிதாவின் நினைவாகவே இருந்தது. தன்னிடம் அவள் பேசும் அனைத்தும் அவள் விரும்புவது போலவே இருந்தது. அவளும் அவனைக் காதலிக்கிறாள் என்று தான் அவன் நினைப்பு. தன்னுள்ளே சிரித்தான். முதலில் போய் அவளைத் தான் பார்க்கவேணும் என்று நினைத்துக் கொண்டான். வெளியூரில் இருந்து வந்த அடுத்த நாள் கோபால் முதலில் ஆபீஸுக்குப் போனான். விஜிதா அவனைக் கண்டதும் குட்மோர்னிங் கோபால் என்றாள். பதிலுக்கு அவனும் மோர்னிங் சொன்னான். என்ன தனியாய் உங்க நண்பனைக் காணவில்லை போன இடத்தில் விட்டுவிட்டு வந்திட்டீங்களா? என்று கிண்டலாகக் கேட்டாள். கோபால் சிரித்தபடி இல்லை விஜிதா அவன்


சிவராதினி
அக்கரைப்பற்று.

வருவான் கொஞ்சம் லேட் ஆகும். அப்படியா பயணம் எப்படி என்ன விஷயமாய் போனீங்க என்று வினவினாள். ஆம் விஜிதா ஒரு அவசரத் தேவையாய்ப் போனோம். உனக்கு யார் சொன்னது என்றான் கோபால். நேற்று உங்கட வீட்டுக்குப் போயிருந்தேன். உங்கட அம்மா சொல்லித் தெரியவந்தது. கோபால் தன் மனதில் ஆசையை மேலும் வளர்த்துக் கொண்டான்.

இவர்கள் பேசிக் கொண்டே இருக்கும் போது நந்தன் வந்தான். என்ன கோபால் வேலை செய்யாமல் இங்க என்ன செய்கிறாய்? எனக் கேட்டான். வா என்றவாறு சொல்லிக் கொண்டே சென்றான். அவனும் பின்னாலே சென்றுவிட்டான். அவளும் அப்படியே சென்றாள். அவரவர் தங்களுடைய வேலையைப் பார்த்தார்கள். கோபால், விஜிதா தன்னை விரும்புவதாகத் தன் நண்பனிடம் சொல்லிவிட்டான். நானும் அவளை விரும்புகிறேன். என்னால் அவள் இல்லாமல் வாழ முடியாதுடா என்றெல்லாம் நந்தனிடம் அவன் சொன்னான். அவர்கள் இருவரும் பழகும் விதம் பார்த்து நந்தனும் அப்படித்தான் நினைத்தான். அவனுக்கு ஒருபக்கம் சந்தோஷம் தான். ஆனால் அவள் எப்படிப்பட்டவளோ என்பது சரியாக அவனுக்குத் தெரியவில்லை. அதில் ஒரு கவலையும் இருந்தது. தன் நண்பன் ஒரு கஷ்டமும் இல்லாமல் சந்தோஷமாய் இருக்கவேண்டும் என்பது அவன் விருப்பம். அவனுக்காக எதையும் செய்வான். ஒரு நாள் கோபாலும், டேய் மச்சான் விஜிதா என்னிடம் ஏதோ முக்கியமான விஷயம் சொல்ல வேணுமாம். என்னை கோயிலுக்கு வரச் சொன்னாள். என்னடா செய்வது போகவா? என்று கேட்டான். சரி போ என்ன சொல்கிறாள் கேளு. இதையெல்லாம் விட்டு வைக்கக்கூடாது. உடனே சொல்லிவிட வேணும் என்றான் நந்தன். அன்று வெள்ளிக்கிழமை. கோயிலுக்குச் சென்றான் கோபால். அவன் போகுமுன் அவள் அவன் வருகைக்காகக் காத்திருந்தவள் போல் அவன் கண்களுக்குத் தோன்றினாள். கோவிலுக்குள் சென்று இறைவனை வணங்கிவிட்டு விஜிதாவின் அருகில் உட்கார்ந்தான் கோபால். இருவரும் சற்று நேரம் மௌனமாகினார்கள். அதன்பின் கோபால் என்ன விஷயம் சொல்ல வேண்டும் சொன்னாய். எதுவும் பேசாமல் இருக்கிறாய் என்றான். அது நான் கேட்கிறேன் எதுவும் நினைக்கக்கூடாது. அப்படி நினைக்காட்டி கேட்கிறேன் என்றாள் விஜிதா. கேளு என்றான். தலையைக் குனித்துக் கொண்டே கோபால் நான் உங்கட நண்பன் நந்தனைக் காதலிக்கிறேன். நீங்க தான் எப்படியாவது அவனிடம் சொல்லவேணும் என்றாள். கோபாலுக்கு என்ன செய்வதென்று தெரியாமல் அவன் கண்களிலிருந்து கண்ணீர் வந்தது. என்ன கோபால் எதுவும் பேசாமல் இருக்கிறீங்க எனக் கேட்டவாறு நிமிர்ந்து பார்த்தாள். அவன் கண்களில் இருந்து கண்ணீர் வருவதைப் பார்த்தாள். என்ன கோபால் இது. நான் என்ன சொல்லிவிட்டேன் என்று அழுகிறீங்க எனக் கேட்டாள். இல்லை விஜிதா நீ அவனை விரும்புகிறாய் என்று ஏன் முன்னமே என்னிடம் சொல்லவில்லை. நான் இவ்வளவு நாளாய் என்னைத்தான் விரும்புகின்றாய் என்று நினைத்தேன் எனச் சொன்னான். என்ன சொல்லுறீங்க. நான் உங்களை காதலித்ததா? என்றாள். ஆம் விஜிதா நீ என்னை விரும்பியது என்று தான் அவனுக்குத் தெரியும். அவனுக்கு உன்னைக் கண்டாலே பிடிக்காது. அவன் உன்னை எப்படி விரும்புவான். எதுக்கும் நான் அவனிடம் சொல்கிறேன். அதற்கு மேல் அவனுக்கு எதுவும் பேசமுடியவில்லை. நான் கிளம்புகிறேன் என்று கிளம்பிச் சென்றான் கோபால். நேராக வீட்டுக்குச் சென்று அவன் தாங்க முடியாமல் தலையணையில் முகம் புதைத்து குமுறி அழுதான். மணிக்கூட்டைப் பார்த்துக் கொண்டு நின்றான் நந்தன். என்ன இது இன்னும் காணவில்லை என்று தனக்குள் நினைத்தவாறு நின்றான். போய் பார்ப்பம் என்று அவனுடைய வண்டியை எடுத்துக் கொண்டு கோபால் வீட்டுக்குச் சென்றான். அங்கு கோபால் வீட்டில் அவன் இல்லை. எங்கே போயிருப்பான்? கடைசியில் விஜிதாவைப் பார்க்கத்தானே போனான். என்ன ஆச்சு இவனுக்கு? எதுக்கும் விஜிதாவுக்கு போன் பண்ணிக் கேட்போம். என்று விஜிதாவுக்கு போன் பண்ணினான். விஜிதா அவர் ஐந்து மணிக்கே போய் விட்டார் என்று சொன்னாள். அவன் கடுமையாக யோசித்தான். ஒருநாளும் என்னிடம் சொல்லாமல் எங்கேயும் போகமாட்டான். அவளைப் போய் பார்த்து வந்தவுடன் தானே அவனைக் காணவில்லை என நினைத்துக் கொண்டு அவளிடம் நேரடியாகப் போய்க் கேட்டால் தான் தெரியும். விஜிதாவின் வீட்டுக்குச் சென்றான்.

நேரம் பத்தரையைத் தாண்டிக் கொண்டிருந்தது. விஜிதாவின் வீட்டுக் கதவை தட்டினான். கதவைத் திறந்தாள் விஜிதா. கோபால் எங்கே என்று கேட்டான். அவனை என்ன செய்துவிட்டாய்? அவனை என்னிடம் இருந்து பிரித்து விட்டாயா? அவனை எங்கு மறைத்து வைத்திருக்கிறாய்? என்று கத்தினான். நான் ஒன்றும் உங்க நண்பனை, பிரிக்கவோ மறைக்கவோ இல்லை. அவர் அப்பவே போயிட்டாரு. அதுக்குப் பிறகு எனக்கு எதுவும் தெரியாது எனச் சொன்னாள். உன்னைத் தானே கடைசியாய் பார்த்தவன் என்றான் நந்தன். அதுக்குப் பிறகு என்ன நடந்துச்சு அதையாவது சொல்லு. விஜிதா எதுவும் பேசவில்லை. நான் அவரை விரும்புகிறேன் என்று அவர் தப்பாய் நினைத்து விட்டார் என்றாள். அப்போ அவனை நீ விரும்பவில்லை என்றால்...அவன் முடிக்குமுன் நான் உங்களைத் தான் விரும்புகின்றேன் என்றாள். என்னடி நடிக்கிறியா? அவனிடம் எப்படியெல்லாம் நெருங்கிப் பழகினாய். சிரிச்சு, சிரிச்சுப் பேசி இப்போ அவனை காதலிக்கவில்லை என்று சொன்னால் என்ன அர்த்தம் என்றான். நான் அவரை விரும்பவில்லை என்று அர்த்தம் அவள் சொன்னாள். சீ வாயை மூடு. இதுக்கு மேல ஒன்றும் பேசாதே. பேசினால் கொன்றிடுவன். அவனுக்கு ஏதாவது ஆச்சு, நீ உயிருடன் இருக்கமாட்டாய் என்று மிரட்டிவிட்டு அவனைத் தேடிப் போனான். போகும் பாதையில் வீழ்ந்து கிடந்தான் கோபால். டேய் கோபால் எழுந்திடுடா. என்னடாச்சி. டேய் எழுந்திரு என்று அவன் தலையைத் தூக்கித் தன் மடியில் வைத்து, கோபாலை எழுந்திருடா என விம்மி விம்மி அழுதான். அவன் எழும்புவதாய் தெரியவில்லை. அவன் லேசாக அவன் மூக்கில் கையை வைத்துப் பார்த்தான். மூச்சு நின்றதை உணர்ந்தான். அப்படியே அவன் கையை அவனுடைய கைகளுக்குள் வைத்தான். ஏதோ ஒரு கடதாசியும் இருந்தது. கடிதாசியை எடுத்துப் பிரித்துப் பார்த்தான். ஒரு சின்ன விசப் போத்தல். அதோடு ஒரு கடதாசியும் இருந்தது. கடதாசியை எடுத்துப் பிரித்துப் பார்த்தான். அதில் அவன் கைப்பட எழுதியிருந்தது. "அன்பின் நண்பா நீ எனக்காக எவ்வளவு செய்திருக்கிறாய். உனக்காக நான் எதுவும் செய்யவில்லை. அதனால் என் காதலை என் உயிரை உனக்காக விட்டு விடுகிறேன். நான் உயிருடன் இருந்தால் உன்னை காதலிக்கும் விஜிதாவுக்கு இடைஞ்சலாக இருப்பேன். அதனால் நான் பிரிந்து நீங்கள் இருவரும் வாழணும் என நினைக்கிறேன். அவள் உன்னைத்தான் காதலிக்கிறாள் என்று சொல்லிவிட்டாள். அவளை நீ ஏத்துக்கத்தான் வேணும், இது எனது கடைசி மூச்சு இருக்கும் போது எழுதுகிறேன். இப்படிக்கு உனது நண்பன் கோபால்" என எழுதியிருந்தது. ஐயோ என்ன காரியம் செய்தாயடா நீ இல்லாமல் என்னால் எப்படி வாழ முடியும். நீ சாவதற்குக் காரணமாய் இருந்த அவளை நான் ஏத்துக்கணுமா. அது இந்த ஜென்மத்தில் நடக்காது. நீ இல்லாத உலகத்தில் நான் வாழ்வதா அப்படியே கொலை வெறி கண்களோடு விஜிதாவின் வீட்டுக்குச் சென்றான். அங்கு விஜிதா நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டிருந்தாள். அப்படியே அவளை தலையணையால் மூச்சுமுட்ட முட்டக் கொன்றான். அப்படியே பின்னால் போய் விழுந்து கிடந்தான். அதிகாலை பொழுது விடிந்தது. பொலிஸ்க்கு யாரோ புகார் கொடுத்தனர். உடனே பொலிஸ் வந்து நந்தனை கைது செய்தது. தன் நண்பனுக்கு நேர்ந்தது யாருக்கும் நேர்ந்திடக்கூடாது என நினைத்தான். இப்போது நந்தன் ஒரு கொலை கைதியாய் சிறையில் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

(யாவும் கற்பனை)

# அவளுக்காக ஒரு பாடல்!

'பன்னிரண்டு வருடங்கள் எப்படித்தான் ஓடி மறைந்தனவோ!!' சொந்த மண்ணில் காலடி எடுத்துவைத்த போது எனக்கேற்பட்ட ஆனந்தத்துக்கு அளவே இல்லை! வார்த்தைகளில் வர்ணிக்க முடியாத நெகிழ்ச்சி அது! அலை மோதும் ஆனந்தத்தால் பூரித்துப் போனது உள்ளம்! தாயைப் பிரிந்த கன்று, பசுவிடம் சேரும் போது ஏற்படும் பரவசம் என்னில்! தலைமுறை தலைமுறையாக நாங்கள் இதயசுத்தியுடன் வாழ்ந்து வந்த மண்ணாயிற்றே! 'உயிர் தமிழுக்கு; உடல் மண்ணுக்கென்றுதான், நாங்களும் எண்ணியிருந்தோம். ஆனால் அந்த எண்ணத்தில் மண்ணை வாரிப் போட்டார் சண்டாளர்! ஆசைக் கனவுகளை விழிகளும் சுமந்திருக்க, இலட்சிய வேட்கையோடு இளமை துள்ளி நின்ற பொற்காலம் அது! எண்ண எண்ண இனித்திடும் பசுமரத்தாணி போன்ற நினைவுகள்: உணர்வுகளால் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடிய சுகமான அனுபவங்கள் அவை! அடடா ரம்மியமான அந்தக் காலம் திரும்பி வரவா போகிறது?. வாழ்க்கையை ஒரு தவமாகவே எண்ணியிருந்த எனக்கு



எப்படியெல்லாமோ வாழ வேண்டுமென்ற ஆசைகளும், எதிர்பார்ப்புகளும் அதிகமாகவே இருந்தன. அந்த விடலைப் பருவத்தில் தோன்றிடும் கற்பனைகளும், கனவுகளும் அற்புதமானவைதாம்! 'முளை அரும்பாகி மலர்ந்திடும் சமயம்' பார்த்து, வீசிய இனவாத சூறைக்காற்றில் சிக்குண்டு இருப்பிடமிழந்து, எல்லாம் துறந்து அகதியாய் உருவெடுத்த போது சுக்கு நூறானது இதயம்! இதயம் மட்டுமா...? அன்று 'சங்குப்பிட்டி' கடலோரத்தில் நாங்கள் தாரை வார்த்த கண்ணீரெல்லாம் இன்னும் காயாமலிருப்பதாகவே கண்டவர் சொல்லக் கேட்டறிந்தோம்.

ஊர் மனைக்குள் நான் நுழைந்த போது எதிர்ப்பட்ட இடிபாடுகளைக் கண்டதுமே என் இதயம் கனத்தது. ஏதோ தொல்பொருள் ஆராய்ச்சியாளன் போல் ஒவ்வொரு இடமாகப் பார்வையிட்டேன். எல்லாம் தலைகீழாக மாற்றமடைந்திருந்ததைக் காணவே மனம் வலித்தது." என் தேசமே! ஏன் எங்களுக்கு இந்தக் கதி நேரவேண்டும்? நாங்கள் செய்த குற்றம் தான் என்ன?" யாரிடம் நீதி கேட்பது? நீதி கேட்டுப் போராட இது ஒன்றும் பாண்டிய காலமல்லவே 'வாய் இருந்தும் ஊமையாக வாழ்வதுதான் உத்தமம், என்பதைக் கற்றறிந்த அனுபவங்கள் அறிவுறுத்தின. ஊரைச் சுற்றிப்பார்த்து, தெரிந்தவர்கள், அறிந்தவர்கள் நண்பர்கள் என ஒவ்வொருவராக சென்று சந்தித்து குசலம் விசாரித்து, அவர்கள் காட்டிய உபசரிப்பில் உவகையுற்று, அன்பு மாரியில் நனைந்து, இறந்த காலத்துக்குள் நுழைந்து, இனிய நினைவுகளில் மிதந்து, மனம் மகிழ்ந்து - இப்படிப் பொழுதுகள் போய்க்கொண்டிருந்தன. 'என்னதானிருந்தாலும் சொந்த மண்ணில் சுகித்திடும் சுகமே அலாதியானதுதான்!' எம்முன்னோர் செய்த புண்ணியமோ என்னவோ நாங்கள் இம்மண்ணில் பிறக்க நேர்ந்தது! இத்துணை சிறப்புமிக்க மண்தான் இன்று சீரழிந்து சின்னா பின்னமாகிக் கிடக்கிறதே!

- யாழவீர் மர்சூன் -

வந்தாரை வாழ வைத்த பூமிதான் இன்று வனப்பிழந்து வாடிக்கிடக் கிறதோ?! என்னால் ஆதங்கப்படாமல் இருக்க முடியவில்லை! 'என் உயிர் நாடியான இந்தப் பூஞ்சோலையை உருக்குலைத்தவர்கள் நாசமாய்ப் போகட்டும்!!" மனம் சபிக்கத்தான் செய்தது. காயம் பட்டவனுக்குத் தானே அதன் வலியும் வேதனையும் தெரியும்! இவை எல்லாவற்றையும் மிஞ்சினாற்போலே பெரும் அதிர்ச்சியை எனக்குத் தந்தது இன்னொரு விடயம்!

எங்கள் வீட்டிற்குப் பக்கத்து வீட்டில்தான் குடியிருந்தது அந்தக் குயில்! பெயர் சதா! சாந்தமான நிலா! அந்தக் காலத்து சரோஜாதேவியின் சாயலில் பாதியும், நடுவில் வந்து போன நதியாவின் சாயலில் மீதியுமான முகவெட்டும், துருதுருத்த பார்வையும், துடிப்பும் பார்ப்போரை மீண்டுமொருமுறை பார்க்கத் தூண்டிவிடும். மூன்று அண்ணன்மார்களுக்கு ஒரே தங்கை அவள். அதனால் அவர்கள் அவள் மீது உயிரையே வைத்திருந்தனர். அவளது செல்லப் பேச்சும் கிளி மொழியும் கேட்கக் கேட்கத் தெவிட்டாதது. வீட்டில் அவள் இருந்தாலே ஒரே கலகலப்புத்தான் போங்கள்! அண்ணன்மாரோடு அவள் போடும் சின்னச் சின்ன சண்டைகளும், செல்லச்சிணுங்கல்களும் இருக்கின்றனவே... அடடா அதை என்ன வென்று சொல்ல? இன்றும் என் காதில் எதிரொலித்துக் கொண்டுதானிருக்கின்றன! இரை மீட்டும் என் நினைவுகளில் அவளும் வந்து போவதுண்டு. இப்படியெல்லாம் நான் பிதற்றிடுமளவுக்கு ஏதோ ஒரு வகையில் அவள் என் மனதைக் கவர்ந்தது என்னவோ உண்மைதான்! விடலைப் பருவத்தில் தோன்றிடும் விந்தையான எண்ணங்களுக்கு நான் மட்டும் விதிவிலக்கா என்ன? குறும்புக்காரியான அவள் நடைமுறையில் மிகவும் ஒழுக்கமானவள். கண்டிப்பான பேர்வழி! சில சமயங்களில் அவளுடைய அடக்கத்தையும், அமைதியையும் கண்டு நானே வியந்திருக்கின்றேன். வெளியார் எவருடனும் இலகுவில் அவள் பேசமாட்டாள். கேட்ட கேள்விக்கு மட்டும் அவளிடமிருந்து பதில் வரும் அவ்வளவுதான்! அவளோடு தமாஷ் பண்ணப் போய் மூக்கறுந்து போன அனுபவம் எனக்குண்டு! இப்படி கள்ளம் கபடமில்லாமல் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்த அந்தக் கலைமான் ஒருநாள் நோயுற்று உடல் தளர்ந்து படுக்கையில் விழுந்ததாம்! அதன் பிறகு அது எழுந்திருக்கவே இல்லையாம்! இப்படி அவளது தந்தை நடராஜா என்னிடம் சொல்லிய அதிர்ச்சியூட்டும் தகவல் கேட்டு ஆடிப் போனேன் ஒரு கணம்! அந்த அதிர்ச்சியிலிருந்து நான் விடுபட சிறிது நேரமாகியது. படுத்த படுக்கையாய் வாடிக் கிடந்த அந்த வெண்புறாவை நேரில் சென்று பார்க்கும் வரையில் என்னால் நம்பவே முடியாதிருந்தது! "இறைவா! இது என்ன சோதனை! ஏன் இவளுக்கு இப்படி ஒரு நிலை? பாவமல்லவா இவள்!" விழி மடல்களைத் தாண்டி விழுந்தன கண்ணீர்த் திவலைகள். என்னை ஒருவாறு ஆசுவாசப்படுத்திக் கொண்டேன். "இந்தாரும் தம்பி, தேத்தண்ணி குடியும்..." சதாவின் அம்மா தேநீர் கோப்பையை என்னிடம் தந்தார். அதை நான் வாங்கி அருகிலிருந்த டீப்போ மீது வைத்து விட்டு நடராஜா அண்ணனின் பக்கம் திரும்பினேன். அவர் முகத்தில் சலனமில்லை! அவர்களைப் பார்க்க பரிதாபமாகத்தான் இருந்தது. "அண்ணே... மகளுக்கு எழும்புருக்கி நோயெண்டு சொல்லுறியள். இது முதலே உங்களுக்குத் தெரியாதோ?" இல்லையே அப்பன் தெரிந்திருந்தால் விட்டிருப்போமே? நல்லாத்தானே இருந்தவள்... இப்படி திடீரென்று கொள்ளையிலே போற நோய் வருமெண்டு ஆர் கண்டது ஐயா! உம்... எல்லாம் எங்களின்ர தலை எழுத்து!" அழாக்குறையாக அவர் சொன்னார். "தம்பி! கடவுள் எங்களுக்குக் கொடுத்தது ஒரேயொரு பெட்டையைத் தான். இப்போ அதையும் வாங்கிக் கொண்டான்! ஒவ்வொரு நாளும் அணுவணுவாய் எங்களின்ர கண்ணுக்கு முன்னாலேயே பிள்ளையின்ர உயிர் போய்க்கொண்டிருக்கிற கொடுமையைக் கண்டீரோ!" சதாவின் அம்மா அழுது புலம்பினாள். எனது சோகம் இரட்டிப்பானது. அவர்களுக்கு எவ்விதம் ஆறுதல் சொல்வது? மரணப்படுக்கையில் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்த மாசறு மாணிக்கத்தின் முகத்தைக் காண மனம் பதைத்தது.

அப்பெற்றோர்களின் மனோ நிலையை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. "என்னத்தைச் சொல்லி அவர்களைத் தேற்ற!" ஆயிரம் தான் ஆறுதல் சொன்னாலுமே அற்ப ஆயுளில் போகப் போகின்ற ஓர் உயிரை தடுத்து நிறுத்திவிட முடியுமா என்ன? தமது மகளின் முடிவு அவர்களுக்கு முன்னமே தெரிந்து விட்டது! இப்படி ஓர் அவலம் இனி எந்தப் பெற்றோருக்கும் வரவே கூடாது பாவம்! அவர்களிடமிருந்த நிலையறிந்து அவர்களுக்கு சிரமம் கொடுக்காது, அவர்களிடமிருந்து விடைபெற்றேன். எமது பேருந்து கொழும்பை நோக்கிப் புறப்பட்டது. இருப்புக் கொள்ளவில்லை எனக்கு. நடந்து முடிந்த யாவும் ஒரு கனவு போல் தோன்றின. சதாவுடைய சோகம் என்னுள்ளத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டது. பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பு நடந்தவைகளையே அசை போட்டுக் கொண்டிருந்தது என் மனம்: அதிலிருந்தது ஒரு சுகம்! பிரயாணப் பையிலிருந்த எனது "நாட்குறிப்பேட்டை' கையில் எடுத்தேன்.

துள்ளித் திரிந்த கலைமான் ஒன்று, நோயில் வீழ்ந்ததுவோ? - அதன் கிள்ளை மொழியும் கீர்த்தியுமின்று, கொள்ளை போயினவோ?! வெள்ளிக் கொலுசுகள் பாடியராகம், பாதியில் ஓய்ந்திடுமோ?!"

பற்றிகொள்ளா பருவப் பூங்கொடி, பாடையில் ஏறிடுமோ? என் இதயத்தளத்திலிருந்து அவளுக்காக ஒரு பாடல் பிறக்கவும் அதை அப்படியே நாட்குறிப்பேட்டில் பதிவு செய்து கொண்டேன். 'வெண்ணிலா உதிர்ந்த வானம் வெறுமை ஆனது போல் நான் எதையோ இழந்தவனாய் ஊர் திரும்பினேன். பேருந்தின் சக்கரம் போலவே என் மனதில் நினைவுகளின் சக்கரம் சுழன்று கொண்டே இருந்தது!

(யாவும் கற்பனை)

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

நாகரீகம் என்னும் சொல்லுக்கு இதுவரையில் கூறப்பட்ட விளக்கங்கள் எத்தனையோ இருக்கிறது. ஆயினும் நாகரீகம் என்பதற்குத் திருந்திய வாழ்க்கைமுறை என்பது மிகப் பொருத்தமான பொருள் எனக் கொள்ளலாம். காட்டுவாசியாக இருந்த மனிதன் படிப்படியாக அறநெறிகளைப் பின்பற்றத் தொடங்கிய காலத்தை நாகரீகம் தொடங்கியகாலம் என்று எடுத்துக் கொண்டால், உணவுக்காகச் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் சில மிருக இனங்களைப்போல் மனிதனுக்கு உணவுப் பற்றாக்குறையால், உணவுக்காகச் சண்டையிட்டுக் கொண்ட காலமும் உண்டு. அந்த நிலை மாறி உணவுக்காக மனிதன் பயிர்த் தொழிலில் ஈடுபடத் தொடங்கிய காலம் நாகரீகத்தின் ஆரம்ப காலம் என்று வரலாறு கூறுவதனால், மனித இனம் உணவுக்காகச் சண்டையிட்ட காலம் மாறி தம்மிடமுள்ளதை மற்றவருக்குக் கொடுத்து மகிழும் காலம் என்று உருவானதோ அதுவே நாகரீக காலம் எனக் கொள்ளலாம். ஆக, நாகரீகம் என்பது பகிர்ந்துண்ணும் பண்புதான் என்பது புலனாகின்றது. இதை அடிப்படையாகக் கொண்டுதான் வள்ளுவர் இப்படிக் கூறிவைத்தார் போலும்.

**"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"** *குறள் : 451*

உயிரைக் காப்பதற்காக உடலைக் காத்து வாழ்வதெல்லாம் தம் வீட்டுக்கு வருகின்ற விருந்தினரை உபசரித்து அவர்களின் வாழ்வுக்கும் உறுதுணையாக இருப்பதற்கேயாம்.

# உறங்குமா காதல் கண்கள்?

தருவது **கற்பகன்**

சிரிப்பொலி அந்த மாளிகையையே அதிரவைத்து அடங்கியபோது, அலைமோதிக் கொண்டிருந்த காதலர்களின் உள்ளங்களில் இன்பத்தின் நாதம் எதிரொலிக்கத் தொடங்கி இருந்தது. இளமையின் வனப்புக்குத்தான் எத்தனை காந்தசக்தி. இத்தனைக்கும் தூண்டுகோலாக இருந்தது என்ன? அவர்களின் எழில் உருவந்தானே? இல்லையேல், இருவருக்கும் ஏற்கனவே ஏதாகிலும் ஒரு சந்திப்புக்கூட இல்லாத போதும் விக்கிரமனின் கம்பீரமான தோற்றமும், அவன் அசாத்தியத் துணிச்சலும் மரகதவல்லியை அவன் மேல் அமோகமானதோர் காதலை ஏற்படுத்தியிருக்குமா? அது மட்டுமல்லாமல் அவனுக்காக எதையும் இழக்குமளவுக்கு அவளைத் தூண்டியிருக்குமா?

விக்கிரமன், இதுவரையில் எத்தனையோ அழகிகளின் பிறப்பிடமென்றே சொல்லுமளவுக்கு அலை மோதுகின்ற அழகிகள் கூட்டத்தை ஆட்சி செய்தும் அவனுள்ளத்தில் இதுவரையும் ஒரு பெண்ணால் கூட இடம்பிடிக்க முடியவில்லை என்றால் அந்த அளவிற்கு அவன் பெண்களில் நாட்டங்கொள்ளாதிருந்தது மட்டுமல்ல, அவன் மனதில் இடம்பிடிக்க முடியாத அளவுக்குக் கட்டுப்பாடாக இருந்திருக்கிறான். அத்தகைய ஒரு வீரனின் மனதில் இடம் பிடித்த மரகதவல்லியின் பேரழகு, அவள் பூவுடலில் அவன் கண்ட அற்புதங்கள் அவனை அறியாமலே அவள் கையைப் பற்றிக் கொண்டது. இவைகளெல்லாம் பருவத்தில் ஏற்படும் சாதாரண நிகழ்வுகளாயினும் நடந்து முடிந்ததோ ஒருவிதத்தில் வித்தியாசமானதோர் நிகழ்வுதான்.

காதல் வசப்பட்டவர்களின் மனத்துடிப்பை வர்ணிக்க வார்த்தைகள் இருக்கிறதா?. அத்தனையும் சொல்லால் முடிக்கப் பெறாதவை. மரகதவல்லியின் வனப்பு அத்தகையது. அதில் விக்கிரமன் கொண்ட காதல் அன்பு பரவிக் கிடந்ததோர் பூமெத்தை. ஆரம்பமே அதுதானோ?

நடுநிசியைத் தாண்டிய வேளை மரகதவல்லி மஞ்சத்தில் புரண்டுகொண்டிருந்தாள். உறக்கம் அவள் கண்களைத் தழுவ மறுத்தது. அவளருகில் படுத்திருந்த அங்கயற் கண்ணியோ ஆழ்ந்த உறக்கத்திலிருந்தாள். ஜாமம்வரை விழித்திருந்த நித்திரைக் கலக்கம் அவளை ஆட்கொண்டு விட்டிருந்தது. ஆனால், மரகதவல்லியின் நெஞ்சில் புயலாய் உருவெடுத்த ஏக்கம் அவள் கண்களில் தூக்கத்திற்குத் தடைவிதித்துவிட்டது.

மரகதவல்லி மஞ்சத்தை விட்டு



மெல்ல எழுந்து கொண்டாள். அவள் உள்ளத்தில் என்றுமில்லாததொரு படபடப்பு. சுற்றுமுற்றும் பார்த்தாள். ஒரே நிசப்தம். அங்கயற்கண்ணி படுத்திருந்த இடத்தை மீண்டும் ஒருமுறை பார்த்தாள். அவள் இன்னும் ஆழ்ந்த உறக்கத்திலிருப்பதை உறுதி செய்து கொண்டாள். இப்போது அவளுக்கு விக்கிரமன் எங்கே இருக்கிறான் என்று அறிவதுதான் அவளின் நோக்கமாக இருந்தது. இதுவரையில் அந்த மாளிகையில் அந்நியர் எவருமே தங்கியதில்லையே! அப்பா இவரை எங்கே தங்க வைத்திருப்பார்? என்ற கேள்வி மனதைக் குடைந்து கொண்டிருந்தது.

எத்தனையோ அறைகளைக் கொண்ட அந்த மாளிகையில் அப்பாவுக்காக ஒதுக்கப்பட்டிருந்த பகுதியில் அவர் தங்கியிருந்தால் என்ன செய்வதென்ற கேள்வி எழுந்தபோது, அவள் மனதிலோர் அச்ச உணர்வும் அதேவேளை ஓர் இனந்தெரியாத துடிப்பும் ஏற்பட்டதென்றாலும், அவள் மனம் 'சேச்சே! அப்பா தன்னோடு அவரைத் தங்க வைத்திருக்கமாட்டார்' என்றதோர் நம்பிக்கை தோன்றியபோது, இந்த மாளிகையை விட்டு எங்கேதான் போய்விடப் போகிறார் என்ற எண்ணம் அவளை மேலும் விக்கிரமனைத் தேடும் முயற்சியில் ஈடுபடுத்தியது. அந்த முயற்சியில் அவள் வெற்றியுங்கண்டாள். ஆமாம். உப்பரிகையை அண்டியுள்ள அந்தப் பிரமாண்டமான அறையை சாளரத்தின் வழியாக எட்டிப்பார்த்தாள் மரகதவல்லி. அவளை அறியாமலேயே அவள் கண்கள் மலர்ந்தன. உள்ளம் பூரித்தது. என்ன ஆச்சரியம்! அந்த அறையின் மத்தியில் அமைக்கப்பட்டிருந்த அழகு மணிக் கட்டிலில் விக்கிரமன் அமர்ந்திருந்தான். அலங்காரப் பொருட்கள் அவனைச் சுற்றி அவன் அழகுக்கு அணிகலனாகத் தோன்ற, தென்றலின் அரவணைப்பு அந்த அறையைக் குளிரூட்டிக் கொண்டிருந்தது. வாசனைத் திரவியங்கள் அந்த ரம்மியமான வேளையில் மனதுக்கு ஏதோ ஒரு சுகத்தைத் தந்து கொண்டிருந்தது. அத்தகையதோர் இன்பமான வேளை தூங்காத கண்களையும் தூங்க வைக்குமே! அப்படியிருக்க, இவர் மட்டும் விழித்திருந்து எதை யோசிக்கிறார்? என்ற எண்ணம் மனதைக் கேட்டுக் கொண்டிருந்தது.

மெதுவாக அந்த அறையின் வாயிலை அடைந்த மரகதவல்லியின் உடலில் இனந்தெரியாத ஒரு நடுக்கம் கண்டது. அது அச்சத்தாலா? அல்லது ஆசையாலா?அந்தரங்கத்தின் அம்பலமா? அவள் நிழல் அந்த மண்டபத்தின் கதவருகே அசைந்த போது, எதிர்பாராதவண்ணம் விக்கிரமனின் கண்களில் பட்டுவிட்டது. அவன் எதிர்பாராததொரு காட்சியது. "யாரது?" என்று விக்கிரமன் கேட்டபோது, மரகதவல்லி எதுவுமே பேசாத சிலை போல் நின்று விட்டாள். மேலும் அவனால் அமர்ந்திருக்க முடியவில்லை. எழுந்து கதவண்டை சென்றபோது, பேசாத பதுமை தன் காந்தக் கண்களை அவன் மேல் வீசியது.

***"நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு***
***தானைக் கொண்டன்ன துடைத்து."***

*அதிகாரம் - 109.*
*குறள் - 1082.*

## சிந்தியா பதில்கள்

**✍ வடக்கு, கிழக்கில் தற்போது நடந்து வரும் தாக்குதல்கள் தொடர்பாகப் படைத்தரப்பும் - புலிகளும் பொய் சொல்கிறார்கள். நீராவது உண்மையைச் சொல்லமாட்டீரா?**

*-எஸ்.பாலமுருகன் - தாண்டியடி.*

மாவிலாறு, யாழ்ப்பாணம், சம்பூர் ஆகிய பகுதிகளில் புலிகள் பெரும் சமர் செய்தும் முடியாமல் இடங்களைக் கைவிட்டுப் பின்வாங்கியுள்ளார்கள். அதேபோல் படைத்தரப்பும் ஒவ்வொரு ஒரு மீற்றரையும் மிக மூர்க்கத்தனமாகப் போரிட்டுத் தான் கைப்பற்றியுள்ளது. இந்த வெற்றிக்காகவும், தோல்விக்காகவும் இருதரப்பும் கொடுத்த விலை மிக அதிகமானது. இடம்பெயர்ந்த மக்கள் கூட அரசியல் விழிப்புணர்வோடுதான் வாக்குமூலம் தருகிறார்கள்.

ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு இன்னும் கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது என்பதை புரிந்து கொண்டும் நீர் இப்படிக் கேட்டது சரியோ, முறையோ?.

**✍ போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பாதுகாப்பை உறுதிப்படுத்த என்ன செய்யலாம்.**

*-ஏ.எம். உவைஷ் - மாஞ்சோலை -*

பாதுகாப்பைக் கண்காணிக்க இன்னொரு குழு நியமிக்கலாம். இப்படியே ஒவ்வொன்றுக்கும் ஒரு குழுவும், ஆணைக்குழுவும் என்று போனால், நீரும் நானும் எந்தக் குழுவோ யார் கண்டது. இப்போதைக்கு நீர் கேள்வி கேட்கும் குழு, நான் பதில் வழங்கும் குழு. போதுமா...

**✍ இந்தியாவுக்கு அகதிகளாகப் போகும் நம்மவர்கள் அங்கு கொடுக்கும் வாக்குமூலங்களைக் கேட்கும் பொழுது மிகைப்படுத்திச் சொல்வது போல் இருக்கிறதே?**

*மா. ரூபாகரன் - களுத்துறை.*

தங்களோடு ஊடுருவித் தாக்கக்கூடிய எதிரி மீதான பயமாகவும் இருக்கலாம். எது பாதுகாப்போ அதைச் செய்கிறார்கள். விட்டு விடுங்கள்.

**✍ ஊடகவியலாளர் குருபரன் கடத்தப்பட்டபடியால் அவருக்கு அச்சுறுத்தல் இருப்பதைக் காட்டி, அவர் எங்காவது ஒரு நாட்டுக்கு குடும்பத்தோடு குடியுரிமை கேட்கலாமல்லவா?.**

*யோ. ரூபினி - கொட்டாஞ்சேனை -*

அவர் கடத்தப்பட்டபோது கவலைப்பட்டீர்கள். விடுவிக்கப்பட்டவுடன் சந்தேகப்படுகிறீர்கள். இந்தச் சந்தேகம் உங்களுக்கு மட்டுமில்லை. தொலைக்காட்சி நிகழ்ச்சி நடத்தும் சிலருக்கும் இருப்பதை அவர்கள் மறைமுகமாக வெளிப்படுத்தி வருகிறார்கள். ஒரு குட்டிக் கதை கேளுங்கள்.

முல்லா ஒரு நாள் காட்டு வழியாக வந்து கொண்டிருந்தார். அவரை வழிப்பறித் திருடன் மடக்கிப் பிடித்து அவரது கழுத்தில் கத்தியை வைத்துக் கொண்டு கேட்டான்.

"ஏய் முல்லா... மன்னனை எப்படியாவது ஏமாற்றி, எதையாவது சொல்லி, பணம் வாங்கி விடுகிறாயே, எப்படி உன்னால் முடிகிறது?"

முல்லா புத்தி சாதுரியமாக யோசித்தார்.

"அது ஒன்றும் பெரிய விடயமில்லை. கொஞ்சம் ஞானம் இருந்தால் சரி"

"ஞானமா அது இருக்கா இல்லையா என்பதை எப்படிக் கண்டு கொள்வது'

அதோ வானத்தில் 30 ஆயிரம் அடிக்கு மேலாக ஒரு தங்கப் பறவை பறக்கிறது. அது உனக்குத் தெரிந்தால் நீயும் ஞானமுள்ளவன் தான்."

இப்படி முல்லா சொல்லவும் திருடன் அவரைப் பிடித்துக் கொண்டே அண்ணாந்து பார்த்தான். ஒன்றும் தெரியவில்லை.

"பொய் சொல்கிறாய்... எனக்குத் தெரியவில்லையே."

"சாதாரணமாகப் பார்த்தால் உனக்குத் தெரியாது... உனது கழுத்தில் கத்தியை வைத்து நான் பிடித்துக் கொள்கிறேன் அப்போது தெரியும்!"

இப்படி முல்லா சொன்னதும், முல்லாவை நம்பி கத்தியையும், கழுத்தையும் கொடுக்க விரும்பாத திருடன் முல்லாவை விடுவித்து விட்டான்.

என்ன, கதை புரிகிறதா!

**✍ வாழ்க்கையில் வெற்றி பெற குறுக்கு வழியை நாடுபவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?**

*-ஜி.திவ்யா - மருதானை.*

மேலே உள்ள முல்லாவின் கதை உங்களுக்கும் பதிலாக இருக்கும் என்று நினைக்கிறேன் திவ்யா.

**சிந்தியா உங்களை அதிகம் பாதித்த ஒரு சம்பவம்.**

*எஸ்.நஸ்மியா - கபிலகஸ்தென்னை*

நம்பிக்கைத் துரோகங்கள்.

**✍ "வேட்டையாடு விளையாடு" பார்த்தேன். சமூக விரோதிகளுக்கு வழிகாட்டுமா அல்லது சட்டத்துறைக்கு வழிகாட்டுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். நீர் என்ன நினைக்கிறீர்?**

*-பா.பானுரதி - லிங்கநகர் -*

"காக்க காக்க" வேட்டையாடு விளையாடு" இரண்டு படங்களையும் இயக்கிய இயக்குநர் கௌதம் முன்னதில் மறைத்ததை இரண்டாவதில் மறைக்காமல் விட்டுவிட்டார் என்ற முகச்சுழிப்புகள் வெளிப்படுவதைக் காணமுடிகிறது.

**✍ சூர்யா - ஜோதிகா திருமணத்துக்கு நீர் நேரடியாகப் போய் வாழ்த்துவீர். நாங்கள் தபாலிலாவது வாழ்த்த உதவலாம் தானே!**

*-ச.ஜெயரூபன் - வத்தளை -*

ஓ... தாராளமாக.

சூர்யா - ஜோதிகா இருவருக்கும் தொடர்பு கொள்ள ஒரே இலக்கம் தான். 00919840048002 (இது அவர்களின் முகாமையாளர் துரையின் இலக்கம்) விலாசம்: சூர்யா, 15, krishna Street, T.Nagar, Chennai - 600017. சிவகுமாரின் விலாசம் : 7/15, Krishna Rao Street, T.Nagar, Chennai - 17.தொலைபேசி 009124340899. ஜோதிகாவின் விலாசம் : 04, Komal Villa, 48, R.A.Puram, Chennai - 28, இந்த உதவி போதுமா? இன்னும் கொஞ்சம் வேணுமா?

**✍ எரிபொருள் விலை இப்படி ஏட்டிக்குப் போட்டியாக எகிறிக் கொண்டிருக்கே, இது எதில் போய் முடியும்?**

*-சிதம்பரநாதன் - தில்லையடி-*

மாட்டு வண்டி, குதிரை வண்டி காலத்துக்குத் தான் என்று நான் மழுப்ப விரும்பவில்லை. நாட்டில் யுத்தம் இல்லாது போனால், அபிவிருத்தி இருக்கும். அப்போது பொருளாதார நெருக்கடி குறையும், விலை உயர்வுகளை எதிர்கொள்ளக் கூடிய வருமானம் ஈட்டக்கூடியதாக இருக்கும். நாம் அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் அன்றாடப் பிரச்சினையைப் போட்டுக் குழப்பிக் கொள்கிறோம்.



சூர்யா – ஜோதிகா
சில்லென்று ஒரு காதல்

**✍ அமெரிக்காவின் உளவுப் பிரிவுக்குத் தண்ணி காட்ட முடியுமா?**

*-கு.ஜெயந்தன் - பாண்டிருப்பு -*

எதை மனதில் வைத்துக் கொண்டு இப்படிக் கேட்கிறீர்கள் என்பது புரிகிறது. செப்டெம்பர் பதினொன்று சூர்யா - ஜோதிகா திருமணம் மட்டுமல்ல, அமெரிக்காவுக்கு ஒசாமா தண்ணி காட்டிய ஐந்தாவது ஆண்டு நிறைவும்தான் என்பதை மறந்து விடாதீர்கள்.

**✍ இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைப் புலிகள் கொலை செய்த சம்பவத்தை இந்தியர்கள் மறக்கவே மாட்டார்களா?!**

*-சி.கணகரெட்னம் - வவுனியா -*

தமிழக காங்கிரஸ் தலைவர் கிருஸ்ணசாமி அவர்கள் அங்கு ஒரு சஞ்சிகைக்கு வழங்கிய நீண்ட நேர்காணலின் போது "ராஜீவ் படுகொலை சம்பவத்தை மட்டுமே ஈழப் பிரச்சினையில் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா?" என்று அவரிடம் இறுதியாகக் கேட்கப்பட்டதற்கு, "தலைவர் ராஜீவ் காந்தி இலங்கை தமிழர்களுக்காகப் பல உதவிகளைச் செய்தவர். இலங்கையில் அமைதி திரும்பப் பெரும் முயற்சி எடுத்தவர். இலங்கைப் பிரச்சினை சீர் கெட்டதற்குப் புலிகளே காரணம். இந்தப் பிரச்சினை வரும்போதெல்லாம் ராஜீவ் காந்தியின் அழகான முகமும், அவரது அயராத உழைப்பும் தான் எங்கள் ஞாபகத்துக்கு வருகிறது. நெஞ்சில் நீங்காமல் நிலைத்திருக்கிறது" என்று கூறியிருக்கும் இவர், இன்னொரு இடத்தில்.

"சகோதர குழுக்களையே ஈவு இரக்கமின்றி கொன்று குவித்த புலிகளுக்கு ஆதரவாக யார் பேசினாலும் சகித்துக்கொள்ள முடியாது. இந்தியா அகிம்சை வழியில் சுதந்திரம் பெற்ற நாடு. வெடி குண்டுகளால் இலங்கையில் அமைதி திரும்பாது. பேச்சுவார்த்தைகள் மட்டுமே தீர்வாக இருக்கும்" என்றும் கூறியிருக்கின்றார். இப்படித்தானே ஒவ்வொரு இந்தியனுக்கும் இருக்க முடியும்.

**✍ சிந்தியா சிரிக்கத் தெரிந்த மிருகம் எது?**


*-கே.தர்ஷினி - திருமலை -*

நேரடியாகச் சொன்னால் நன்றாக இருக்காது. அதுக்கு ரெண்டு கால் இருக்கும். ரெண்டு கை இருக்கும். முடி நரைக்கும், சிரித்துக் கொண்டே பொய் சொல்லவும், பொய்யாக அழவும் தெரியும். போட்டி, பொறாமை இப்படி எல்லா பாசாங்குத் தனமும் அதுக்குத் தெரியும்.

என்ன தர்ஷினி விடை தெரிந்தால் அடுத்த வாரம் எழுதி அனுப்புங்களேன்.

# ஆறாண்டு நினைவில்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 13 | | 12 |
| 03 | | 09 |
| 1951 | | 2000 |



அமரர்

## பி. அரியதாசன் J.P.

(அரசாங்க ஒப்பந்தகாரர் ICTAD, உரிமையாளர்: ரஞ்சனாஸ், மன்னார்.)

"பிதா என்னில் அன்பாயிருக்கிறது போல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்" (யோவான் - 15:9)

குடும்பத்தின் குலவிளக்காய்
அன்பின் இருப்பிடமாய்
சமூகத்தின் அறிவொளியாய்
அனைவரும் போற்றும் உத்தமனாய்
பாரினில் வாழ்ந்து வழிகாட்டிய தெய்வமே
தாங்கள் இறையடி சேர்ந்து ஆறாண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்மைவிட்டு நீங்காது.

என்றும் நினைவுடன் மனைவி : மலர்,
பிள்ளைகள் : விமல், ரஞ்சனா, உறவினர்கள், நண்பர்கள்

தொ.பே : 023 - 2232434, 077 - 9781776

## புகைப்படம்...

*06 ஆம் பக்கத் தொடர்ச்சி....*

புகைப்படங்கள் பொதுவாகவே சம்பவங்களின் கண்ணாடியாகவே இருக்கின்றன. சந்திரனில் மனிதன் காலடி வைத்ததையும், செவ்வாய்க் கிரகத்தில் மனிதன் ஆய்வு விண்கலத்தை இறக்கியதையும், பூமியில் வாழும் மனிதனுக்கு கதையாகச் சொல்லியிருந்தால் நம்பியிருக்கமாட்டான். அந்தச் சம்பவங்களை புகைப்படம் பிடித்துக் காட்டிய போதுதான் நம்பினான். எனது திருமணம் இப்படித்தான் நடந்தது என்று நானே சொன்னால் கூட யார் நம்புகிறார்கள். அதை நிரூபிக்க ஒரு புகைப்படம் தேவைப்படுகிறது. காதல் வயப்பட்டுள்ள ஒருவனோ, ஒருத்தியோ தனது விருப்பத் துக்குரியவரின் புகைப்படத்தை மிகக் கவனமாக வைத்திருப்பார்கள். ஆனால், கல்யாணத்துக்குப் பிறகு கல்யாணப் புகைப்படத்தை எத்தனைபேர் அவ்வளவு பாதுகாப்போடு வைத்துக் கொள்கிறார்கள்? எதுவுமே நம்மை விட்டு அப்பால் நடக்கின்றபோது அல்லது நமக்குக் கிடைக்குமோ என்று சந்தேகத்துக்கிடமாக இருக்கும்போதுதான் அதன் மீது அதிக விருப்பம் உண்டாகிறது. சதா அதைப்பற்றிய நினைவும், புகைப்படத்தின் தேவையும், குறிப்பிட்ட விஷயம் நமக்குச் சாதகமாக அமைந்துவிட்டால் அல்லது நமக்குரியதாக ஆன பிறகு, மிகவும் வசதியாக அதை உதாசீனப்படுத்தி விடுகிறோம். புகைப்படங்கள் எதற்கு, சில ஆண்களுக்கு தங்கள் திருமண நாளே ஞாபகத்தில் இருப்பதில்லை. மனைவிகள் தான் இயலாமையோடு ஞாபகப்படுத்த வேண்டும். இதை ஆண்களை நோகடிக்கச் சொல்லவில்லை. அவ்வாறான கணவரில் நானும் ஒருவன் என்ற உரிமையில்தான் சொல்கிறேன்.

குழந்தைக்கால என் தோற்றத்தைப் புகைப்படத்தில் பார்க்க ஒரு புகைப்படம் இல்லையே என்ற என் வேதனை இயற்கையின் பரிசீலனையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது போலும்.

ஆகையால்தான் என்னையே குழந்தையாகத் திரும்பவும் இந்தப் பூமியில் அனுப்பியிருக்கிறான் இறைவன். இப்போதெல்லாம் நானே என்னை குழந்தையாகப் பார்க்கிறேன். எப்படிச் சாத்தியம் என்று யோசிக்க வேண்டாம். என் மகனைச் சொல்கிறேன். மகன், அப்பாவை அப்படியே உரிச்சு வச்சுப் பிறந்திருக்கான் என்று உறவுக்காரர்கள் கொஞ்சும் போது என்னால் சந்தோசப்பட முடியாது. ஏன் என்றால் என் மனைவியிடம் கொஞ்சமாவது அவனில் சாயல் இருந்திருக்கலாம் என்ற அன்பு மிகுதியில் என்னவளின் முகம் லேசாய் கோபம் காட்டும்.

ஆகவே அப்பாக்கள், தயவு செய்து உங்கள் அப்பாக்கள் செய்த தவறைச் செய்யாதீர்கள். உங்கள் பிள்ளையின் ஒவ்வொரு வளர்ச்சியின் போதும் அதைப் புகைப்படமாகப் பதிவு செய்து வையுங்கள். திருப்பித்தர முடியாத கடந்த காலத்தை, புகைப்படங்கள் தான் காட்டுகின்றன. புகைப்படங்களைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கும் போது இன்னொரு புகைப்படம் என் கவனத்தை ஈர்த்தது. அதையும் உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

அந்தப் புகைப்படம் - 2006 ஆகஸ்ட் மாதத்தில் இஸ்ரேல் நாடு, லெபனான் நாட்டில் குண்டு மழை பொழிந்தது. கேட்பாரில்லை; கேட்டாலும் இஸ்ரேல் கேட்கத் தயாரில்லை என்றளவில் குண்டுத் தாக்குதல் நடந்தது. அந்தப் பொழுதில் லெபனானை விட்டு மக்கள் ஓடினார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் இறந்தார்கள். கட்டடங்கள், சொத்துக்கள் அழிந்தன. இதையெல்லாம் தாங்கிக் கொண்ட லெபனான் சிறுவர்கள் இஸ்ரேலுக்குக் கொடுத்த பதிலடி என்ன தெரியுமா? லெபனானிலிருந்து இஸ்ரேலை நோக்கி ஏவப்பட இருந்த 'ஷெல்' குண்டுகளில் "இது உங்களுக்கு எங்கள் பரிசு" என்று சிறுவர்கள் மனசு உடைந்து எழுதினார்கள். இஸ்ரேல் இராணுவத்தினர் லெபனான் மீது ஆயிரக்கணக்கான குண்டுகளை ஏவினார்கள்.



நிலவில் மனிதன்

அவர்களுக்கு இந்தச் சிறுவர்கள் எழுதிய ஒரு வரி, பெரும் தாக்கத்தைக் கொடுத்தது. குழந்தைகள் தெய்வப் பிறவிகள். அவர்களின் உணர்வுகள் கடபடமற்றவை.

இப்படி உலகத்தில் நடந்த பல ஆயிரம் முக்கிய நிகழ்ச்சிகளையும், நபர்களையும் பற்றி புகைப்படங்கள் உணர்த்தும் வரலாற்றுப் பதிவுகளை இந்தப் பகுதியில் முழுமையாகப் பதிந்து விட முடியாது. மிச்சத்தைப் பதிவு செய்வதையும், தேடுவதையும் உங்களிடமே விட்டுவிடுகிறேன். ஏன் என்றால் உங்களையும் சில புகைப்படங்கள் உலுக்கியிருக்கும், ஆயிரம் சாட்டைகள் கொண்டு தாக்கியிருக்கும், சிரிக்கச் செய்திருக்கும், அழச் செய்திருக்கும், வியக்க வைத்திருக்கும். அவற்றை நீங்களும் பதிவு செய்யுங்கள். நமக்கு அடுத்த சந்ததி நாம் வாழ்ந்த இலட்சணத்தைப் பார்க்கட்டும். எங்கள் தவறுக்காகத் திட்டட்டும். சரிகளுக்காகவும், சாதனைகளுக்காகவும் போற்றட்டும். தன் பிறவியை உணராமல் அர்த்தமற்ற வாழ்க்கையாகக் கழித்தவர்களை நினைத்து வெட்கித் தலைகுனியட்டும். நீங்கள் எப்படி உங்களைப் பதிவுசெய்கிறீர்கள். தூற்றும்படியாகவா? போற்றும்படியாகவா? இதை நீங்களே உங்களிடம் கேட்டுக் கொள்ளுங்கள்.



சிறுவர்களின் பரிசு

## பூட்டிய அறைக்குள்...

*09 ஆம் பக்கத் தொடர்ச்சி....*

ஒரு மாணவர், வெறும் கையோடு வந்தாலும், அவர் வந்து சில மணித்தியாலங்களில் சாரம், சட்டை, துவாய், உள்ளாடை, போர்வை என்பவற்றைக் கழுவிக் காயப்போடுவார். பின்னர் அவற்றை எடுத்துவிடுவார். இது ஒருபுறமிருக்க, சாப்பாடு வாங்கி வருவார் ஒருவர். சோடா வேண்டிக்கொண்டு ஒருவர் வருவார். இது வழமையாக நடைபெற்றதால் சந்தேகம் வலுப்பெற்றது. யாரோ ஒருவர் உள்ளே இருக்கவேண்டும், அவருக்கான பணிவிடைகள் ஓரிருவரால் செய்யப்படுகின்றன என்ற தகவல்கள் வெளியாகின. அதன் தொடர்ச்சியாக கடந்த மாதம் 18ஆம் திகதி படையினர் பல்கலைக்கழக வளாகத்தைச் சோதனையிட்டனர். அப்போது எல்லா மாணவர்களும், பேராசிரியர்களும் இருந்துள்ளனர். மாணவர் ஒன்றிய அலுவலகம் மட்டும் வெளியில் பூட்டுப்போட்டு பூட்டப்பட்ட நிலையில் இருந்துள்ளது. அதைத் திறந்து விடுங்கள். பார்க்க வேண்டுமென துணைவேந்தரிடம் கேட்கவும், பேராசியர்கள் முன்னிலையில் அறை திறக்கப்பட்டபோது, உள்ளே பகிரதன் ஒளிந்துகொண்டு இருந்துள்ளார். அவருக்கு தனியான கணினியும் படுக்கை வசதி என்று முழு ஏற்பாடும் காணப்பட்டது. அத்துடன் அவரது மேசையில் பினாமிப் பெயர்களிலான கடிதத் தலைப்புகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மாணவர் ஒன்றியத் தலைவர் பயந்தார் என்பதை நம்ப இயலவில்லை. சரி, அப்படித்தான் பயந்து ஒளிந்திருந்தால் உள்ளுக்குள் பூட்டியிருக்கலாம். மாறாக, அவரை உள்ளே விட்டு, வெளியில் பூட்டப்பட்டுள்ளது. அதுதவிர, அவரிடம் யாழ். மக்களின் இயல்பு வாழ்வையும், மாணவர்களின் கல்வியையும் சீர்குலைத்த அத்தனை பினாமி அமைப்புக்களினதும் கடிதத் தலைப்புகளும் இருந்திருக்கின்றன.

பேராசிரியர்களுக்கு, படைத்தரப்பிடம் எதுவும் கூறமுடியாத நிலையில் விசாரணைக்காக பகிரதனை படையினர் பிடித்துச் சென்றனர். அவரைப் பிடித்துச் சென்ற இரண்டு நாளில் மீண்டும் பல்கலைக்கழகம் வந்த படையினர், விரிவுரையாளர்களின் அறைக்குப் பின்னால் இருந்து பத்து மிதிவெடிகளையும், 5 கைக்குண்டுகளையும் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது. இது பகிரதனிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் பின்னர் நடந்ததால் மாணவர்கள் மத்தியில் பதற்றம் அதிகரிக்கத் தொடங்கியது.

புலிகளின் அழுத்தமும், கஜேந்திரனின் அழுத்தமும் புலிகள் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்படும் எவரையும் பிணையில் செல்ல வழி வகையை ஏற்படுத்தியுள்ளது. இதைப் புரிந்துகொண்ட படைத்தரப்பு பகிரதனிடம் நீண்ட விசாரணை நடத்த வேண்டியிருப்பதாலும் பகிரதன் வன்னிக்குள் ஓடி விடக்கூடாது என்பதாலும் பிணையில் விடுவித்துவிட முடியாதபடி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பசில் ராஜபக்ஷவிடம் விசேட கையெழுத்து வாங்கி 60 நாட்களுக்கு சிறைவைக்கக்கூடிய ஒரு ஏற்பாட்டைச் செய்து காங்கேசன்துறையில் பகிரதனை சிறையிலடைத்துள்ளனர்.

பகிரதன் போன்ற ஒரு சில மாணவர்கள் இவ்வாறு வன்முறைகளைச் செய்தவர்களாக இருந்த போதும், அநேகமான மாணவர்கள் இவற்றோடு சம்பந்தப்பட்டிருக்கவில்லை. அதற்காக அவர்கள் எதிர்கொண்ட நெருக்கடிகள் ஏராளமானவை. பகிரதன் விடயத்தைப் பார்க்கும்போது "சின்ன மீனைப் போட்டு பெரிய மீனைப் பிடிப்பது போல்" இங்கே பல்கலை மாணவர்கள் என்ற பெரிய மீனைப் போட்டு, பாடசாலை மாணவர்கள் என்னும் சின்ன மீனைப் புலிகள் பிடித்துள்ளனர்.

இந்த உண்மைகள் இனியாவது உணரப்படவேண்டும். கற்பிக்கும் ஆசிரியர்களும், பேராசிரியர்களும் என்றும் மதிப்புக்குரியவர்கள்தான். ஆகவே அழுத்தங்களுக்குப் பணிந்து உங்கள் புனிதத்தை தயவு செய்து தவறவிடாதீர்கள் என்பதும், மாணவர்களும் இனிமேலும் எவரது கபடத்தமான தூண்டுதலுக்கும் எடுபட்டுப் போகாமல் கல்வியில் கவனம் செலுத்தி சமூகத்தின் மதிப்புக்குரியவர்களாக வளர்ந்து, அழிந்து போயுள்ள எம் மண்ணை வளப்படுத்தும் பங்காளியாக வளரவேண்டும் என்பதுமே பெற்றோர்களினதும், நம் சமூகம் மீதான அக்கறை கொண்டவர்களினதும் பேரவாவாகும்.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 6, கூட்டெண் - 9

6,15,24 போன்ற தேதியில் பிறந்து தேதி, மாதம், வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 9 வருமேயானால் இவர்கள் சுக்கிரன், செவ்வாய் ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

இவர்கள் பார்ப்பதற்குக் கம்பீரமாகவும் குறுகுறுப்பான நடவடிக்கையும் கொண்டவராக இருப்பர். 6 எண்கார்களிலே இவர்கள் மிகுந்த தைரியசாலி. எக்காரியத்திலும் துணிந்து இறங்கிவிடுவர். நாம் இவ்வுலகத்தில் போராடி வெற்றி வெறவே பிறந்துள்ளோம் எனக் கூறுவர். இவர்கள் பேரறிவும், பெரும் சூழ்ச்சியும் கொண்டவர்கள். காந்த சக்தி நிறைந்த கண்களை உடையவர்கள். எதையும் உன்னிப்பாகக் கவனிக்கும் ஆற்றல் உள்ளவர்கள்.

இவர்களது இலட்சியம் ஒரு உயர்ந்த இடத்தைப் பிடிக்கவேண்டும் என்பதுதான். வேதாந்தம் பேசும் இவர்கள் இவ்வுலகத்தை மாயை எனக் கூறினால், இவர்களுக்குக் கடுமையான கோபம் வரும். இந்த உலகிலே எத்தனையோ சுகங்கள் இருக்கின்றன. மாயை எனக் கூறுகிறார்களே என வருந்துவர். ஆனால் இவர்கள் நாத்திகர் அல்ல. எல்லா இன்பத்தையும் அனுபவிக்கவேண்டுமென்ற ஆசை கொண்டவர்கள். தன்னை உயர்த்திக் கொள்வதற்கு சளைக்காது போராடுவர். தாம் நினைத்ததை நடத்தி முடிக்க ஓடோடி உழைப்பர். எப்பொழுதும் நண்பர்கள் புடை சூழ வாழ்வர். இவர்களது வாழ்க்கை மற்றவர்களுக்கு விசித்திரமாக இருக்கும். நேற்று சாதாரணமாக இருந்தவர் இன்று விண்மீன் போன்று மின்னிக்கொண்டு இருப்பார்.

இவர்களது பிறந்த தேதி எண்களுக்குப் பெயர் பொருத்தமானதாக மாற்றி அமைத்துக் கொள்வது அவசியம். பெயர் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் படிப்படியாக வாழ்க்கையில் முன்னேறிக்கொண்டே வருவர். பொதுநலத் தொண்டு புரியும் இவர்கள், தன்னையும் உயர்த்திக் கொண்டே செல்வர். தன்னை உயர்த்திக் கொள்ளத் தெரியாதவன், பிறரை உயர்த்த தகுதியற்றவன் எனக் கூறுவர். இப்படிப்பட்ட இவர்களுக்கு வாழ்க்கை ஒரு சர்க்கஸாக தெரியும். இவ்வுலகம் ஓர் இன்பமயமானது. இதில் நாமெல்லாம் அனுபவிக்கப் பிறந்துள்ளோம் என வேதாந்தவாதிகளை எடுத்தெறிந்து பேசுவர்.

கடவுள் நம்பிக்கை கொண்ட இவர்கள் கோவிலுக்குப் போவதும் உண்டு. ஆனால் நம்பிக்கைதான் முக்கியம் எனக்கூறுவர். எவ்வளவு துன்பம் வந்தாலும், தைரியமாக எதிர்த்துப் போராடும் ஆற்றல் கொண்ட இவர்களுக்கு இளமையிலேயே பெயர் நன்றாக அமைந்துவிட்டால் பெரும் செல்வந்தராக போராடிக் கொண்டேயிருப்பர்.

இவர்களுக்கு ஊர்சுற்றிப் பார்ப்பதில் மிகுந்த ஆர்வம் உண்டு. பொருளீட்டுவதற்கான வாய்ப்புகள் இருந்தால் அதைப் பற்றி ஆராய்ந்து எப்படி இந்தத் தொழிலைச் செய்வது எனத் திட்டம் தீட்டிக்கொண்டிருப்பர். பலருக்கு பொதுவாக இந்த எண்ணிக்கைக்காரர்களுக்குப் பொருத்தமான பெயர் அமைந்துவிட்டால், உத்தியோகத்திலும், தொழிலும் உயர்ந்த நிலையை அடைவர். இதனால் இவர்கள் பெயரை தனது பிறந்த தேதி எண்களுக்குப் பொருத்தமானதாக மாற்றி அமைத்துக் கொள்வது அவசியம். பெயர் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் நல்ல ஆரோக்கியம், நல்ல வாழ்க்கைத்துணை, நல்ல குழந்தைகள், நிறைந்த செல்வம் பெற்று சிறப்பாக வாழ்வர்.

**தொழில்:**

காண்ட்ராக்ட், கமிஷன், ஏஜென்ஸீஸ், அழகு சாதனங்கள், ஆடம்பரப் பொருட்கள், வாகன சம்பந்தமான தொழில் போன்றவற்றால் லாபம் பெறுவர்.

**நோய்:**

ரத்தக்கொதிப்பு, மூலநோய், மூட்டுவலி, உஷ்ண சம்பந்தமான அனைத்து நோய்களும், உடலுறவு சம்பந்தமான நோய்களும் வந்து நீங்கும்.

பெயர் அமைக்கும் முறை

சுக்கிரன், செவ்வாய் ஆதிக்கத்தில் பிறந்த இவர்களுக்கு இதே ஆதிக்கமான 15,24,33,42,51,60, 69,27,36,45 போன்ற எண்களில் பெயர் அமைக்கலாம்.

**பின்பற்ற வேண்டியவை.:**

யோகமான எண்- 6,9.
யோகமான தேதிகள்- 6,15,24,9,18,27,5,14,23.
யோகமான நிறம் -வெளிர் பச்சை, சிவப்பு, வெளிர் நீலம்.
யோகமான மோதிரக்கல்- மரகதம், பவளம்.
ஆகாத தேதிகள் - 3,12,21,30.
ஆகாத நிறம் - ரோஸ், ஆரஞ்சு, கத்தரிப்பூ நிறம்.

அடுத்த வாரம் பிறப்பெண் 7, கூட்டெண் 1 பற்றிப் பார்ப்போம்.

# ரெனே டேக்கார்ட்டே (- 1596 - 1650 நூற்றாண்டு)

## உலகை வியக்க வைத்தவர்கள்

*(சென்ற வாரத் தொடர்ச்சி...)*

**டே**க்கார்ட்டே 1641 ஆம் ஆண்டு "தியானங்கள்" (Meditation) என்ற தமது புகழ்பெற்ற நூலை வெளியிட்டார். இவருடைய "தத்துவ விதிகள்" (Principles of Philosophy) என்ற நூல் 1644ஆம் ஆண்டில் வெளியாயிற்று. இவ்விரு மூல நூல்களும் லத்தின் மொழியில் எழுதப்பட்டன. இவற்றின் ஃபிரெஞ்சு மொழிபெயர்ப்புகள் 1647ஆம் ஆண்டில் வெளியாயின.

டேக்கார்ட்டே ஒரு பண்பட்ட எழுத்தாளர். அவருடைய உரைநடை கவர்ச்சிகரமாக இருந்தது. எனினும், இவரது எழுத்துக்களின் "தொனி" (Tone) எதிர்பாராத வகையில் பழைய பாணியில் அமைந்திருந்தது. உண்மையைக் கூறின் (ஒருவேளை தமது பகுத்தறிவு அணுகுமுறையின் காரணமாகவோ என்னவோ) ஒரு மத்திய காலத்துப் புலவரின் செறுக்கு மிகுந்த முழக்கத்தைப் போல் அது தொனிக்கிறது. ஃபிரான்சிஸ் பேக்கனுடன் இவரை ஒப்பிடும் போது, பேக்கன் இவருக்கு 35 ஆண்டுகளுக்கு முன்பு பிறந்தவராயினும், பேக்கனின் எழுத்துகள் நவீன தொனியுடன் திகழ்கின்றன.

டேக்கார்ட்டே தீவிரக் கடவுள் பற்றுமிக்கவராக இருந்தார் என்பது அவருடைய எழுத்துகளிலிருந்தே தெளிவாகத் தெரிகிறது. இவர் தம்மை ஒரு சிறந்த கத்தோலிக்கராகக் கருதினார். எனினும், திருச்சபை அதிகாரிகள் இவரை வெறுத்தனர். இவருடைய நூல்கள், கத்தோலிக்கத் திருச்சபையினரால் தடை செய்யப்பட்டிருந்த நூல்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டன. அக்காலத்தில், ஐரோப்பாவிலேயே சமயச் சகிப்புணர்வு மிகுந்த நாடாகக் கருதப்பட்ட புரோட்டஸ்டான்டு ஹாலந்தில் கூட, டேக்கார்ட்டே நாத்திகர் என்ற குற்றச்சாட்டுக்குள்ளாகி அதிகாரிகளிடம் பல தொல்லைகளை அனுபவித்தார்.

1649ஆம் ஆண்டில் ஸ்வீடன் அரசியார் கிறிஸ்டினா, டேக்கார்ட்டேக்கு தாராளமாக நிதியுதவி வழங்கி, ஸ்டாக்ஹோமுக்கு வந்து தமக்கு ஆசிரியராக இருக்கும்படி கேட்டுக் கொண்டார்.

டேக்கார்ட்டே வெதுவெதுப்பான அறைகளை விரும்பினார். காலையில் நெடுநேரம் வரை உறங்குவதில் மகிழ்ச்சி கொண்டார். அரசியார் தமக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க இவரை அதிகாலை ஐந்து மணிக்கே அழைத்தது இவருக்குக் கவலையளித்தது. அதிகாலைக் குளிர்காற்று தம்மைக் கொன்றுவிடும் என்று இவர் அஞ்சினார். இவருடைய அச்சம் உண்மையாயிற்று விரைவிலேயே இவருக்கு சீத சன்னி (Pneumonia) கண்டது. ஸ்வீடனுக்கு வந்த நான்கே மாதங்களில் 1650ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் இவர் காலமானார்.

டேக்கார்ட்டே திருமணம் செய்துகொள்ளவில்லை. எனினும், அவருக்கு ஒரு குழந்தை - ஒரு மகள் இருந்தாள். ஆனால், இந்த மகள் இளமையிலேயே இறந்து விட்டாள்.

டேக்கார்ட்டேயின் தத்துவத்தை அவருடைய சமகாலத்தவர் பலரும் வன்மையாகக் கண்டித்தனர். இவருடைய தத்துவம் சுற்றுவழிப் பகுப்பாய்வாக இருந்தது இதற்கு ஒரு காரணமாகும். பிற்காலத் தத்துவஞானிகள் பலர் இவருடைய முறையில் பல குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினர். இன்று இவருடைய முறையை முழுமனதுடன் ஆதரிப்பவர்கள் மிகச் சிலரே உண்டு. ஆனால், ஒரு தத்துவஞானியின் முக்கியத்துவம், அவருடைய முறையின் துல்லியத்தை மட்டும் பொறுத்தது அன்று. மாறாக, அவரது கருத்துக்கள் - அல்லது அவரது எழுத்துகளிலிருந்து மற்றவர்கள் எடுத்துக் கொள்ளும் கருத்துக்கள் - பெருமளவுச் செல்வாக்குப் பெற்றுள்ளதா என்பதையே பொறுத்திருக்கிறது. அந்த அடிப்படையில் பார்த்தால், டேக்கார்ட்டே ஒரு முக்கியமான மனிதனாக விளங்கினார் என்பதில் ஐயத்திற்கிடமில்லை.

டேக்கார்ட்டேயின் கருத்துக்களில் குறைந்தது ஐந்து கருத்துக்கள் ஐந்து கருத்துக்கள் ஐரோப்பியர் சிந்தனையில் முக்கியமாகப் பாதிப்பை ஏற்படுத்தின. அவையாவன:

1. உலகம் பற்றிய அவரது எந்திர முறைக் கண்ணோட்டம்
2.அறிவியலர் ஆராய்ச்சிகள் குறித்த அவரது ஆகக்குறைவான அணுகுமுறை
3.அறிவியலில் கணிதத்தைப் பயன்படுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியது
4. தொடக்க நிலை ஐயுறவை அவர் ஆதரித்தது
5.அறிவியல் ஆதார முறையில் அவர் கவனத்தை ஒரு முகப்படுத்தியது.

டேக்கார்ட்டேயின் ஒட்டுமொத்த முக்கியத்துவத்தை மதிப்பிடுங்கால், குறிப்பிடத்தக்க, அவருடைய அறிவியல் சாதனைகளையும், முக்கியமாக பகுப்பாய்வு வடிவ கணிதத்தை அவர் கண்டுபிடித்ததை - கவனத்தில் எடுத்துக் கொண்டிருக்கிறேன். இந்தக் காரணமே, வால்ட்டேர், ரூசோ, பிரான்சிஸ் பேக்கன் போன்ற உயர்ந்த தத்துவஞானிகளுக்கு வெகுவாக முற்பட்டு இவருக்கு இடமளிக்க என்னைத் தூண்டியது.

**அடுத்த வாரம்**
**சைமன் பொலீவார்**
**வியக்க வைப்பார்....**

# காதிலை பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



> நான் சொல்வ தெல்லாம் பொய்.
> பொய்யைத் தவிர
> வேறொன்றுமில்லை
> *-காதில பூ கந்தசாமி-*

வணக்கமுங்கோ!

"நீங்கள் என்ன வன்னியிலதான் இருக்கிறியளோ, இல்லாட்டில் எங்கையும் கண்காணாத தேசத்தில இருந்து கொண்டு தொடர்பை வன்னிக்குக் குடுத்து வச்சிருக்கியளோ எண்டு இளந்திரையனுக்கு ரெலிபோன் எடுத்துக் கேட்டனுங்கோ. அதுக்குப் பிறகு என்ன நடந்தது தெரியுமோ.

**இள** :- வணக்கம்...நான் இளந்திரையன்... தமிழீழத்திலிருந்து பேசுகிறேன்...

எண்டு ஒரு ரெக்கோடிங்க் மெஸேஜ் வந்து போட்டு தொடர்பு துண்டிக்கப்பட்டிட்டுதுங்கோ. விடுவனோ? திரும்பவும் சுழற்றினன். அப்பவும் அதே மெஸேஜ் தான் கேட்டது...எங்க துண்டிக்கப் பட்டிடுமோ எண்டு யோசிக்கிறன்.

**இள.** :- ஓம்...சொல்லுங்கோ. யார் கதைக்கிறியள்?

***கா.பூ.*** :- ஓம்...தம்பி, அது நான் கா.பூ... கா.பூ...

**இள.** :- ஆ... யாரது...கா.பூ...சீப்பூ எண்டு... யாருக்கு எடுத்தியள்?

***கா.பூ.*** :- சீப்பூ...இல்லை தம்பி...நான் கா.பூ... உங்களோட தான் கதைக்க வேணுமெண்டு எடுத்தனான்.

**இள.** :- அடடா...காதில பூவரே... சொல்லுங்கோ... என்ன சொல்லுது நாட்டு நிலைமை...?

***கா.பூ.*** :- ஏன் தம்பி, உங்களுக்கு தொடர்பு எடுக்கிறதெண்டால் ரொம்பவும் கஷ்டமாக இருக்கே...

**இள.** :- ஓ...அதுவே...நீங்கள் வலிந்து தொடர்புகொள்ள முயற்சிக்கும்போது அப்புடித் தான் இருக்கும்...பிறகு ஒரு ரெக்கோடிங் மெஸேஜ் வரும்.

***கா.பூ.*** :- ஓம்...தம்பி. அதுசரி, அது என்ன ரெக்கோடிங்?

**இள.** :- ஒரே வசனத்தை திரும்பத்திரும்பச் சொல்லுறது போரியல் ரீதியாக பின் வாங்கச் செய்து போடும்.

***கா.பூ.*** :- சரி, அதெல்லாம் ஒரு பக்கமிருக்கட்டும்... நீங்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறிட்டியளோ இல்லாட்டில் இன்னும் மதிக்கிறியளோ.

**இள.** :- மதிக்கிறம் எண்டது மீறிட்டதாக இருக்க முடியாது. மீறிட்டம் எண்டதை மதிக்கிறதாக நினைக்க முடியாது. உதில புறச் சூழல் என்ன வடிவத்தில களத்தைக் கொண்டிருககெண்டதை நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

***கா.பூ.*** :- ஐயோ தம்பி, உப்பிடியெல்லாம் கதைச்சு என்னைக் குழப்பாதேங்கோ.

**இள.** :- இதில் குழப்பத்துக்கு ஏதும் இடமில்லையே!

***கா.பூ.*** :- சரி, அதை விடுங்கோ. மாவிலாறில உங்கட பகுதிக்குள்ள ஒரு அங்குலம் முன்னேறினாலும் அடிப்பம் எண்ட கணக்காச் சொன்னியள். பிறகு பார்த்தால் தண்ணியையுமெல்லோ திறந்து விட்டுப்போட்டு ஓடிட்டியள்.

**இள** :- முதலில அப்புடிச் சொன்னது உண்மைதான். ஆனால், பிறகு சிங்களப் படைகள் யுத்த நிறுத்தத்தை மீறியுள்ளன என்றும், எங்களது பகுதிகளை ஆக்கிரமித்துள்ளன என்றும் சொன்னோமே, அதை நீங்கள் கேட்கவில்லைப் போல.

***கா.பூ.*** :- ஆமியின்ர ஆக்கிரமிப்பா? உங்கட பின் வாங்கலா? எது சரி?

**இள** :- ஆக்கிரமிப்பு என்று பார்த்தால் பின் வாங்கல்; பின் வாங்கல் எண்டு பார்த்தால் ஆக்கிரமிப்பு. மொத்தத்தில சிங்கள அரசு இந்த ஒப்பந்தத்தை மீறியிருக்கு விளங்குதோ!

***கா.பூ.*** :- ரொம்பக் குழப்புறியள் அது கிடக்கட்டும். யாழ்ப்பாணத்தை மூன்று நாளில பிடிப்பம் எண்டியள் கடைசியில அதிலையும் வாக்குறுதி பிழைச்சுப்போன மாதிரியெல்லோ தெரியுது.

**இள** :- அங்கு நடந்தது ஒரு போர் அல்லவே; அது ஒரு தற்காப்புத் தாக்குதல்தான். அதாவது சிங்களப் படைகள், எமது முன்னரங்கப் போராளிகள் மீது வலிந்த தாக்குதல்களை தொடத்திச்சினம் அதை எதிர்த்து எங்களது போராளிகள் ஒரு இறுக்கமான தாக்குதலை நடத்தினார்கள். அவ்வளவுதான்.

***கா.பூ.*** :- அப்புடியெண்டால் இன்னும் இந்த ஒப்பந்தத்தை நீங்கள் மீறவில்லை எண்டு நினைக்கலாமா...

**இள** :- அதிலென்ன சந்தேகம்.

***கா.பூ.*** :- அப்புடியெண்டால் நீங்கள்தான் படையினர் மீது முதலில தாக்கியதாகவும் தாம் நடத்திய எதிர்த் தாக்குதலில் நூற்றுக்கணக்கான புலிகள் கொல்லப்பட்டிருப்பதாகவும் இராணுவம் சொல்லுகிறதே.

**இள** :- இராணுவம் பொய் சொல்கிறது. எங்கள் தரப்பில் களமாடியவர்கள் வெறும் பதினாலு பேர்தான் தமது இன்னுயிரை எமது மண்ணுக்காகக் கொடுத்திருக்கிறார்கள்.

***கா.பூ.*** :- அப்புடியெண்டால் நீங்களும் உங்கள் தலைவரும் இன்னும் ஏன் நமது மண்ணுக்காகக் களமாடி உங்கள் இன்னுயிர்களைக் கொடுக்கவில்லை?

**இள** :- பலி கொடுக்கப் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கட்டளை பிறப்பிப்பது எமது கடமையல்லவா...

***கா.பூ.*** :- அதிருக்கட்டும். அதென்ன ஒவ்வொரு சண்டையிலையும் குறிப்பிட்ட எண்ணிக்கையை இறந்தவர்களின் கணக்கில் சொல்லுகிறீர்கள். பிறகு, அந்த எண்ணிக்கையையே ஒரு மாதத்துக்குச் சொல்கிறீர்களே...ஆனால் சண்டையும், இழப்பும் நாளுக்கு நாள் கூடிக் கொண்டுதானே வருகுது?

**இள** :- இழப்புக்களின் எண்ணிக்கை கூடலாம் குறையலாம். என்னைப் பொறுத்தவரை சொன்ன வார்த்தையை மாற்றிப் பேசத் தெரியாது. அப்படி சந்தர்ப்பத்துக்கு ஏற்ப வார்த்தையை மாற்றிப் பேசுவது தவறில்லையா...!

***கா.பூ.*** :- சா...சா...வார்த்தையை ரொம்பவும்தான் மதிச்சுப் பேசிறியள். உதையே தொடருங்கோ. எல்லாம் அடுத்த உங்கட மாவீரர் பட்டியலின்ர விபரத்தில வெளியாகும் தானே! அப்ப பார்க்கலாம். ஓ.கே..பாய்...பாய்...

**யாவும் கலப்படமற்ற கற்பனை**


# இந்த வாரம் உங்கள் பலன்

**(07.09.2006 தொடங்கி 13.09.2006 வரை)**

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை


சிங்கம் - சூரியன், புதன், வெள்ளி. கன்னி - செவ்வாய், கேது. துலாம் - வியாழன். மீனம் - இராகு. கர்க்கடகம் - சனி. சந்திரன் கும்பம், மீனம், மேடம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.




**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நிலை பயம், மறைமுக எதிர்ப்பு, பணவிரயம், உயர்ந்தோர் நட்பு, பயணங்கள் அனுகூலம், மனக்குறை நீங்கும், குடும்பப் பொறுப்பு, உத்தியோக உயர்ச்சி, பதவி மாற்றம், மாணவர் கல்விக் குழப்பம், சோம்பல், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**



**இடபம்** : (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் நன்மை, காரியானுகூலம், உயர்ந்த எண்ணம், பெரியோர் நட்பு, தேகசுகக் கஷ்டம், குடும்பப் பற்று, மனக்குறை நீங்கும், உத்தியோக மகிழ்ச்சி, பதவி உயர்ச்சி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**



**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் மாற்றம், செலவதிகம், வெளியிடப் பயணம், பொருள் வரவு, அந்நியர் நட்பு, கௌரவம், எதிர்பாராத் தொல்லை, உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**



**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங் கால், பூசம், ஆயிலியம்.) தொழில் கலக்கம், செலவு மிகுதி, பெரியோர் பகை, வீண்குறை கேட்டல், வெளியிட வாழ்க்கை, குடும்ப நன்மை, உத்தியோக பயம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**




**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற் கால்.) தொழில் நன்மை, பணவரவு, மனமகிழ்ச்சி, உயர்ந்தோர் நட்பு, உறவினர் உபத்திரவம், இனசனப் பகை, குடும்ப மேன்மை, உத்தியோக அலைச்சல், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 5.**




**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் உயர்ச்சி, புதிய முயற்சி, பணச் செலவு, எதிர்பாரா பயணம், துயர் நீங்கும், குடும்ப சகாயம், சுபகாரிய மகிழ்ச்சி, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**




**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் மேன்மை, பெரியோர் நட்பு, மனக்குறை நீங்கும், பண வரவு, வெளியிட வாழ்க்கை, பலவிதப்பேறு, குடும்பச் சிக்கல், சுபகாரியத் தடை, உத்தியோக மந்தம், மேலதிகாரிகள் சீற்றம், மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**




**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் பகை, செலவு மிகுதி, புதிய முயற்சி, அந்நியர் உதவி, பிரயாணக் கஷ்டம், தேகசுகக் குறைவு, வைத்தியச் செலவு, குடும்ப நன்மை, உத்தியோக அலைச்சல், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 03.**




**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் சிறப்பு, பண வரவு, மனமகிழ்ச்சி, வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு, பயனுள்ள செயல், புதிய எண்ணம், குடும்ப மேன்மை, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், சோம்பல் தன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**



**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் கலக்கம், பணியாளர் பகை, மனக்குறையதிகம், செலவு மிகுதி, குடும்பத் தொல்லை, பிள்ளைகளால் கஷ்டம், உத்தியோகப் பகை, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**



**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், மனக்குறை நீங்கும், புதிய முயற்சி, எதிர்பாரா செலவு, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகப் பேறு, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**



**மீனம்** : (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் மாற்றம், பணச் செலவு, கடன் படல், வெளியார் உதவி, தூர இடப் பயணம், பொருள் விரயம், குடும்பப் பாரம், உத்தியோகப்பேறு, மாணவர் கல்விக் கஷ்டம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**





கவுகாத்தி வனவிலங்குப் பூங்காவில் உள்ள 50 கிலோகிராம் எடை கொண்ட ஆமை.




**நம்** ஊர் பூனையைப் போல் இந்த வெள்ளைப் புலியும் தன் குட்டியை எவ்வளவு லாவகமாகத் தன் வாயால் கவ்விக்கொண்டு பாதுகாப்பான இடத்திற்கு எடுத்துச் செல்கிறது பாருங்கள். தாய்ப்பாசத்தைப் பொறுத்தவரை உயிரினங்கள் எல்லாவற்றிலும் ஒத்த உணர்வுகள் இருப்பது வியப்பளிக்கிறது. கொல்லும் புலி என்றாலும் அதன் தாய்மை உணர்வுக்குத் தலைவணங்குவோம்!




ஓணம் பண்டிகையை ஒட்டி கொச்சினில் நடைபெற்ற கதகளி ஆட்டம்.




சீனாவில் பெண்கள் பாஸ்ட் பிட்ச் சாம்பியன் ஷிப் போட்டியின் தொடக்க விழா நிகழ்ச்சி.



உலகின் மிக வயதான பெண்மணி என்று கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற்ற ஈகு வடோர் நாட்டைச் சேர்ந்த மரியாஎஸ்தர் என்ற பெண் தனது 116 ஆவது வயதில் காலமானார்.




கொழும்பு தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் துப்பாக்கி சுடுதலில் மூன்று தங்கம் மற்றும் ஒரு வெள்ளி பதக்கம் வென்ற இந்திய வீராங்கனை மீனா.

தேசிய லொத்தர் சபை
நாட்டில் கோடீஸ்வரர்களை உருவாக்குகிறது.

**கொவிசெத லொத்தரின் அடுத்த**
**கோடீஸ்வரரா நீங்களா ?**

**கோடீஸ்வரராகுங்கள், மென்மேலும் கொவிசெத டிக்கெட்டுகளை வாங்குங்கள்!**



**கொவிசெத**

இலங்கையரின் அபிமானத்திற்குரிய
மகத்தான லொத்தர்

**தேசிய லொத்தர் சபை**
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663, 2433631 இணையதளம் www.nlb.lk